# உதயன்

www.onlineuthayan.com

30: பக்கங்கள் சுடர் 27 கதிர் 259 வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 27 சனிக்கிழமை (11/08/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 25.00





## டெல்றொக்ஷனின் உடலுக்கு உணர்வுபூர்வ அஞ்சலி



யாழ்ப்பாணம், ஒக.11

மோசமாகத் தாக்கப்பட்டமையால் கோமா நிலையில் சிகிச்சைக்காக ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவேளை உயிரிழந்த தமிழ் அரசியல் கைதியான மரியதாஸ் டெல்றொக்ஷனின் உடல் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டது. பாஷையூரில் உள்ள இல்லத்

பார்க்க பக்கம் 4

## இறுதிச்சடங்கு இன்று; அதிலும் பொலிஸ் தலையீடு

யாழ்ப்பாணம், ஒக. 11

உயிரிழந்த தமிழ் அரசியல் கைதி டெல்றொக்ஷனின் இறுதிச் சடங்கை நேற்றைய தினமே நடத்துமாறு யாழ். பொலிஸார் நிர்ப்பந்தித்த போதும் இதற்கு எதிராக சட்டத்தரணிகள் நகர்த்தல் பத்திரம் சமர்ப்பித்து வாதாடியதை அடுத்து இறுதிச்சடங்கை அரசியல் மயப்படுத்தாமல் இன்று சனிக்கிழமை நடத்த பலத்த வாதப் போராட்டத்தின் பின்னர் யாழ். நீதிமன்றம் நேற்று அனுமதித்தது.

உயிரிழந்த அரசியல் கைதியின் சடலம் நேற்றுக் காலை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டது. நேற்று முன்தினம் வியாழக்கிழமை சடலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படும் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டமையால்

பார்க்க பக்கம் 4

# டெசோவுக்கு அனுமதி மறுத்தது தமிழக அரசு

## 'ஈழம்' என்ற பதத்தைப் பயன்படுத்தவும் மத்திய அரசு தடை

சென்னை, ஒக 11

தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் சென்னையில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த தமிழீழ ஆதரவாளர் அமைப்பின் [டெசோ] மாநாட்டுக்கு அனுமதி வழங்கப் போவதில்லை எனத் தமிழக அரசு அறிவித்துள்ளது. தமிழக அரசின் சார்பில் அரச வழக்கறிஞர் நவநீதகிருஷ்ணன் சென்னை உயர் நீதிமன்றத்தில் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அதேவேளை டெசோ மாநாட்டின் தலைப்பில் 'ஈழம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தக் கூடாது என்று இந்திய மத்திய அரசு தி.மு.கவுக்கு உத்தரவிட்டிருக்கிறது. இந்த எழுத்து மூல உத்தரவை இந்திய மத்திய வெளியுறவுத்துறையின் துணைச் செயலர் ஆர்.கே. நாக்பால், டெசோ மாநாட்டு அமைப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

டெசோ மாநாடு நடத்த அனுமதியளிக்கக் கூடாது என்றும், அந்த அமைப்புக்கு எதிராகத் தேசிய பாதுகாப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரி வழக்கறிஞர் எஸ்.பால சுப்பிரமணியன் என்பவர் தாக்கல் செய்த மனு, நீதிபதிகள் எலிப்பிதர்மராவ், வேணு

பார்க்க பக்கம் 4

## மு.கா. மீது விரைவில் விசாரணை

கொழும்பு, ஒக 11

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் பரப்புரைகளில், தேசியப் பிரச்சினை தொடர்பாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைக்கு முரணாகக் கருத்துகளை வெளியிட்டு வருவதாகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக் குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

இந்தத் தகவலை அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசின் ஒரு பங்காளிக் கட்சி. இருந்தாலும், அதன்

பார்க்க பக்கம் 4

**7** பயனாளிகளுக்கு வழங்குகின்ற நிவாரணப் பொருள்களின் தொகையை அதிகரித்துள்ளது உலக உணவுத் திட்டம்.

**9** உலக அதிசயங்களில் ஒன்றான சீனப் பெருஞ்சுவரையே ஆட்டிப் படைக்கும் கனமழை பெய்து வருகிறது.

**13** வடக்கில் போரால் விதவைகள் ஆக்கப்பட்ட பெண்களை பலவந்தமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தும் இராணுவமும் மற்றும் மதகுருமார்களும்.

**23** ஒலிம்பிக் அரங்கில் வீசியது புயல்; மீண்டும் முதலிடம் பிடித்து தங்கப் பதக்கத்தை வென்றார் ஜெமைக்கா வீரர் உசைன் போல்ட்

## கூட்டமைப்பு - தென்னாபிரிக்க குழு இரண்டாவது தடவையாகவும் பேச்சு

கொழும்பு, ஒக. 11

அமைதி முயற்சிகளுக்கு உதவும் நோக்கில் இலங்கை வந்துள்ள தென்னாபிரிக்க குழுவினர் நேற்று இரண்டாவது தடவையாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸையும் தென்னாபிரிக்கக் குழுவினர் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காண தமது உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்க தென்னாபிரிக்கக் குழுவினர் முன்வந்தனர் என்று, இந்தச் சந்திப்புக் குறித்து வெளிவிவகாரத் துறை அமைச்சு தெரிவித்தது.

பார்க்க பக்கம் 4

## திட்டமிட்டபடி மாநாடு

தி.மு.க. உறுதி



சென்னை, ஒக.11

டெசோ மாநாடு திட்டமிட்டபடி நடக்கும் என்றும், டெசோ மாநாட்டை நடத்துவதில் தி.மு.க. தலைவர் கருணாநிதி உறுதியாக உள்ளார் என்றும் டெசோ மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பார்க்க பக்கம் 4

## படகுடன் 211 இலங்கையர்கள் ஆஸி. கடற்படையினால் மீட்பு

கான்பரா,ஒக 11

புகலிடம் கோரும் 211 இலங்கையர்களை இந்தோனேஷியாவுக்கு அருகில் படகொன்றிலிருந்து ஆஸ்திரேலியக் கடற்படை மீட்டுள்ளதாக ஆஸ்திரேலிய அதிகாரிகள் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தனர்.

ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுக்கு வடக்கே இந்தோனேஷியக் கடற்பரப்பில் புதன்கிழமை இரவு படகொன்றில் இருந்தவர்களுக்கு உதவுவதற்கு ஆஸ்திரேலிய அதிகாரிகள் விரைந்து உதவினர். அந்தப் படகிலிருந்த 211 பேர் கடற்படைப் படகுகளுக்கு மாற்றப்பட்டனர்.

2007 ஆம் ஆண்டு தொழிற்கட்சி அரசு பதவிக்கு வந்த பின் தனியொரு படகில் ஆஸ்திரேலியாவுக்கு வந்த அதிகபட்ச எண்ணிக்கையான புகலிடக் கோரிக்கையாளர்கள் இவர்களாவர்.

ஆஸ்திரேலிய கடற்படையினரால் இந்தப் படகு மீட்கப்பட்டது என ஆஸ்திரேலி

பார்க்க பக்கம் 4

## நிமலரூபன், டெல்றொக்ஷன் சாவுகள்; ஐ.நா. சபையிடம் முறையிடத் தீர்மானம்

கொழும்பு, ஒக. 11

சிறைச்சாலை அதிகாரிகளின் கோரத் தாக்குதலுக்கிலக்காகி உயிரிழந்த தமிழ் அரசியல் கைதிகளான நிமலரூபன், டெல்றொக்ஷன் ஆகியோரின் மரணம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையிடம் முறைப்பாடு செய்வதற்கு மக்கள் கண்காணிப்புக்குழு தீர்மானித்துள்ளது.

கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தின் ஊடாக மேற்படி முறைப்பாட்டைச் செய்வதற்கு அந்தக் குழு முடிவெடுத்துள்ளது.

பார்க்க பக்கம் 4

## வவுனியாவில் கையெழுத்துப் போர்

வவுனியா,ஒக 11

வவுனியா சிறைச்சாலையில் கடந்த ஜூன் மாதம் இடம்பெற்ற அசம்பாவிதச் சம்பவத்தின் போது காயமடைந்த நிலையில் உயிரிழந்த கைதிகளின் சாவுகளுக்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும் என்ற கோரிக்கை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மனித உரிமை செயற்பாட்டு

பார்க்க பக்கம் 4

## 70 வயதான தமிழ் மூதாட்டியை நாடு கடத்தியது கனேடிய அரசு

மொன்றியல், ஒக 11

70 வயதான தமிழ் மூதாட்டி ஒருவர் கனடாவிலிருந்து இலங்கைக்கு நேற்றுமுன்தினம் நாடு கடத்தப்பட்டுள்ளார். அவரது குடும்ப அங்கத்தவர்கள் எவரும் இலங்கையில் இல்லாத நிலையிலும் அவர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தமிழரான குணபூசனி கந்தசாமி என்ற இந்த மூதாட்டி, நாடு கடத்தப்படும் மற்றொருவருடன் வியாழனன்று இரவு 10 மணிக்கு விமானமொன்றில் ஏற்றப்பட்டுள்ளார். இவர்களுடன் கனேடிய எல்லைச் சேவைகள் முகவரக அதிகாரியொருவரும், தாதியொருவரும் அனுப்பப்பட்டுள்ளனர்.

தமக்கு மோசமான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அந்த மூதாட்டியின் கனடாவில் உள்ள மகளும் பேர்த்தியும் தெரிவித்துள்ளனர். அவருக்கு அனுசரணை வழங்குவ

பார்க்க பக்கம் 4

## அமெரிக்கா, சீனா, இந்தியாவுடன் புவிசார் அரசியலில் இலங்கை

### அமெரிக்க இராஜதந்திரி கருத்து

கொழும்பு,ஒக 11

மூலோபாய ரீதியாக இலங்கை எப்போதுமே அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் இந்து சமுத்திரத்தின் தற்போதைய நிலைமைகள் இந்தியாவைக் கவலை கொள்ள வைத்துள்ளது என்றும் பேராசிரியர் பற்றிக் மெண்டிஸ் தெரிவித்துள்ளார். அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளுடன் இலங்கை புவிசார் அரசி

பார்க்க பக்கம் 4

## கூட்டமைப்பு வேட்பாளரின் வாகனம் மீது தாக்குதல்

மட்டக்களப்பு,ஒக 11

மட்டக்களப்பு கோயில் போரதீவு பகுதியில் கிழக்கு மாகாண சபையில் போட்டியிடும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரின் வாகனம் மீது

பார்க்க பக்கம் 4

## பௌத்தர்களிடமும் மகா சங்கத்திடமும்

# மன்னிப்புக் கோரினார் ஹக்கீம்



கொழும்பு,ஓக 11

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சில நாள்களுக்கு முன்னர் கிழக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்தின்போது வெளியிட்ட சர்ச்சைக்கு உரிய கருத்துத் தொடர்பாக மகா சங்கத்திடமும் ஜாதிக ஹெல உறுமய விடமும் மன்னிப்புக் கோரியுள்ளார். இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-

கல்முனை சாய்ந்தமருதுவில் அண்மையில் நான் கூறிய கருத்து, பௌத்த தலைவர்கள் மற்றும் ஜாதிக ஹெல உறுமய உட்பட பௌத்த குருமார் இடையே மிகவும் கடுமையான விசனத்தை தோற்றுவித்துள்ளது.

இழுத்தடிக்கும் முயற்சிகளில் ஈடுபடாமல், நான் இலங்கையில் உள்ள சகல பௌத்த மக்களிடமும் தயக்கம் ஏதும் இன்றி மன்னிப்புக் கேட்கின்றேன். நான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்ற வகையில் இதற்கு முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்கின்றேன். எனவே இந்த மன்னிப்பை ஏற்றுக் கொள்ளும்படி இலங்கை மகாசங்கத்திடம் விசேடமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

முஸ்லிம்களின் மனத் தாங்கல்கள் பற்றி நான் குறிப்பிட்டது குறித்த ஒரு இடத்தில் காணப்பட்ட உள்ளூர் விவகாரத்தோடு மட்டுப்படுத்திய பிரச்சினை பற்றியதாகும். ஆனால் துரதிர்ஷ்டவசமாகக் குறித்த பின்னணியிலிருந்து விலகிய எனது சொற்பிரயோகம், எமது மக்களின்பிரதானசமயமானபௌத்தத்தின் பாதுகாவலர்களான மகாசங்கத்தினர் பற்றி தரக்குறைவான கருத்துரைத்தது போன்று அமைந்துவிட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் என்ற வகையில் நான் எப்போதும் முஸ்லிம்கள் இலங்கை தேசத்தின் ஒன்றிணைந்த பகுதியினர் என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறேன். நாம் சிங்கள அரசர்கள் காலத்திலிருந்து சிங்கள மக்களின் அரவணைப்பையும் தாராள மனப்பான்மையையும் அனுபவித்துள்ளோம்.

போர்த்துக்கேய ஆக்கிரமிப்பாளர்களால் துன்புறுத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு ஆதரவு வழங்கிய செனரத் அரசனின் காலத்திலிருந்து சிங்கள பௌத்தர்கள் கடைப்பிடித்துவரும் பன்மைவாதக் கொள்கையைப் பற்றி சில மாதங்களின் முன் சர்வதேச தாராண்மை கவுன்ஸிலில் பேசியபோது நான் எடுத்துரைத்தேன்.

பௌத்தர்களுடனும் ஏனைய சமயத்தவர்களுடனும் பூரண ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்னும் முஸ்லிம்களின் விருப்பம் பற்றி நான் நன்கு அறிவேன். இதுவே ஸ்ரீலங்கா தேசத்தில் முஸ்லிம்கள் முழுமையாக இணைந்துகொள்ளவுள்ள ஒரே பாதையாகும் - என்றுள்ளது. (த)

### ஆஸி.செல்ல முயன்ற 13 பேர் வியாழன் இரவு வென்னப்புவவில் கைது

கொழும்பு,ஓக 11

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல விருந்ததாகக் கூறப்படும் 13 பேர் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு வென்னப்புவப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்வதற்காக இவர்கள் வென்னப்புவ, தும்மோதரை பிரதேசத்திலுள்ள வீடொன்றில் தங்கியுள்ளதாகப் பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததாகவும் இதனையடுத்து அந்த வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார், சந்தேக நபர்களையும் அந்த வீட்டு உரிமையாளரையும் கைது செய்துள்ளதாகவும் வென்னப்புவப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் முல்லைத்தீவு, வவுனியா, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களெனவும் பொலிஸார் கூறினர். (த)

# மங்களவின் மனுவை விசாரிக்க உயர் நீதிமன்று அனுமதி

'ஸ்ரீலங்கா எக்ஸ் நியூஸ்' வலையமைப்பு மீதான திடீர் சோதனை மற்றும் அதன் பணியாள்களைக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கைது செய்தமை ஆகியவற்றை எதிர்த்து வலையமைப்பின் உரிமையாளரான ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு, விசாரணைக்கு எடுக்கத்தக்கது என உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா,நீதியரசர்களான என்.ஜி.அமரதுங்க மற்றும் கே.ஸ்ரீபவன் ஆகியோர் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அடுத்த விசாரணை அடுத்த வருடம் பெப்ரவரி 7இல் நடைபெறுமென நீதிமன்றம் அறிவித்தது.

இந்த வலையமைப்பின் உரிமையாளரும் ஊழியர்களும் சேர்ந்து இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் தமக்கு 50 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்க வேண்டும் என மனுவில் கேட்டுள்ளனர்.

இந்த வலையமைப்பு தொடர்பாகக் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் உள்ள வழக்கையும் நிறுத்தும்படி உத்தரவிட வேண்டும் எனவும் மனுவில் கேட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# தேர்தல் பிரசாரத்துக்கு 500 அரச வாகனங்கள்

கொழும்பு,ஓக 11


தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கெனத் தற்போது 500 அரச வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த முறை மாகாண சபைத் தேர்தலில் அரச அமைச்சர்கள்,நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறவினர்கள் 10 பேரும் பிரதேச சபைத் தலைவர்கள் 10 பேரும் போட்டியிடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் அரச வாகனங்கள் தேர்தல் பிரசார நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்டு வருவதாக லக்ஸ்மன் கிரியெல்ல கூறியுள்ளார்.

இது குறித்துப் பொலிஸாரும் தேர்தல்கள் செயலகமும் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.(த)



உதயன் இணைய வானொலி

www.uthayanradio.com

தினமொரு பரிசுக் குலுக்கல்

கந்தசஷ்டி கவசத்தை அருளியவர் யார்?

1. அருணகிரிநாதர்
2. கச்சியப்ப சிவாச்சாரியார்
3. சேக்கிழார் சுவாமிகள்
4. தேவராய சுவாமிகள்

பெயர் :..........

முகவரி :..........

வயது :.......... தொ.பே. இல :..........

சரியான விடைகளை எழுதி, பரிசுக் கூப்பனுடன் பருத்தித்துறை வீதி, நல்லூரில் (பாரதியார் சிலையடி) அமைந்துள்ள உதயன் இணைய வானொலியின் உற்சவ காலச் சிறப்புக் கலையகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் இன்று மாலை 7 மணிக்கு முன் இடுவதன் மூலம் பெறுமதி மிக்க பரிசில்களை வெல்லும் வாய்ப்பு

1 ஆம் பரிசு : 4 GB பென் ட்ரைவ்
2 ஆம் பரிசு : கம்ப்யூட்டர் ருடே 6 மாத சந்தா
3 ஆம் பரிசு : அர்ச்சுனா சஞ்சிகையின் 6 மாத சந்தா

நேற்றைய புதிருக்கான விடை : பாபநாசம்
வெற்றிபெற்றோர் :

| முதலாம் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|
| மா. ராதாஞ்சலி (வண்ணார்பண்ணை) | கி. வன்னியசிங்கம் (நல்லூர்) | பே. நாகநந்தன் (கந்தர்மடம்) |

பரிசுத் தெரிவுக் குலுக்கல் இன்றிரவு 7.30 மணிக்கு சிறப்புக் கலையக முன்றலில்...

அனுசரணை:

Study & Work in UK, Australia & Canada

2012 September Intake

" இறுதிச் சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள் "

Administration & Documentation

என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும் ஐரோப்பிய நாடுகளுக்கான விஸா பெறுவதற்கான SponsorShip பிரச்சினையா ? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்

Colombo T.P : 072 9994777, 011 7208752, Jaffna T.P : 072 7685691, 077 2479683

V T L Mangement, 01, Deanston House, Denston Place, Colombo - 03

### இசற் புள்ளி தொடர்பாக மேலும் 5 மனுக்கள் ஏற்பு

கொழும்பு,ஓக 11

இஸட்புள்ளி கணிப்பீடு தொடர்பாக மேலும் ஐந்து அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர்நீதிமன்றம் நேற்று முந்தினம் விசாரணைக்கு அனுமதித்தது.

22.07.2012 ஆம் திகதி வெளியிடப்பட்ட இசற் புள்ளி பட்டியல் தொடர்பாக ஏற்கெனவே 33 மாணவர்களின் மனுக்களை ஓகஸ்ட் 6 ஆம் திகதி உயர் நீதிமன்றம் விசாரணைக்கு அனுமதித்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க, நீதியரசர்கள் என்.ஜி. அமரதுங்க, கே. ஸ்ரீபவன் ஆகியோர் கொண்ட நீதியரசர்கள் குழாம் மேற்படி மனுக்கள் தொடர்பான வாதங்களை முன்வைப்பதற்கு செப்ரெம்பர் 3 ஆம் திகதியை நாள் குறித்தனர். (த)

# பல்கலை ஆசிரியர் விவகாரம் அறிக்கை கோருகிறார் ரணில்

கொழும்பு,ஓக 11

பல்கலைக்கழக ஆசிரியர்களின் பகிஷ்கரிப்பு காரணமாக பல்கலைக்கழகங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்துப் பூரண அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

பல்வேறு போராட்டங்கள் காரணமாக பல்கலைக்கழகங்களின் பிரச்சினை ஒரு மாதத்திற்கு மேலாக இழுபடுவதாக அவர் கூறினார். 'கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. ஆனால், இதுவரை தீர்வு காணப்படவில்லை' என அவர் தெரிவித்தார்.

இப்பிரச்சினைகள் காரணமாக மாணவர்களின் கல்வி வாய்ப்புகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைகள் தொடர்பாகப் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. விடைத்தாள் மீள் மதிப்பீடு தொடர்பாகவும் பிரச்சினை எழுந்துள்ளது. இந்தப் பிரச்சினைகளுக்கு அரசு உடனடியாகத் தீர்வு காண வேண்டும் எனவும் அவர் கூறினார். (த)

# 'சீபா' உடன்படிக்கையால் மருத்துவத்துறைக்கு பாதிப்பு

## மருத்துவர்கள் போர்க்கொடி

கொழும்பு,ஓக 11

இந்தியாவுடனான ஒருங்கிணைந்த பொருளாதார கூட்டு (சீபா) உடன்படிக்கை மற்றும் வர்த்தக சேவைகள் தொடர்பான சார்க் உடன்படிக்கை ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதன் காரணமாகப் பெரும் எண்ணிக்கையான இந்திய மருத்துவர்கள் இலங்கைக்கு வருவது அதிகரிக்கும் எனவும் இதனால் மருத்துவத்துறைக்கும் பொருளாதாரத்துக்கும் பாதிப்பு ஏற்படும் எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்தது.

இலங்கையில் இந்திய மருத்துவர்களின் பிரசன்னம் அதிகரித்துவருகிறது எனவும் அவர்களின் நம்பகத்தன்மை கேள்விக்கிடமானது எனவும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் (செபா) உடன்படிக்கை நளின் ஆரியரட்ன கூறினார்.

மேற்படி உடன்படிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். இதனால் இலங்கை மருத்துவர்களிடையே வேலைவாய்ப்பின்மை நெருக்கடி அதிகரிக்கும் அத்துடன் நோயாளர்களின் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்படும் எனவும் அவர் கூறினார்.

ஆராய்ச்சி மற்றும் தொண்டு நடவடிக்கைகள் தவிர்ந்த வெளிநாட்டு மருத்துவர்கள் இந்தியாவில் பணியாற்றுவதற்கு அனுமதிப்பதில்லை என்ற கொள்கையை இந்தியா இறுக்கமாகப் பின்பற்றுகிறது. இந்நிலையில் இலங்கை எதிர்மாறான கொள்கையைப் பின்பற்றுவது முறையல்ல. இலங்கை மருத்துவத்துறை தன்னிறைவானதாகும். எமக்கு மேலும் மருத்துவர்கள் தேவையில்லை' என மருத்துவர் நளின் ஆரியரட்ன தெரிவித்தார். (த)

# இ.போ.ச.வின் வடக்கு வருமானம் பிராந்தியப் பணிமனைக்கு வரும்

## சம்பளக் கொடுப்பனவையும் அதுவே கவனிக்கும்

யாழ்ப்பாணம், ஓக. 11

**வடமாகாணத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 7 சாலைகளினதும் வருமானங்கள் அனைத்தும் வடமாகாண பிராந்திய பணிமனைக்கு அனுப்பப்பட்டு பணிமனையின் ஊடாகவே சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் ஏனைய உதவிகள் வழங்கப்படும்.**

இந்த மாதம் தொடக்கம் இந்த நடைமுறை அமுல்படுத் தப்பட்டுள்ளது என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாண பிராந்தியப் பணிப்பாளர் எஸ்.ஏ. அஸ்ஹர் தெரிவித்தார்.

கொழும்பில் போக்குவரத்து அமைச்சர் குமாரவெல்கம தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர் குமாரவெல்கம, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் சசிவெல்கம, உபதலைவர் விமலநந்தன, சபையின் உயர் அதிகாரிகள், இலங்கையிலுள்ள 12 பிராந்திய நிலையங்களதும் முகாமையாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

வடமாகாணத்தில் சாலை உத்தியோகத்தர்களுக்கு, பஸ் சாரதிகளுக்கு, நடத்துநர்களுக்கு சம்பளம் வழங்குவது தொடர்பில் இழுபறி நிலை இருந்து வருகிறது.

வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஏழு சாலைகளிலும் கிடைக்கும் வருமானங்கள் இதுவரை அந்தந்த சாலைகளுக்குரிய கணக்காளர்களால் பார்க்கப்பட்டு வந்தது.

அந்தந்த சாலை முகாமையாளரால் தமது சாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் கொடுக்கப்பட்டு வந்தன. அதனால் அனைத்து சாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு உரிய காலப் பகுதியில் சம்பளம் வழங்கமுடியாத நிலை இருந்து வந்தது.

அதனால் அனைத்து சாலைகளதும் வருமானங்கள் அனைத்தும் பிராந்திய நிலையத்துக்கு அனுப்பப்பட வேண்டும். கணக்குகள் மாத்திரம் அந்தந்த சாலைக்குரிய கணக்காளர்களால் பார்க்கப்பட்டு அதன் விவரத்தை பிராந்திய நிலையத்துக்கு அனுப்ப வேண்டும் என்ற நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாதம் தொடக்கம் பிராந்திய நிலையத்தினூடாகவே அனைவருக்கும் வழங்கப்படவுள்ளது.

சம்பளம் அனைவருக்கும் உரிய நேரத்தில் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே இந்த நடைமுறை அமுல்படுத்தப்படுகிறது.

கடந்த மாத சம்பளம் 5 சாலைகளுக்கு எதிர்வரும் 13 ஆம் திகதியும் ஏனைய 2 சாலைகளுக்கு 19 ஆம் திகதியும் வழங்கப்படும். இந்த மாத சம்பளம் அடுத்த மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அஸ்ஹர் மேலும் தெரிவித்தார். (ம-4)

## ஆலய பூசகரின் வளவினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதல்

தென்மராட்சி, ஓக.11

ஆலய பூசகரின் வளவினுள் அத்துமீறி நுழைந்த 15 இற்கும் மேற்பட்ட கும்பல் பூசகரையும் அவரது குடும்பத்தினரையும் தாக்கியது. அத்துடன் பூசகரின் வீட்டில் காணப்பட்ட மோட்டார் சைக்கிள், தொலைக் காட்சிப் பெட்டி, ஜன்னல் கண்ணாடிகள் உட்பட ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளை உடைத்துச் சேதப்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை மாலை மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த கணேசலிங்கம் வீரபத்திரர் சர்மா (வயது 30) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மீசாலை கிழக்கைச் சேர்ந்த ஸ்ரீஸ்கந்தராசா ஸ்ரீரஞ்சன் (வயது 30) என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

காணிக் கொள்வனவில் ஏற்பட்ட தகராறே சம்பவத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இதேவேளை வரணிப் பகுதியில் இடம்பெற்ற மற்றுமொரு சம்பவத்தில் காயமடைந்த வரணி வடக்கைச் சேர்ந்த தங்கத்துரை சசிக்குமார் (வயது 33) என்பவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-9)

## நூலக டிப்ளோமா பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஓக.11

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறிக்கான பரீட்சை விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெறாதவர்களை எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் பெற்று அதனைப் பூர்த்தி செய்துகொள்ளுமாறு யாழ்.நிலைய ஒருங்கிணைப்பாளர் கேட்டுள்ளார்.

இலங்கை நூலகச் சங்கத்தினால் நடத்தப்படும் நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி - தரம் II இரண்டிற்கான பரீட்சைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 8, 9, 15ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (10)

## கழுத்து நெரிக்கப்பட்டமையே மூதாட்டி சாவுக்கு காரணம்

### உடல் கூற்றுப் பரிசோதனை உறுதிப்படுத்தியது

இருபாலை பழம் வீதியில் தனித்து வசித்து வந்த 70 வயது மூதாட்டி கழுத்து நெரிக்கப்பட்டமையாலேயே சாவடைந்துள்ளார் என்று உடல்கூற்றுப் பரிசோதனையில் தெரிய வந்துள்ளது.

இருபாலை பழம் வீதியைச் சேர்ந்த குமாரசாமி மங்கையர்க்கரசி (வயது -70) என்ற மூதாட்டி கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்ட நிலையில் அவர் அணிந்திருந்த நகைகளும் திருடப் பட்டுள்ளன.

இவரது 4 பிள்ளைகளும் வெளிநாட்டில் வசிக்கும் நிலையில் இவர் தனது வீட்டில் தனியே வசித்து வந்துள்ளார். கடந்த 4 ஆம் திகதி இவர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளார் .

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் அயல்வீட்டார் குறித்த மூதாட்டியின் வீட்டுக்குச் சென்றபோது வீட்டின் கதவு திறந்திருந்ததுடன், வீட்டினுள் சடலமாக மூதாட்டி காணப்பட்டார். இவரின் கண்ணாடி வீட்டின் வெளியேயுள்ள மரத்தின் கீழ் காணப்பட்டது.

நேற்றுமுன்தினம் சம்பவ இடத்துக்குச் சென்ற கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

நேற்று உடல்கூற்றுப் பரிசோதனைகள் நடைபெற்றது. இதில் மூதாட்டி கழுத்து நெரிக்கப்பட்டமையாலேயே மரணம் சம்பவித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது .

சடலம் நேற்று மதியம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது . (ம-5)

## பயிர்களுக்கு தண்ணீர் இல்லை விவசாயிகள் திண்டாட்டத்தில்

யாழ்ப்பாணம், ஓக.11

யாழ். குடாநாட்டு விவசாயிகள் தாம் பயிரிட்ட பயிர்களுக்கு போதிய தண்ணீரை இறைக்க முடியாது பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

தற்போதைய கடும் வரட்சி மற்றும் வெப்பத்தால் விவசாய தோட்டக் கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாக வற்றியுள்ளன.

சில கிணறுகளுக்கு ஆழ்துளைக் குழாய்கள் அமைக்கப்பட்டும் கூட அதில் இருந்தும் தண்ணீரின் ஊற்று குறைந்து காணப்படுகின்றது.

**சில கிணறுகளுக்கு ஆழ்துளைக் குழாய்கள் அமைக்கப்பட்டும் கூட அதில் இருந்தும் தண்ணீரின் ஊற்று குறைந்து காணப்படுகின்றது.**

இந்த நிலையில் விவசாயிகள் தமது விளை பயிர்களுக்கு சுழற்சி முறையில் தண்ணீர் இறைப்பதில் சிரமங்களை எதிர் கொண்டுவருகின்றனர்.

சில தோட்டங்களில் பயிர்களுக்கு போதிய தண்ணீரை இறைக்காத நிலையில் அவை வாடிக் காணப்படுகின்றன.

இந்த நிலையில் தினமும் விளை பயிர்களுக்கு நீரை இறைக்க வேண்டியுள்ளதாகவும் இதற்குப் போதிய தண்ணீர் இல்லை என்றும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

## நிகழ்வுகள் இன்று

### விவேகானந்தர் பிறந்த தின விழா

உரும்பிராய் இராமகிருஷ்ணமிஷன் நலன்புரி நிலையத்தின் ஏற்பாட்டில் சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த ஆண்டு விழா பிற்பகல் 3 மணிக்கு தொல்புரம் சர்வோதய நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

### வெள்ளி விழா

புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் 25 ஆவது வருட வெள்ளிவிழாவும், மலர் வெளியீடும் கலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் க.தங்கராசா தலைமையில் சங்க மண்டப அரங்கில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் கலந்து கொள்வார்.

சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடுகளும் பொருளாதார மேம்பாடும் என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் சிறப்புரையாற்றுவார். மலர் வெளியீட்டுரையை அதிபர் ப.செல்வநாயகமும், ஆய்வுரையை மூத்த சட்டத்தரணி ஜி.இராஜகுலேந்திராவும் நிகழ்த்துவார்கள்.

சமூக சேவையாளர்கள், மூத்தோர் கௌரவித்தல், விருது வழங்கல், போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கு பரிசில்கள் வழங்குதலும் இடம் பெறும். (ம-8,17)

### நூல் வெளியீடு

பழந்தமிழர் இயக்கத்தின் ஏற்பாட்டில் ''சமூக மாற்றத்துக்கு வித்திட்டவர்கள்'' எனும் நூல் வெளியீட்டு விழா மாலை 5.30 மணிக்கு அரியாலை காந்தி நிலைய வெள்ளிவிழா அரங்கில் நடைபெறவுள்ளது. பழந்தமிழர் இயக்க நிறுவுனர் ம.வித்தியானந்தநேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் கலந்துகொள்வார்.

இந்த நூலை அருட்திரு வி.பி.தனேந்திரா எழுதியுள்ளார். (10)

## கட்டாக்காலிகளால் ஏற்படும் பயிரழிவுக்கு உள்ளூராட்சி சபை பொறுப்பேற்க முடியாது

### சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் தெரிவிப்பு

தென்மராட்சி, ஓக. 11

கட்டாக்காலிகளால் ஏற்படும் பயிர் அழிவுகளுக்கு உள்ளூராட்சி சபைபொறுப்பேற்க முடியாது. வீதியோரங்களில் அல்லது பொது இடங்களில் காணப்படும் கட்டாக்காலிகளாக அலையும் காளை மாடுகளைப் பிடிப்பதற்கு மட்டுமே சபைகளுக்கு அதிகாரம் உண்டு. நெல்வயல்களில் அல்லது தோட்டங்களில் சேதம் விளைவிக்கும் கட்டாக்காலிகளைப் பிடிப்பதும் கட்டுப்படுத்துவதும் விவசாயத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் விவசாய சம்மேளனங்களின் கடமை.

- இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சிற்றம்பலம் துரைராஜா.

தனங்களப்பில் கடந்த காலபோகச் செய்கை கட்டாக்காலிகளால் அழிவடைந்தது. இதற்கான பொறுப்பை ஏற்று தமக்கு 15 மில்லியன் ரூபா நட்டஈடு தரவேண்டும் என்று கேட்டு சாவகச்சேரி பிரதேச சபைக்கு விவசாயிகள் சட்டத்தரணிகள் மூலம் 'நோட்டீஸ்' அனுப்பி உள்ளனர். இது குறித்துக் கருத்துத் தெரிவித்த போதே துரைராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விதைத்த வயல்களில் இருந்து அறுவடையைப் பெறமுடியாத அளவுக்கு அவற்றைக் கட்டாக்காலிகள் சேதப்படுத்திவிட்டன என்று தனங்களப்பு விவசாய சம்மேளனம் குற்றஞ்சாட்டியுள்ளது. கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்தியிருக்க வேண்டிய சாவகச்சேரி பிரதேச சபை அதனைச் செய்யாத காரணத்தாலேயே இந்த நட்டம் ஏற்பட்டதாகத் தெரிவித்தே நட்டஈடு கேட்டு பிரதேச சபைத் தலைவருக்கு 'நோட்டீஸ்' அனுப்பப்பட்டுள்ளது.

ஆனால், ''கட்டாக்காலிகளிடம் இருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்கான வேலிகளை ஆரம்பத்தில் விவசாயத் திணைக்களமே தனங்களப்பில் அமைத்துக் கொடுத்தது. கடந்த வருடம் அதனை அவர்கள் செய்யவில்லை. விவசாய சம்மேளனமும் அதனைச் செய்யவில்லை. அது அவர்களின் பொறுப்பு'' என்று பிரதேச சபைத் தலைவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பயிர்களைப் பாதுகாக்கும் பொருட்டு நெல்வயல்களில் அலையும் கால்நடைகளை அந்தந்த விவசாய சம்மேளனங்கள் பிடிக்கலாம். அவற்றைக் கமநல சேவை நிலையங்கள் மூலம் ஏலத்தில் விற்று பயிரழிவுக்கான நட்டத்தை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கலாம். இதுவே வழமையான நடைமுறை.

வீதிகளில் அலையும் கட்டாக்காலிகளைப் பிடிப்பதற்கே பிரதேச சபைக்கு அனுமதியுண்டு. ஆனாலும் மனிதாபிமான அடிப்படையில் கடந்த வருடம் தனங்களப்பில் கட்டாக்காலிகளைப் பிடிக்க நடவடிக்கை எடுத்தது. அது கடினமான பணி.

10 வருடங்களுக்கும் மேலாகக் கட்டாக்காலிகளாகத் திரிந்த மாடுகளைப் பிடிப்பதென்பது இலகுவான காரியமல்ல. ஒரு மாட்டைப் பிடிப்பதற்கு பிரதேச சபைக்கு ரூபா 2,500 வரையில் செலவானது. பிடிபட்டவற்றில் சில 1,000 ரூபாகூடப் பெறாத கன்றுக்குட்டிகள். சில பிடிபடும்போதே இறந்து போயின. இவற்றுக்கும் சபையே பிடிகூலி கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

இத்தகைய நிலையில் பயிரழிவுக்கு தனங்களப்பு விவசாய சம்மேளனம் பிரதேச சபையிடம் நட்டஈடு கோருவது சரியானதாகத் தெரியவில்லை - என்று கூறினார்.

இதேவேளை, நேற்றைய உதயனில் முன்பக்கத்தில் வெளியான இது தொடர்பான செய்தியில் சாவகச்சேரி நகர சபைக்கு விவசாயிகளால் 'நோட்டீஸ்' அனுப்பப்பட்டது என்று தலைப்பில் தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுவிட்டது. (உ-9)

## அமெரிக்கா, சீனா,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யலில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் அமெரிக்க இராஜதந்திரியும், நேட்டோ மற்றும் அமெரிக்கப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பசுபிக் கட்டளைப் பீடம் ஆகியவற்றின் இராணுவப் பேராசிரியருமான பற்றிக் மெண்டிஸ், இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:-

இலங்கை எப்போதுமே ஒரு தீவாக இருந்ததில்லை.அது ஆசியாவில் உள்ள பண்டைய அரசுகளுடனும் ஐரோப்பிய பேரரசுகளுடனும் எப்போதுமே, வர்த்தக மற்றும் இராஜதந்திர உறவுகளை கொண்டிருந்தது.

இந்து சமுத்திரத்துக்கான பாதையில், மூலோபாய அமைவிடத்தில் இலங்கை அமைந்திருப்பதால், இந்தியா, சீனா, அமெரிக்கா போன்ற நாடுகளின் கவனத்தை அதிகம் ஈர்த்துள்ளது.

யார் எவர் இந்து சமுத்திரத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறாரோ, அவரே ஆசியாவில் ஆதிக்கம் செலுத்த முடியும் என்று அமெரிக்க மூலோபாய வகுப்பாளரான அட்மிரல் அல்பிரெட் மகான் சொல்லியுள்ளார்.

இந்து சமுத்திரத்தில் சீனா முத்துமாலை மூலோபாயத்தை வகுத்து வருவதால், பீஜிங்குடன் இணைந்த இலங்கையின் புதிய மூலோபாயம் குறித்துப் புதுடில்லியில் உள்ள இந்தியத் தலைவர்கள் கவலை கொண்டுள்ளனர்.இலங்கையில் சீனத் தலையீடுகளை சமநிலைப்படுத்துவதற்காக இந்தியா இரண்டு அடிப்படை மூலோபாயத் திட்டங்களைக் கையாண்டது.அதில் ஒன்று சேது சமுத்திரத் திட்டம். மற்றது திருகோணமலைத் துறைமுகத் திட்டம். அதேவேளை அமெரிக்காகவும் இலங்கையும் கையகப்படுத்தல் மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான சேவைகள் உடன்பாட்டை செய்து கொண்டன. -என்றார். (த)

## படகுடன் 211 இலங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யக் குடிவரவுத்துறை அமைச்சர் கிறிஸ் போவென் கூறினார். இந்த வருடம் 7000 இக்கும் அதிகமானோர் படகுமூலம் ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட கையெழுத்து சேகரிக்கும் வேலைத்திட்டமொன்று வவுனியாவில் நேற்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டு கைதிகள் கொலைக்கு எதிராக தமது கையொப்பங்களை இட்டனர். (த-400)

## திட்டமிட்டபடி மாநாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை சென்னையில் இலங்கையில் வாடும் தமிழர்களுக்காக நடத்துவதாக அறிவிக்கப்பட்ட டெசோ மாநாட்டில் ஈழம் என்ற வார்த்தையைப் பயன்படுத்த மத்திய அரசு தடை விதித்தது.

இந்த நிலையில், சென்னையில் டெசோ மாநாட்டை நடத்த அனுமதிக்க முடியாது என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்நிலையில், டெசோ மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை. டெசோ மாநாட்டை நடத்துவதில் தி.மு.க. தலைவர் கருணாநிதி உறுதியாக உள்ளார் என்றும் டெசோ மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வேட்பாளர் மார்க்கண்டு நடராசா தெரிவிக்கையில்:

நேற்று வெள்ளிக்கிழமை கோயில்போரதீவு கிராமத்தில் தேர்தல் பிரசாரத்தை முடித்துக் கொண்டு எனது ஆதரவாளரொருவர் வீட்டில் மதிய உணவுக்காகச் சென்றிருந்தேன். அந்த நேரம் வாகனம் வீதியில் நிறுத்தப்பட்டிருந்தவேளை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் வாகனம் மீது கல்வீசித் தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளார்கள்.இதன் காரணமாக வாகனத்தின் கண்ணாடி சேதமடைந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் வந்த நபர்களில் ஒருவர் தலைக்கவசம் அணிந்திருந்தார்.குறித்த சம்பவத்தின் பின்னணியில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வேட்பாளர் ஒருவரே இருந்துள்ளார் போலத் தெரிகின்றது. -என்றார். (த)

## நிமலரூபன், டெல்றொக்ஷன் சாவுகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமைகளுக்குப் பதிலளிக்க வேண்டுமெனக் கோரி இலங்கை அரசுக்கு எதிராக ஜெனிவாக் கூட்டத் தொடரில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் அது மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்காமல் அவற்றை அப்பட்டமாக மீறிச் செயற்படுகின்றது என்ற விடயத்தை அந்த முறைப்பாட்டில் மக்கள் கண்காணிப்புக் குழு சுட்டிக்காட்டவுள்ளது.

அத்துடன், தமிழ்க் கைதிகளின் மரணம் தொடர்பில் சுயாதீன விசாரணையை நடத்துமாறு இலங்கை அரசை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை வலியுறுத்த வேண்டும் என்றும் மக்கள் கண்காணிப்புக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இது விடயம தொடர்பில் 'உதயனி'டம் கருத்து வெளியிட்ட மக்கள் கண்காணிப்புக் குழுவின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய கூறியவை வருமாறு:-

'மஹிந்த சிந்தனை' இன்று 'மரண சிந்தனை'யாக உருமாற்றம் பெறுகின்றது. தொடர்ச்சியாக அரங்கேறிவரும் மனிதப்படுகொலைகள் இதற்கு சிறந்த சான்றாகும்.

சிறைச்சாலையில் அரச பாதுகாப்பில் இருந்த இரண்டு தமிழ் அரசியல் கைதிகளை அரசு கோரமாகத் தாக்கி படுகொலை செய்துள்ளது. அரசால் ஏவிவிடப்பட்ட அதிகாரிகளின் மிலேச்சத்தனமான தாக்குதலில் பல தமிழ் அரசியல் கைதிகள் படுகொலையடைந்துள்ளனர். இதற்கு அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.

எனவே, நிமலரூபன், டெல்றொக்ஷன் ஆகிய அரசியல் கைதிகளின் மரணம் தொடர்பில் அரசு சுயாதீன விசாரணையை முன்னெடுக்க வேண்டும்.

ஜெனிவாவில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும், இந்த அரசு மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கவில்லை. மாறாக, அவற்றை அப்பட்டமாக மீறி செயற்பட்டு வருகின்றது. எனவே, தமிழ் அரசியல் கைதிகளின் மரணம் உட்பட மீறப்பட்டு வரும் மனித உரிமைகள் தொடர்பில் நாம் ஐ. நாவிடம் முறைப்பாடு செய்யவுள்ளோம் - என்றார்.

## டெசோவுக்கு அனுமதி மறுத்தது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோபால் ஆகியோர் கொண்ட ஆயம் முன் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள இந்த டெசோ மாநாட்டுக்கு, 8 ஆயிரம் பேர் வருவார்கள் என்று முதலில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் எவ்வளவு பேர் வருவார்கள் என்று அரசு கேட்டிருந்த தகவல் இன்னும் சரியாகக் கிடைக்கவில்லை. என்று அரச வழக்கறிஞர் நவநீதகிருஷ்ணன் இதன்போது சுட்டிக்காட்டினார்.

மேலும், மாநாடு நடத்தத் திட்டமிட்டுள்ள மைதானத்துக்கு எதிரே வைத்தியசாலை இருப்பதால், அங்கு வரும் நோயாளிகளுக்கு இடையூறு ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. அதனால், சென்னையில் மாநாடு நடத்தத் தமிழக அரசு அனுமதியளிக்கப் போவதில்லை என்று அரச வழக்கறிஞர் மேலும் தெரிவித்தார்.

ஆனால், டெசோ அமைப்பின் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர், நகர பொலிஸ் விதிகளின் கீழ், தனியார் மைதானத்தில் மாநாடு நடத்த பொலிஸாரிடம் அனுமதி பெறத் தேவையில்லை என்று சுட்டிக்காட்டினார். ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதற்காகத்தான் அனுமதி கோரியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதையடுத்து, மாநாட்டுக்கு அனுமதி வழங்குவது குறித்து, சென்னை நகரப் பொலிஸ் ஆணையர் பரிசீலித்து,பொருத்தமான முடிவை எடுக்கலாம் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதனிடையே, டெசோ மாநாட்டின் தலைப்பில் 'ஈழம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தக் கூடாது என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

## இறுதிச் சடங்கு இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அன்றைய தினமேசடலத்தை அடக்கம் செய்து விடவேண்டும் என்று யாழ். தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் சிகேரா யாழ். நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார். இதனையடுத்து அதற்கான அனுமதியை நீதிமன்றம் வழங்கியிருந்தது.

ஆயினும் கைதியின் சடலம் நேற்றுக் காலையே யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டது.

இதனையடுத்து நேற்று யாழ். நீதிமன்றத்துக்கு சென்ற தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சமன் சிகேரா நேற்றைய தினமே சடலத்தை அடக்கம் செய்துவிடவேண்டும் என்று கட்டுப்பாடுகளை விதித்தார்.

இறுதிச் சடங்கின் போது அரசியல் பேச்சுக்கள், பிரச்சினைகளைத் தூண்டிவிடும் வகையிலான பேச்சுக்கள் இடம்பெறக்கூடாது. மதச்சடங்குகளுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் 'பாண்ட்' தவிர்க்கப்பட வேண்டும். டெல்றொக்ஷனின் குடும்பத்தினர் சகிதமே இறுதிச் சடங்கு நடைபெறவேண்டும் என்று சமன்சிகேர கட்டுப்பாடுகளையும் விதித்து அதற்கு நீதிமன்றில் அனுமதி கோரியிருந்தார். அதற்கும் நீதிமன்று அனுமதி வழங்கியது.

ஆயினும் டெல்றொக்ஷனின் தந்தையான மரியதாஸ், சட்டத்தரணிகள் ஊடாக யாழ். நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்து சமயச்சடங்குகளை மேற்கொள்ள அனுமதி கோரியிருந்தார்.

சட்டத்தரணிகளான கே.சுகாஷ், பா.பார்த்தீபன் ஆகியோரின் நெறிப்படுத்தலில் சட்டத்தரணி ஜொனி மதுரநாயகத்தின் அனுசரணையில் ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்ன சிங்கம் நகர்த்தல் பத்திரத்தைச் சமர்ப்பித்து வாதாடினார்.

'பாண்ட்' வாத்தியங்கள் சகிதம் சடலம் எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்வது மனுதாரரின் சமயம் சார்ந்த சடங்கு. டெல்றொக்ஷன் விளையாட்டு வீரராக இருந்தமையால் நண்பர்கள், அதிகாரிகள் வருகை தருவதைத் தடுக்க முடியாது. சமய, சமூக காரணிகளின் அடிப்படையில் பொலிஸாரின் கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சட்டத்தரணிகள் வாதாடினர். இதனைப் பரிசீலித்த நீதிவான் அரசியல் மயப்பட்டதாக இந்த இறுதிச் சடங்கு இடம்பெறக்கூடாது எனக் கூறி சடலத்தை இன்று அடக்கம் செய்ய உத்தரவிட்டார்.

இதேவேளை, டெல்றொக்ஷனின் இறுதிச் சடங்கை குழப்புவதற்காகவே பொலிஸார் அதில் தலையிடுகின்றனர் என்றும் இது மனித உரிமை மீறல்களுக்கான இன்னொரு எடுத்துக்காட்டு என்றும் மனித உரிமைகளுக்கான ஆர்வலர்கள் அமைப்பின் தலைவர் உதில் பிரேமரட்ண தெரிவித்துள்ளார்.

குறித்த சிறைச்சாலை தாக்குதலில் முன்னர் உயிரிழந்த நிமலரூபனின் சடலத்தையும் கையளிக்க முதலில் மறுத்தோடு, இறுதிச் சடங்கு நிகழ்விலும் பொலிஸார் தலையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## 206 குடும்பங்கள் இன்று கைவேலியில் மீள்குடியமர்வு

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு கிழக்கு கைவேலியைச் சேர்ந்த 206 குடும்பங்கள் இன்று அவர்களின் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளன.

கடந்த இறுதிப் போரின் போது இடம்பெயர்ந்து மெனிக்பாம் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 206 குடும்பங்களைச் சேர்ந்த 635 பேரே இன்று மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர். இவர்களில் கதிர்காமர் நலன்புரி முகாமில் இருந்து 93 குடும்பங்களைச் சேர்ந்த 225 பேரும், ஆனந்த குமாரசாமி நலன்புரி நிலையத்திலிருந்து 113 குடும்பங்களைச் சேர்ந்த 410 பேரும் மீளக்குடியமர்த்தப்படுவதற்காக நேற்று நலன்புரி முகாமிலிருந்து அவர்களது உடைமைகளுடன் புதுக்குடியிருப்புக்கு அழைத்து வரப்பட்டனர்.

## மு.கா. மீது விரைவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கைகள் கூட்டுப்பொறுப்பை மீறும் வகையில் அமைந்துள்ளன.இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படும். ஒருவருடைய குற்றம் நிரூபிக்கப்படும் வரை அவர் அப்பாவி தான்.குற்றச்சாட்டு உண்மையானதா என்பதை உறுதிப்படுத்த ஒரு விசாரணை அவசியம். பொதுவாகவே தேர்தல் பரப்புரைகளில் அரசியல் கட்சிகள் பல்வேறு கருத்துகளை வெளியிடுவது வழக்கம்தான்-என்றார். (த)

## டெல்றொக்ஷனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் நேற்றுக் காலை முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு பொது மக்கள், மதகுருமார்கள், அரசியல் தலைவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.

வவுனியா சிறையில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து மோசமாகத் தாக்கப்பட்டு கோமா நிலையை அடைந்த டெல்றொக்ஷன் சிகிச்சைக்காக ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை கடந்த புதன்கிழமை அதிகாலை அங்கு உயிரிழந்தார். அவரது சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் நேற்று முன்தினம் மாலை பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது. அதன்பின்னர் அங்கிருந்து எடுத்துவரப்பட்ட சடலம் நேற்றுக் காலை முதல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. டெல்றொக்ஷனின் உடலுக்கு நேற்றுக் காலை முதல் அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், பொது மக்கள் என பலரும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.

அவரது இறுதிச் சடங்குகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## 70 வயதான தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்குப் பதிலாக அகதி அந்தஸ்துக் கோரி தாக்கல் செய்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கூறினர். 'அவர் அங்கு திரும்பிச் செல்லலாம். ஆனால், அங்கு அவருக்கு வேறு உறவினர்களோ, நெருக்கமான நண்பர்களோ இல்லை' என அவர் நாடு கடத்தப்படுவதற்கு முன் சி.பி.சி. தொலைக்காட்சிக்கு அந்த மூதாட்டியின் மகளான சந்திரா தேவி உத்திரகுமாரன் கூறினார்.

'இப்படி உங்கள் குடும்பத்துக்கு நடப்பதை நீங்கள் விரும்ப மாட்டீர்கள். அவருக்கு அனுசரணை வழங்க எமக்கு ஒரு வாய்ப்பு வழங்குங்கள். அங்குள்ள சூழ்நிலை தெரியாமல்' என அவரின் பேர்த்தியான தாட்ஸா உத்திரகுமாரன் கூறினார்.

மூதாட்டியின் பிள்ளைகளில் இருவர் கனடாவிலும் மேலும் இருவர் நோர்வேயிலும் வசிக்கின்றனர். அவருக்கு நோர்வேயில் நிரந்தர வதிவிடம் இருப்பதாகக் கனேடிய குடிவரவு மற்றும் அகதிகள் சபை தெரிவித்துள்ளது. எனினும் கடவுச்சீட்டில் ஒட்டப்பட்டிருந்த வதிவிட ஸ்ரிக்கர் திகதி காலாவதியாகியிருந்தது எனவும் அச்சபை ஒப்புக்கொண்டுள்ளது.

கனடாவிலுள்ள தமது பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளுடன் இணைய விரும்புவோரின் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதை கடந்த வருடம் கனடா நிறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, குடும்ப அங்கத்தவர்களைச் சந்திக்கவருபவர்களுக்குப் பத்து வருடங்களுக்கான புதிய சுப்பர் விஸா திட்டமொன்றை பிரஜாவுரிமை மற்றும் குடிவரவு அமைச்சர் ஜேஸன் கென்னி அறிவித்தார். இதன்படி ஒருவர் ஒருதடவையில் இருவருட காலம் வரை கனடாவில் தங்கியிருக்கலாம். இத்திட்டத்தின்கீழ் தமது பெற்றோர் அல்லது பாட்டன், பாட்டியை அழைக்க விரும்புவர்கள் குறைந்தபட்சம் 17,000 டொலர் வருமானத்தை கொண்டிருப்பதுடன் தனியார் காப்புறுதியையும் பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினமும் தென்னாபிரிக்கக் குழுவினர் கூட்டமைப்பினருடன் சந்தித்துப் பேசி இருந்தனர். நேற்றைய சந்திப்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

போரின் பின்னரான காலப்பகுதி மற்றும் அமைதி முயற்சிகள் குறித்த தமது அனுபவங்களை இலங்கை அரசு மற்றும் கூட்டமைப்புடன் பகிர்ந்துகொள்ள தென்னாபிரிக்கக் குழுவினர் முன் வந்துள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

''அவர்களின் முயற்சி குறித்து தெளிவாகத் தெரியவில்லை. ஆனாலும் அரசியல் தீர்வு முயற்சிகளுக்கு யாரும் உதவ முன்வந்தால் அதனைக் கூட்டமைப்பு மறுக்காது என்று நாங்கள் அவர்களுக்குத் தெரிவித்துள்ளோம்'' என்றார் அவர். (உ-01)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சிறைச்சாலை மரணங்களை நிறுத்த அரசு மனம் கொள்வது எப்போது?

வவுனியா சிறைச்சாலையில் கடந்த ஜூன் மாத இறுதியில் நடைபெற்ற சம்பவத்தைத் தொடர்ந்து மஹர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட தமிழ்க் கைதிகளில் மேலுமொருவர் சிகிச்சை பயன் இன்றி உயிர் இழந்துள்ளார். அவர் யாழ்ப்பாணம் பாஷையூரைச் சேர்ந்த 36 வயதான மரியதாஸ் நேவிஸ் டெல்றொக்சன் ஆவார்.

இதற்கு முன்னராக கடந்த ஜூலை 3 ஆம் திகதி கடுங்காயங்களுடன் ராகம ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவரான வவுனியா நெளுக்குளத்தைச் சேர்ந்த கணேசன் நிமலரூபன் என்ற 28 வயது இளைஞன் மரணமடைந்திருந்தார்.

கடந்த ஜூன் மாதம் இருபத்தொன்பதாம் திகதி வவுனியாச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் சேர்ந்து சிறை அதிகாரிகளைத் தடுத்து வைத்தனர் என்பதும்-

அவர்களை மீட்பதற்காக, பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் அழைக்கப்பட்டிருந்தனர். அவ்வேளை அரசியல் கைதிகள் தாக்கப்பட்டதில் அவர்கள் காயமடைந்தனர் என்பதும்-செய்தி.

அதனைத் தொடர்ந்து தமிழ் அரசியல் கைதிகள் போகம்பரை சிறைச்சாலைக்கும் மஹர சிறைச்சாலைக்கும் மாற்றப்பட்டனர். ராகம ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த பதின்மரில் உயிர் இழந்த நிமலரூபனும், நேவிஸ் டெல்றொக்சனும் அடங்குவர்.

இந்த வகையில் இன்னும் எத்தனை தமிழ் அரசியல் கைதிகள் சேர்க்கப்படுவர் என்ற ஏக்கம் அவர்களின் உறவுகளை வாட்டுவதை அரசாங்கமும் அதன் அதிகாரிகளும் உணர்வார்களா?

கைதிகளை அடித்துக்கொல்வது தான் இந்த நாட்டின் அரச நீதியா என்பதை அவர்கள் மட்டுமன்றி, அகில உலகத்து மனித உரிமையாளர்களும், மனிதநேய அமைப்புகளும் ஓங்கி ஒலிப்பதற்கு இக் கைதிகளின் மரணங்கள் வழிசெய்துள்ளன;

டெல்றொக்சனின் மரணத்துக்கு மாரடைப்பே காரணம் என்று இந் நாட்டு அரசு தனது வழமையான பல்லவியைப் பாடப்போகிறதா? இத்தகைய மரணங்கள் குறித்து அரசு சர்வதேசத்துக்கு மட்டுமன்றி இலங்கை வாழ் மக்களுக்கும் பதில் கூறவேண்டிய நிலை உருவாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் சுட்டிக்காட்டி இருப்பதை அரசு கணக்கில் எடுக்குமா என்பது சந்தேகமே.

ஒவ்வொரு தடவையும், சிறைச்சாலைகளில் தாக்கப்படும் தமிழ் இளைஞர்களுக்கு முறையான சிகிச்சை வழங்கப்படாதிருப்பது, அவர்களைக் கொலை செய்யும் முயற்சியில் அரசு இறங்கி உள்ளதா என்ற சந்தேகத்தை தமிழ் மக்களிடையே உண்டாக்கி வருகிறது. இதனைத் தக்கமுறையில் வெளியிட்டுள்ளனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்.

மயக்கமுற்ற நிலையில் சிகிச்சைபெற்ற வேளையிலும், டெல்றொக்சனின் கால்களில் விலங்கிடப்பட்டமை அநீதியானது. சிறைக் கைதிகளும் மனிதர்களே என்ற சிறைச்சாலைகளின் தொனிப் பொருளை சிறைச்சாலை அதிகாரிகள் மீறுகின்றனர் என்று வைத்திய நிபுணரும், ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா கூறியிருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

மொத்தத்தில், சுயநினைவற்ற நிலையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த தமிழ்க் கைதியின்-தமிழ் அரசியல் கைதியின்-மரணம், வழமைப்பிரகாரம் விசாரணை நடக்கிறது; நடத்தப்படும் என்ற வாசகத்திற்குள் அரசினால் அடக்கப்படும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால் தமிழ் அரசியல் கைதிகள் மீது அரச அதிகாரிகளும், அரசாங்கமும் காட்டும் வன்போக்கு, அடிப்படை மனித உரிமைகளில் தானும் அரசு அக்கறை காட்டுவது இல்லை என்பதனை மிகத் துலக்கமாக வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

இதன் மத்தியில் தமிழ் அரசியல் கைதியின் மரணம் தொடர்பாக உரிய விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோருவதனைத் தவிர வேறு எதனையும் செய்ய இயலாதுள்ளது என்று இடதுசாரித் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் வாசுதேவ நாணயக்காரா கழிவிரக்கம் கொள்வது, அரசாங்க உயர் பீடத்தினரின் ஆசியுடனும் ஆதரவுடனுமே தமிழ் அரசியல் சிறைக் கைதிகளின் மரணங்கள் இடம்பெறுகின்றன என்ற முடிவுக்கு வரவே எவரையும் தூண்டும்!

தமிழ் இளைஞர்களின்-கைதிகளின்-மரணங்களுக்கு அவர்கள் மீதான நீதி விசாரணைகள், கடலில் இட்ட கற்கள் போன்று அரசினால் மூழ்கடிக்கப்பட்டு உள்ளமையே காரணம் என்பது மிகவும் தெளிவானது.

உலகளாவிய மட்டத்தில், மனித உரிமைகளைப் பேணுவதில் அக்கறை காட்டும் அமைப்புகள், மனித உரிமைகள் குறித்து இலங்கை அரசு வேண்டிய அளவு அக்கறை காட்டுவதில்லை என்று புட்டுக்காட்டும் போது, அதனை மறுதலிப்பதற்கு, பல உத்திகளையும் யுக்திகளையும் கைக்கொண்டு தன்னை நியாயப்படுத்துவதற்கு அரசு பெரும் சங்கடப்படுவது வழமை.

அதனைத் தவிர்த்துக்கொள்ளும் வகையில் தமிழ்க் கைதிகளை, அரசியல் கைதிகளை நீண்ட காலத்துக்கு சிறைக்கூடத்துக்குள் வைத்திருக்காது, நீதி விசாரணைகளைத் துரிதமாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதில் அரசு உள்ளார்ந்த விருப்பத்துடன் செயற்படுவது எப்போது?

ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழு போன்ற உலகளாவிய அமைப்புகள் அரசின் குறைபாடுகளை எடுத்துக் கூறும்போது, அவற்றுடன் சமருக்குப் புறப்படும் அரசும் அமைச்சர்களும், கைதிகள் சிறைச்சாலைகளில் மரணமடைவதைத் தடுப்பதற்கு உள்ளார்ந்த, மனமொன்றிய அக்கறையுடன் நடவடிக்கை எடுப்பது எப்போது என்பதற்கு விடைகிடைக்குமா?

மனித நீதியும், நல்லாட்சியும் மலரும் என்று மக்கள் நம்புவதற்கு இன்னும் எத்தனை காலம் செல்லும் என்பதனை ஊகிக்கத்தானும் இயலாத இருளிலேயே அவர்கள் மூழ்கிக்கிடக்கவேண்டியது தானா?



# உளசமூகப் பணிகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி செயலணியின் அனுமதி இல்லை

## இந்துமா சபைத் தலைவர் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.11

போர் முடிந்ததாக அறிவிக்கப்பட்ட பின்னர் உளசமூகப் பணிகளை பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி விசேட செயலணியின் அனுமதி வழங்கப்படுவதில்லை.

இதனால் வீட்டு வன்முறை தொடக்கம் வன்முறைக் கலாசாரமான நிலைமை பாதிக்கப்பட்ட மக்களிடையே அதிகரித்துச் செல்கிறது.

இவ்வாறு இந்துமா சபைத் தலைவர் மருத்துவர் இ.சிவசங்கர் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற சிவில் சமூக கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நீண்டகாலமாக போரால் பாதிக்கப்பட்ட சமூகத்திடம் இயல்பாகவே முரட்டுத்தனம் உருவாகும். அத்துடன் சித்திரவதைகளுக்கு உட்பட்டு விடுவிக்கப்பட்டவர்களுக்கும், தடுப்பு முகாம்களிலிருந்து வெளியேறுபவர்களுக்கும் ஒழுங்கான முறையில் உளசமூக சிகிச்சைகள் வழங்கப்படவேண்டும்.

போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட வன்னிப் பெரு நிலப் பரப்பில், இழப்புக்களை சந்தித்த மக்களுக்கு உளசமூகப் பணிகள் கட்டாயம் முன்னெடுக்கப்படவேண்டும். இல்லாவிடின் வன்முறைக் கலாசாரம், வீட்டு வன்முறைகள் அதிகரித்துச் செல்லும்.

இந்திய இராணுவம் இங்கிருந்த காலத்திலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்திலும், சமாதான காலத்திலும், ஏன் இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த 4 கால கட்டங்களிலும் உள சமூகப்பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டிருந்தது.

ஆனால் எல்லாம் முடிந்ததாக சொல்லப்பட்ட பின்னர், மக்களுக்கு உள்சமூகப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய காலத்தில் அதனை மேற்கொள்வதற்கான அனுமதிகள் வழங்கப்படுவதில்லை.

பெரும்பாலான நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளசமூகப் பணிகளை மேற்கொள்ளும் வேலைத் திட்டங்களை முன்மொழிந்து ஜனாதிபதி விசேட செயலணியின் அனுமதிக்காக அனுப்பும் பட்சத்தில் அனுமதிகள் கிடைப்பதில்லை.

நாட்டில் மும்மொழிக் கொள்கை நடைமுறைப்படுத்துவதாகச் சொல்லப்படுகின்ற போதிலும் அது பேச்சளவில் மாத்திரமே உள்ளது. 2009ஆம் ஆண்டு போர் முடிவடைவதற்கு முன்னர் மும்மொழிகளிலும் அச்சிடப்பட்ட அரச அறிவித்தல்கள் கூட தற்போது தனிச் சிங்களத்திலேயே அனுப்பப்படுகின்றன.-என்றார்.

(ம-5)

## உள்ளூராட்சி சபைகளின் திறன் சேவை கணிப்பீடு

யாழ்ப்பாணம், ஒக. 11

வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளின் திறன் சேவைக் கணிப்பீடு தொடர்பான கலந்துரையாடல்கள் அந்தந்த உள்ளூராட்சி சபைகளில் நடத்தப்பட்டு வருகின்றன.

பல்ட்ரா என்னும் நிறுவனத்தால் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், அலுவலர்கள், சனசமுக நிலையப் பிரதிநிதிகள் பொதுமக்களுடன் கலந்துரையாடி பயிற்சிக் கையேடு தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் திறன் தேவை மதிப்பீடு என்பது உள்ளூராட்சி மன்றச் சட்டம், மக்களின் பங்களிப்பை முழுமையாகப் பெற்றுக்கொள்ளல், முரண்பாட்டுத் தீர்வு மற்றும் பலதுறைகள் தொடர்பாக ஏற்கனவே அவர்களிடம் உள்ள திறன்கள் மேலதிகமாக தேவைப்படும் திறன்கள் என்பன தொடர்பில் ஆராயப்பட்டு கையேடு தயாரிக்கப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள், சிவில் சமூக அங்கத்தவர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டு தனித்தனியாக கலந்துரையாடப்படவுள்ளது.

இதில் பெறப்படும் ஆய்வுகளின் பிரகாரம் வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் திறன் விருத்திக்கான பயிற்சிக் கையேடாக பயன்படுத்தக்கூடிய வகையில் தயாரிக்கப்படவுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள நகரசபைகள், பிரதேச சபைகள் போன்றவற்றில் கணிப்பீடு செய்யப்படவுள்ளதாக நிறுவன இணைப்பாளர் வே.வீரசிங்கம் குறிப்பிட்டுள்ளார். (ம-9)

## வடக்கு பெண்களின் நிலை என்ன? ஐ.தே.க. பெண் எம்.பி.கருத்து

கொழும்பு , ஒக. 11

வடக்கில் உள்ள மக்கள் அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டுமிருக்கிறார்கள். அங்குள்ள பெண்களை நாங்கள் சந்திக்கச் சென்றபொழுது அங்குள்ள பலர் அவர்கள் மத்தியில் சென்று எல்லாமே நன்றாகவே இருக்கிறது என்று சொல்லும்படி கேட்டிருக்கிறார்கள்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினரும் பெண் உரிமை செயற்பாட்டாளருமான ரோஸிசேனநாயக்க. ஆங்கில நாளேடு ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது:-

வடபகுதிக்கு நான் பலதடவைகள் பயணம் மேற்கொண்டிருந்துள்ளேன் அப்பொழுதெல்லாம் நான் எதை உணர்ந்தேன் என்றால் அங்குள்ள மக்கள் அடிமைப்படுத்தப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருக்கிறார்கள் என்பது தான்.

அங்குள்ள பெண்களின் நிலைமைகள் பற்றி அவரிடம் கேட்ட போது நாங்கள் அங்கே சென்றபோதெல்லாம் அவர்கள் எங்களுடன் பேசக்கூடாது என்று தடுக்கப்பட்டிருந்தார்கள், பெரும்பாலும் அங்கு சில ஆள்கள் அப்பகுதிகளுக்குச் சென்று எல்லாம் நன்றாகவே இருக்கிறது என்று சொல்லும்படி பெண்களைக் கேட்டுக் கொண்டிருப்பது அறிய முடிந்தது. ஆனால் அப்பெண்களுடன் நடத்திய உரையாடல்களின் பின்னர் அங்கே உண்மை நிலை அதுவல்ல என்பதை புரிந்து கொள்ள முடிந்தது என்றார்.

(ப)

## திருநாவுக்கரசு ம.வி. தரம் உயர்வு

தென்மராட்சி, ஒக. 11

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் தரம் ஒன்று ஏபி பாடசாலையாக உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த மே முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் கு.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

ஒன்று சி பாடசாலையாக இயங்கி வந்த கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம் ஒன்று ஏபி பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டதை அடுத்து இந்த வருடம் தொடக்கம் உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவுகளும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் உயர்தர வகுப்புகளில் கலை மற்றும் வர்த்தகம் ஆகிய பிரிவுகள் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. ஒன்று ஏபி பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டதை அடுத்து தென்மராட்சி கல்வி வலயத்தின் ஐந்தாவது கல்லூரியாக உருவாகக் கூடிய வாய்ப்புகள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் இந்தக் கல்வி வலயத்தைச் சேர்ந்த மீசாலை வீரசிங்கம் ம.வி. ஒன்று ஏபி பாடசாலையாக தரம் உயர்த்தப்பட்டதை அடுத்து அந்தப் பாடசாலை மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியாக மாற்றப்பட்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(ம-9)

## யாழ். ஆஸ்பத்திரி மோசடி குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம் , ஒக.11

யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா பணிப்பாளராக இருந்த காலத்தில் நிதி மோசடிகள் இடம்பெற்றமை தொடர்பில் கணக்காய்வுத் திணைக்களம் வைத்தியசாலையில் இரண்டு நாள்களாக விசாரணை மற்றும் ஆய்வுகளில் ஈடுபட்டு வருகிறது.

கொழும்பிலிருந்து வந்திருந்த கணக்காய்வுத் திணைக்கள அதிகாரிகள் இதில் ஈடுபட்டுள்ளனர் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி எஸ். ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார். வைத்தியசாலையில் இரண்டு நாள்களாக விசாரணை மற்றும் ஆய்வுகளில் ஈடுபட்டிருக்கும் கணக்காய்வுத் திணைக்களத்தினர் முன்னைய பதிவுகள், ஆவணங்கள் என்பவற்றைப் பரிசீலித்தும் சிலரிடம் விசாரணையும் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவித்தார்.

மோசடி மற்றும் அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்கிறார் என்று பணிப்பாளராக இருந்த பவானிக்கு எதிராக யாழ். மருத்துவ சங்கம் போர்கொடி தூக்கியிருந்தது. இது தொடர் பணிப் புறக்கணிப்பு செய்ய முற்பட்ட வேளையில் பவானி விசாரணைக்காக சுகாதார அமைச்சுக்கு அழைக்கப்பட்டார். இந்த நிலையிலேயே கணக்காய்வுத் திணைக்களம் வைத்தியசாலையில் விசாரணை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-4)

# குடிதண்ணீருக்குப் பஞ்சம் துணுக்காயில் அவலநிலை

## 20 கிராம மக்கள் பெரிதும் பாதிப்பு

அக்கராயன், ஒக.11

குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டினால் மகப்பேற்றை எதிர்நோக்கியுள்ள பெண்களும், சிறுவர்களும் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக துணுக்காய்ப் பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பநல உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

**இதனால் இங்கு வசிக்கும் மக்கள் நீண்ட தூரங்களில் அமைந்துள்ள கிணறுகளை நாடிச் செல்கின்றனர்.**

துணுக்காய்ப் பிரதேசம் எங்கும் தற்போது பெரியளவில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. குறிப்பாக இங்குள்ள 20 கிராமங்கள் தண்ணீரின்றிப் பெரும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

இதனால் இங்கு வசிக்கும் மக்கள் நீண்ட தூரங்களில் அமைந்துள்ள கிணறுகளை நாடிச் செல்கின்றனர்.

இங்கு ஒரே வேளையில் குளங்களின் புனரமைப்புக்கென நீர் திறந்து விடப்பட்டுள்ளதாலும் கடும் வறட்சி காரணமாகவும் குளங்களில் அறவே நீர் இல்லை. இதனால் கிணறுகளின் நீர்மட்டமும் வெகுவாகக் குறைந்துள்ளது. இதனால் குடிதண்ணீர் பிரச்சினை பூதாகாரமாக உருவெடுத்துக் காணப்படுகின்றது.

இதன் காரணமாகச் சிறார்களும், மகப்பேற்றை எதிர்நோக்கியுள்ள பெண்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குடும்பநல உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இவர்கள் சுத்தமான குடிதண்ணீரைப் பருகுவதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டுள்ளன. (க-18)



கிளிநொச்சி புதுமுறிப்புக்குளம் அணைக்கட்டின் புனரமைப்புப் பணிகள் துரித கதியில் இடம்பெற்று வருகின்றன. (க-18)

# வடிகால்களை அமைக்குமாறு மன்னார் மக்கள் வேண்டுகோள்

மன்னார், ஒக.11

எதிர்வரும் மழைகாலத்துக்கு முன்னர் வீதியோரங்களில் கழிவுநீர் வடிகால்களை அமைக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் மன்னார் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயல் திட்டத்தின் கீழ் வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் அவசர வேலைத் திட்டத்தின் கீழ் மன்னாரில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொங்கிறீட் வீதிகளால் மன்னார் மக்கள் மழைகாலங்களில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசின் நிதியுதவியுடன் வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினால் இந்தக் கொங்கிறீட் வீதிகள் மன்னாரில் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த வீதிகள் அதி உயரம் கொண்டவையாகக் காணப்படுகின்றன. ஆனால் இவற்றின் ஓரங்களில் கழிவு நீர் வடிகால்கள் எவையும் அமைக்கப்படவில்லை. இதனால் மழை காலங்களில் வீதிகள் அமைந்துள்ள இடங்களில் தேங்கி நிற்கும் வெள்ள நீரை அகற்ற முடியாத நிலை ஏற்படவுள்ளது.

ஏற்கனவே மழைகாலங்களில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்து மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்ற நிலையில் இந்த ஆண்டு மோசமானதொரு நிலை உருவாகுமென மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

பல மில்லியன் ரூபா செலவில் கொங்கிறீட் வீதிகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் வடிகால்கள் அமைக்கப்படாமையால் தமக்குத் துன்பங்களே ஏற்படப் போகின்றன என்றும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-12)

## வெளிநாடு செல்வோருக்கு உதவ வவுனியாவில் பிரதேச செயற்குழு

வவுனியா, ஒக.11

வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புப் பெறுவதற்கெனச் செல்வோருக்கு உதவிகளை வழங்கும் பொருட்டு பிரதேச செயற்குழு வொன்று வவுனியாவில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேச செயலக் கேட்போர் கூடத்தில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பிரதிநிதியாகிய எஸ்.புருஷோத்தமன் தலைமையில் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

இந்தச் செயற்குழுவின் தலைவராக மா. ஜெகன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். செயலாளராக எஸ்.சிவலிங்கமும், பொருளாளராக திருமதி கே. சயந்தாவும் உபதலைவராக ஏ. தர்மராசாவும், உபசெயலாளராக இ.லோஜினியும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் கிராம மட்ட அடிப்படையில் வேறு ஆறு பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க- 400)

## மாதாந்த கிளினிக் நடப்பதில்லை கர்ப்பிணித் தாய்மார் அவலம்

### 4 கி.மீ. நடந்து ஐயன்கன்குளம் செல்லும் நிலை

அக்கராயன், ஒக.11

துணுக்காய், புத்துவெட்டுவான் கிராமத்தில் குடும்ப நல உத்தியோகத்தரின் மாதாந்த கிளினிக் இடம்பெறாமையினால் மகப்பேற்றை எதிர்நோக்கும் பெண்கள் மற்றும் சிறார்கள் ஐயன்கன்குளம் செல்ல வேண்டிய அவலத்தில் உள்ளதாகப் புத்துவெட்டுவான் மக்கள் தெரிவிக்கின்றனர்.

குடும்ப நல உத்தியோகத்தரின் பணிமனை புத்துவெட்டுவான் கிராமத்தில் உள்ள போதிலும் கிளினிக் இடம்பெறாமையினால் நான்கு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஐயன்கன் குளத்துக்கு கைக்குழந்தைகளை ஏந்தியபடி பெண்கள் நடந்து செல்வதைக் காண முடிகின்றது.

இந்த நிலையில் குடும்ப நல உத்தியோகத்தர் தமது பணியைப் புத்துவெட்டுவான் கிராமத்தில் நடத்த வேண்டும் எனத் இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். இதேவேளை இடம்பெயர்வுகளுக்கு முன்னர் குடும்பநல உத்தியோகத்தரின் பணி இங்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை புத்துவெட்டுவான் அ.த.க.பாடசாலையினைத் தரமுயர்த்த வேண்டுமெனவும் பெற்றோர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

1956 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இக்குடியேற்ற திட்டத்தில் தரம் 5 வரையான வகுப்புகளுடன் மட்டுமே பாடசாலை இயங்கி வருகிறது.

இடைநிலை வகுப்புகளுக்கு 10 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்துக்கோ, அல்லது நான்கு கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஐயன்கன் அ.த.க.பாடசாலைக்கோ மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடிகளுக்கு மத்தியில் பயணம் செய்து கல்வி கற்று வருகின்றனர். இந்த நிலையில் புத்துவெட்டுவான் அ.த.க. பாடசாலையை தரம் உயர்த்தி இடைநிலை வகுப்புகளை உருவாக்குவதன் மூலம் புத்து வெட்டுவான் கிராம மாணவர்கள் கல்வியை இலகுவாகக் கற்பதற்கான வாய்ப்பு உருவாகும் எனவும் புத்துவெட்டுவான் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

## இரண்டு பாடசாலை மாணவர்களுக்கு பாதணிகள்

துணுக்காய், ஒக.11

துணுக்காய்ப் பிரதேசத்திலுள்ள கோட்டைகட்டிய குளம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள பாடசாலை மாணவர்களுக்குப் பாதணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பாதணிகள் வழங்கும் நிகழ்வு கடந்த 23 ஆம் கோட்டை கட்டியகுளம் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் அதிபர் இ.தங்கராசா தலைமையில் இடம்பெற்றது.

ரீஆர்ரீ தமிழ்ஒலிவனொலி நேயர்களின் நிதிப் பங்களிப்புடன் இந்தப் பாதணிகள் வழங்கப்பட்டன. ஆண்டு ஒன்று தொடக்கம் 11 வரையான 158 மாணவர்கள் இந்தப் பாதணிகளைப் பெற்றுக் கொண்டனர்.

போரினால் மிகவும் மோசமாகச் சேதங்களையும், பொருள் இழப்புக்களையும் சந்தித்த இந்த இரு கிராமங்களையும் சேர்ந்த மாணவர்கள் மிகவும் வறிய நிலையிலுள்ளதால் பாதணிகள் இல்லாது வெறும் காலுடன் பாடசாலைகளுக்குச் சென்று வந்தனர்.

தற்போது பாதணிகள் வழங்கப்பட்டுள்ளதால் இவர்கள் மகிழ்ச்சியுடன் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

மாணவர்களுக்கான பாதணிகளை துணுக்காய்ப் பிரதேச சபைத் தலைவர் வீ.இராசரத்தினம், பிரதேசசபை உறுப்பினர்களான எஸ்.ஜெயராசா, எஸ்.அமிர்தலிங்கம் ஆகியோர் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (க-415)

## கல்விளானில் காணிகள் புனரமைப்பு இடையூறு செய்தவர்கள் தொடர்பாக பிரதேச செயலகத்தில் முறைப்பாடு

அக்கராயன், ஒக.11

துணுக்காய் கல்விளான் கிராம மக்கள் தமது காணிகளைப் புனரமைப்பதற்கு இடையூறு செய்பவர்கள் தொடர்பாகத் துணுக்காய் பிரதேசசெயலகத்தில் முறைப்பாடு தெரிவித்துள்ளனர் .

அரசினால் காணிகள் வழங்கப்பட்டும் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாதிருந்த காணிகளை அவற்றின் உரிமையாளர்கள் புனரமைத்துப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளுமாறு துணுக்காய்ப் பிரதேச செயலகம் அண்மையில் அறிவித்திருந்தது. இதனையடுத்துத் தமது காணிகளை அதன் உரிமையாளர்கள் துப்புரவு செய்த போது மல்லாவியைச் சேர்ந்த இருவர் இடையூறு விளைவிக்க முற்பட்டனர் .

இதனால் இந்த மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து துணுக்காய் பிரதேச செயலகத்தில் முறைப்பாடு தெரிவித்துள்ளனர் .

இதேவேளை கல்விளான் குளம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. தற்போது சுமார் 400ஏக்கர் நிலப் பரப்பில் விவசாயத்தை மேற்கொண்டு வரும் மக்கள் குளம் புனரமைக்கப்பட்டதும் சுமார் 750 ஏக்கரில் நெற்செய்கையை மேற்கொள்ள முடியுமெனக் கல்விளான் கமக்கார அமைப்பின் தலைவரான பே.லம்போதரன் தெரிவித்தார்.

தற்போது துணுக்காயிலுள்ள அம்பலப்பெருமாள் குளம், கோட்டைகட்டிய குளம், ஐயங்கன்குளம், மருதங்குளம், பழைய முறிகண்டிக்குளம் என்பன புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## மாதிரிக் கிராமமாக மாற்றம் பெறும் வவுனியா பறநாட்டகல் கிராமம்

நெளுக்குளம், ஒக.11

வவுனியா பறநாட்டகல் கிராமத்தை மாதிரிக் கிராமமாக மாற்றுவதற்கு வடக்குப் புனர்வாழ்வு அதிகார சபை முயற்சி செய்து வருவதாக புனர்வாழ்வு அதிகார சபையின் வடமாகாணக் கிளைப் பொறுப்பதிகாரி பி.செல்வராசா தெரிவித்தார்.

பறநாட்டகல் கிராமம் போரினால் ஏற்கனவே பாதிக்கப்பட்ட கிராமமாகும். மிகவும் பின் தங்கிய இந்தக் கிராமத்தில் மீள்குடியமர்ந்த மக்கள் தற்போது வசித்து வருகின்றனர்.

இந்தக் கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்கெனக் கிராம அபிவிருத்திச் சங்கம் அமைப்பதற்கும், முன்பள்ளிக் கட்டடம் அமைப்பதற்கும், சனசமூக நிலையக் கட்டடம் அமைப்பதற்கும் தலா 10 லட்சம் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதைவிடப் பிள்ளையார் ஆலயத்தின் புனரமைப்புக்கென 4 லட்சம் ரூபாவும், அடைக்கலமாதா ஆலயத்தின் புனரமைப்புக்கென 3 லட்சம் ரூபாவும், குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு 3 லட்சம் ரூபாவும், விளையாட்டு மைதானத்தைப் புனரமைப்பதற்கு 2 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் உள்ளக வீதிகளை அமைப்பதற்கு 35 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நான்கு பொதுக் கிணறுகளை அமைப்பதற்கு 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவும், இந்து, கிறிஸ்தவ மயானங்கள் அமைப்பதற்கு 3 லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பெண்களுக்குத் தையல் உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் செல்வராசா மேலும் தெரிவித்தார். (க-402)

## பெற்றோருக்கு பாராட்டு

அக்கராயன், ஒக.11

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தின் உருவாக்கத்தில் பெற்றோர்களின் பங்களிப்பு முக்கியமானதாகும். இவ்வாறு பாராட்டியிருக்கின்றார் அக்கராயன் கிராம அலுவலரான கு.துஷ்யந்தன்.

அக்கராயன் ஆரம்ப வித்தியாலயக் கட்டடங்கள் அமையவுள்ள காணியில் துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டு வரும் பெற்றோர்களுக்கு மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு பெற்றோர்கள் மேற்கொள்கின்ற வேலைகளை வேலைகளாகக் கருதாமல் ஒரு பாடசாலையை உருவாக்குகின்றோம் என்ற உள்ளுணர்வுடன் செயற்பட வேண்டும். இந்த ஆரம்ப வித்தியாலயத்தின் உருவாக்கத்தில் பெற்றோர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகக் காணப்படுகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)


## விபத்தில் முதியவர் காயம்

நீர்வேலிச் சந்தியில் நேற்று இடம்பெற்ற மினிபஸ்-சைக்கிள் விபத்தில் சைக்கிளில் சென்ற முதியவர் தலையில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் நீர்வேலி.வடக்கைச் சேர்ந்த கந்தையா தம்பிராசா (வயது-65) என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

நீர்வேலியில் இருந்து புத்தூர் நோக்கிச் சென்றுகொண்டிருந்த போது எதிரே வந்துகொண்டிருந்த வாகனத்தை முந்திச் செல்லமுற்பட்ட வேளை மினிபஸ் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த முதியவரை மோதியதாக தெரிவிக்கப்படுகிறது. பஸ் சாரதி கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் முதியவர் கோப்பாய் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (4)

## மரண அறிவித்தல்



### மரியதாஸ் நேவிஸ் டெல்றொக்சன்

பாசையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட மரியதாஸ் நேவிஸ் டெல் றொக்சன் கடந்த (08.08.2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் மரியதாஸ் நேவிஸ் (பொஞ்சின்)-கலிஸ்ரா தம்பதியரின் பாசமிகு மகன் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் இன்று (11.08.2012) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
29/2, செபஸ்ரியன் றோட்,
பாசையூர், யாழ்ப்பாணம்.

(21641)(3.14)

## தீக்காயங்களுக்கு இலக்கான பெண் ஆஸ்பத்திரியில்

தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் பெண் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்றுமாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த எஸ்.வசந்தி (வயது-38) என்ற குடும்பப் பெண்ணே தீக்காயங்களுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இவர் சமையல் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை இவரது ஆடையில் தீப் பிடித்து விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது. (16)

## மரண அறிவித்தல்

### *மாரிமுத்து செல்வராசா (அப்பையா)*

(உரிமையாளர் அம்பாள் ஸ்ரோர் மானிப்பாய்)



சுதுமலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து செல்வராசா (அப்பையா) நேற்று (10.08.2012) வெள்ளிக்கிழமை காலமானர்.

அன்னார் இராஜினியின் (தபாலதிபர் உப தபாலகம், புதுமடம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து- பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், இராசையா (இளைப்பாறிய தபாலதிபர் யாழ்ப்பாணம்), தங்கரத்தினம் (பிரான்ஸ்), மகேஸ்வரி, அன்னரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஈஸ்வரி, காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் செல்வராசா, தர்மலிங்கம், தவராசா- இரஞ்சிதமலர், மகேந்திரன்- டெய்சிராணி, குகேந்திரன்- காந்தரூபி, மோகனதாஸ்- ஸ்ரீரஞ்சினி, கௌரி நாயகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.08.2012) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகப் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்,வாடிக்கையாளர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(21648)(3.14)

சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.

தகவல்:
மனைவி, (இராஜினி செல்வ்ராஸா)
உறவினர்கள்

## மரண அறிவித்தல்



### கதிரவேலு கனகசுந்தரம்

(சாமியார் - பிரபல வர்த்தகர் சுன்னாகம்)

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 15A, அசரப்பா வீதி, நீர்கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு கனகசுந்தரம் கடந்த 07.08.2.2012 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், நாகம்மாவின் பேறாமகனும், கனகரெத்தினம்-ஞானம்மா தம்பதியினதும் மற்றும் வள்ளியம்மையின் அன்பு மருமகனும், செல்வமலரின் அன்புக் கணவரும், இராசம்மா (பிரான்ஸ்), காலஞ்சென்ற பார்வதி, கண்ணம்மா, நாகம்மா (பிரான்ஸ்), தனபாலசிங்கம், காலஞ்சென்ற கீர்த்திசிங்கம், லோகநாயகி (பிரான்ஸ்) மற்றும் காலஞ்சென்ற ஏலாளசிங்கம் மற்றும் சுசீலா (பிரான்ஸ்), நித்தியகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜியானந்தி (சுவிஸ்), கிருபானந்தி (நோர்வே), ஜெயானந்தி (சுவிஸ்), அகிலன் (பிரான்ஸ்), அனுலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், இராமலிங்கம், ஐயாத்துரை, குமாரசாமி மற்றும் ஜீவரட்ணம் (கனடா), இராசமலர் (பிரான்ஸ்), யோகமலர் (பிரான்ஸ்), ஞானமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுரேஸ்குமார் (சுவிஸ்), சண்முகலிங்கம் (நோர்வே), கலைச்செல்வன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும், சாகித்யா, அஞ்சனா, அட்சயா, ஆதர்ஷா, அட்சரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், ரதீஸ்வரி (கனடா), ஸ்ரீஸ்கந்தராஜா, சண்முகநாதன் (பிரான்ஸ்), சச்சிதானந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.06.2012) சனிக்கிழமை மு.ப. 8.30 மணிமுதல் மாலை 6.00 மணிவரை W.S.Fernanado & Son, No. 134, சிலாபம் வீதி, நீர்கொழும்பு என்ற விலாசத்திலுள்ள மலர்ச்சாலையில் அஞ்லிக்காக வைக்கப்பட்டு, நாளை (12.06.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப. ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக நீர்கொழும்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

15A, அசரப்பா வீதி,
நீர்கொழும்பு.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### *நாகலிங்கம் தங்கராசா*



வலவன் தோட்டம், கரணவாய் தெற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
**நாகலிங்கம் தங்கராசா**
நேற்று (10.08.2012) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-சின்னத் தங்கம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சரவணமுத்து, கந்தையா, சிவபாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அமராவதியின் அன்புக் கணவரும், ஆனந்தகுமாரன்(சுவிஸ்), நகுலகுமாரி, ஜெயக்குமாரி(சுவிஸ்), சந்திரகுமார்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்சிகா(கொழும்பு), ஞானசம்பந்தன்(டோகா), பஞ்சலிங்கம்(சுவிஸ்), சிவஜா(லண்டன்) ஆகியோரின் மாமனும், பிரவீனா, பிரதீபா, பிரநீத்தா, ஆகாஸ், ஆரணிக்கா, நிரஞ்சன், நிரஞ்சனா, அனோஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (12.08.2012) ஞாயிற்றுக்கிழமை வலவன் தோட்டத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2 மணிக்கு பூவரசத்திட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பலவன் தோட்டம்*
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.*

(சி/2319)(9)

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

## மரண அறிவித்தல்

### *திருமதி தம்பையா நல்லபிள்ளை*



கதிரிப்பாய் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் 3ஆம் சந்தி கெருடாவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பையா நல்லபிள்ளை நேற்று (10.08.2012) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை- சிவக்கொழுந்து தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கணபதி தம்பையாவின் பாசமிகு மனைவியும், சசிகலாதேவி, கோடீஸ்வரன் ஆகியோரின் அன்புத்தாயும், திலீப்குமாரின் அன்பு பெரியதாயும், குகனேந்திரா ஐயரின் அன்பு மாமியும், யாழினி, திவ்வியா, ரவிராஜ், சாளினி, தட்சாயினி, முரளிதரன், கிருஸ்ணாகரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கல்யாணியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.08.2012)சனிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காட்டுப்புலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் சந்தி, கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.

(சி/2320)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## இதய அஞ்சலி



### செல்வி காமாட்ஷி கந்தையா

**(பிரதம மேற்பார்வையாளர் துர்க்காபுரம் மகளிர் இல்லம் தெல்லிப்பழை)**

எங்கள் இல்லச் சிறுமிகளின் வாழ்வே தன் வாழ்வென வாழ்ந்து 10.08.2012 அன்று மாலை துர்க்கா தேவியின் திருவடியை அன்னார் அடைந்துவிட்டார். அன்னாரின் இறுதிவை பவம் அவர் பிறந்த மாரிசன்கூடல் இளவாலையில் நடைபெறும்.அன்னாரின் ஆத்மா சாந்திபெற துர்க்கா தேவியை வேண்டுகின்றோம்

*நிர்வாகசபை,*
*துர்க்காபுரம் மகளிர் இல்லம்,*
*தெல்லிப்பழை.*

(சி/2322)(9)

*மகளிர் இல்லப்பிள்ளைகள்,*
*பணியாளர்கள், துர்க்காபுரம்.*

# மரண அறிவித்தல்



## ஐயம்பிள்ளை மார்க்கண்டு

மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை மார்க்கண்டு நேற்று(10.08.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை- தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் கண்மணியின் அன்புக் கணவரும் மார்க்யசோதரன்(லண்டன்), ஜெயதரன், முரளிதரன், கிருஷாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுமதி (லண்டன்), தமயந்தி, ஜெயகௌரி, தயாபரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் நிலக்சனா(லண்டன்) கிருத்திகா, நிக்சன்,டனுசன் ஆகியோரின் அன்புப்பேரனும் பவளம்மா, காலஞ்சென்றவர்களான எலிசபத்(பூமணி), சின்னராசா(அமலதாஸ்), அப்புக்கண்டு(வில்லியம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(12.08.2012) ஞாயிற்றுக் கிழமை மு.ப.10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோயில் வீதி,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை விவசாய ஆசிரியை
திருமதி. திருஞானவதி கணேஸ்வரன்
அவர்களின் பாசமிகு தாய்
திருமதி
**புஸ்பவதி கனகரத்தினம்**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(21635)(9.14)

**ஆசிரியர் நலன்புரி கழகம்**
**யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.**

# மரண அறிவித்தல்



## குமாரசாமி மங்கயற்கரசி

கேணியடி, திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் பழைய வீதி, கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி மங்கயற்கரசி (09.08.2012) வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி- சின்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற குமாரசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வள்ளியம்மை, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியும், சிவகாமிப்பிள்ளை, அன்னலட்சுமி, காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, சதாசிவம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சத்தியபாமா (பாமா-லண்டன்), சங்கரகுமார் (சங்கர்-லண்டன்), துஷ்யந்தன் (துஷி- பிரான்ஸ்), துஷ்யந்தி (நந்தினி- லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும்,வாணிதரன் (லண்டன்), திரிவேணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், மிதுரா, வர்சினி, சாதனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், இளங்கோ (சுவி ஸ்), குமார் (சுவிஸ்), ராஜன் (ஜேர்மனி), இளவரசி (ஜேர்மனி), இளவேணி (இந்தியா) ஆகியோரின் சிறியதாயும், துளசிதரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற அருள் மோகன் மற்றும் சங்கீதா, கிருபாகரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழைய வீதி,
கோப்பாய்.

00447404587827 (லண்டன்)
0033760334054 (பிரான்ஸ்)

தகவல்:
இ.தனபாலசிங்கம்(சகோதரன்)
குடும்பத்தினர்.

# காணி விற்பனைக்குண்டு

நல்லூர் வடக்கில் பூங்கனிச்
சோலைக்கு முன்பாக 2 பரப்பு காணி
உடன் விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு: 077 618 4431

(21647) (9.14)

# மரண அறிவித்தல்



## திருமதி. மேரி மாகிறேற் யோசப்

(ஓய்வு பெற்ற ஆசிரியை, புனித ஜேம்ஸ் பாடசாலை)

இல.4, மருதடி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. மேரி மாகிறேற் யோசப் கொழும்பில் 05.08.2012அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை (தம்பு)- ஞானம்மாவின் அருமை மகளும், காலஞ்சென்ற இன்னாசிப்பிள்ளை முத்துராசாவின் (ஓய்வு பெற்ற பிரதம எழுதுவினைஞர், பொலிஸ் திணைக்களம்) அருமை மனைவியும், காலஞ்சென்றவர்களான பி.எஸ். அருளானந்தம், டெய்சி மேரி யோசப் மற்றும் திருமதி செபஸ்தியாம்பிள்ளை ஆகியோரின் அருமைச்சகோதரியும்; கென்றி மோகனதாஸின் பாசமிகு தாயும், நிர்மலாவின் அருமை மாமியும், காலஞ்சென்ற வைத்திய கலாநிதி மேவின் யோசப் மற்றும் சட்டத்தரணி ராஜா ஜோசப் (Ph.D.) ஆகியோரின் சித்தியும், காலஞ்சென்ற மண்டலசேகரத்தின் (ஓய்வு பெற்ற ஆசிரியர் கோப்பாய்) அவர்களின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 12.08.2012 முற்பகல் 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.30 வரை அஞ்சலிக்காக கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணத்திலும் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை மறுதினம் (13.08.2012) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்செஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:J.A. புஸ்பராஜா
(அன்ரன்- பெறாமகன்)

(சி/2221)(3)


# யாழ். தென்மராட்சியில்

உதயன் சுடர் ஒளி நாளிதழின் ஊடக அனுசரணையுடன்

# புலமைச்சுடர் நடாத்தும்

## தரம் 5 மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு

தென்மராட்சி கலைகலாசார மண்டபம் (சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி)

வளவாளர்கள்
திரு. N. S. தீபன் (வவுனியா)
B.A, PG Dip in Edu, Dip in Teach
திரு. Y. தயாளன் (கண்டி)
Dip in Teach

காலம் 12.08.2012 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் காலை 9 மணி தொடக்கம் பி. ப 4.00 மணி வரை

ஒழுங்கமைப்பு
றோட்டறிக் கழகம்
யாழ்ப்பாணம்

மேலதிக தொடர்புகளுக்கு :
071 6850005,
071 6182182
0775298351

அனைத்து மாணவர்களும் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


# University of Jaffna
# Bids for the sale of used vehicles

**Sealed Bids are hereby invited for sale of under mentioned used vehicles belonging to the University of Jaffna.**

### Inspection of vehicles

**Vehicles could be inspected from 9.00 a.m to 12.00 noon on weekdays from 13.08.2012 to 27.08.2012 at University of Jaffna P.O.Box 57, Thirunelvely, Jaffna.**

### Issues of Bid Forms

**Bid forms could be obtained from the Administration Branch of the University of Jaffna, during office hours up to 3.00p.m from 13.08.2012 to 27.08.2012 on production of the receipts obtained from the shroff of the University upon payment of non-refundable bid fee and refundable bid deposit in respect of each bid as follows.**

| Vehicle NO | Type of vehicle | Year of manufacture | Bid fee (nonrefundable) | Bid Deposit(Refundable) |
|---|---|---|---|---|
| 300-5284 | Nishan motor car | 1998 | 1000/= | 2000/= |
| 500-2151 | Scootor | 1997 | 500/= | 1000/= |

Duly completed bid could either be sent by Registered post addressed to the Registrar University of Jaffna , P.O.Box 57, Thirunelvely, Jaffna. or deposited in the bid box kept at the office of the Registrar of the University on or before 03.09.2012.

The top left-hand corner of the envelope enclosing bids should be clearly marked as "Bids for Used Vehicles" Birds will be opened on 03.09.2012 at 2.30 p.m at the Board Room of the University. Bidder or their authorized representative may be present at the opening of bids.

The decision for the procurement committee of the University of Jaffna will be deemed final and binding with regard to the matters pertaining to bids.

**Chairman,**
**Procurement Committee,**
**University of Jaffna.**
**Thirunelvely,**
**Jaffna.**

(c/2318)(9)

# இளைஞன் காயம்

யாழ்ப்பாணம், ஓக.11

நல்லூர் கந்தசுவாமி கோயில் வெளி வீதியில் நேற்றுமாலை இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலின்போது ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தில் காங்கேசன் துறை வீதியைச் சேர்ந்த பிரசன்னா (வயது 19) என்பவரே தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தர்க்கத்தில் ஈடுபட்ட இரு இளைஞர் குழு தமக்கிடையே மோதிக் கொண்டதாலேயே மேற்படி இளைஞர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம்தொடர்பில் யாழ். பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (16)

## உலக உணவுத் திட்டம் வழங்கும்

# நிவாரணப் பொருள்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக.11

உலக உணவுத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படும் நிவாரணப் பொருள்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வியாழக்கிழமை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் தலைமையில் இந்த நிவாரணம் தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஏற்கனவே தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இந்த உலக உணவு திட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட நிவாரணத்துக்கு 21 வகையான அத்தியாவசியப் பொருள்களை பயனாளிகளுக்கு பரீட்சார்த்தமாக விநியோகித்த நிலையில் வெற்றியளித்துள்ளது.

இந்தப் பரீட்சார்த்த நடவடிக்கையை ஏனைய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் விஸ்தரிக்கும் என இந்தக் கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டது.

இந்தப் புதிய விநியோக நடைமுறையை சங்கங்கள் உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும்.

இந்தப் பொருள்கள் தரமானவையாகவும் நியாயமான விலையிலும் உரிய காலத்தில் பயனாளிகளைச் சென்றடையவேண்டும். இதற்குச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள் மற்றும் தலைவர் போன்றோர் உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த விநியோகத்தில் ஏதாவது தவறுகள் மற்றும் குளறுபடிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட சங்கங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.

இந்த விநியோகங்கள் உரிய முறையில் பயனாளிகளை சென்றடைவதை அந்த சங்கங்களின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த விநியோகங்களை ஒவ்வொரு மாதமும் 20 ஆம் திகதிக்கு முன்னர் பயனாளிகளுக்கு விநியோகித்து முடிக்க வேண்டும். பின்னர் 22 ஆம் திகதி விநியோகம் சம்பந்தமான முழு அறிக்கையையும் சங்கங்கள் சம்பந்தப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக ஆணையாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும். இந்த புதிய நிவாரண விநியோக நடைமுறையால் பயனாளிகள் மற்றும் சங்கங்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்திக் கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் கூட்டுறவுச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள் மற்றும் உலக உணவுத்திட்ட யாழ். மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ம-17)

### சேவைப் பிரமாணக் குறிப்பை அறிமுகப்படுத்த உத்தரவு

யாழ்ப்பாணம்,ஒக.11

நாடு தழுவிய ரீதியில் செயற்திட்ட மற்றும் நிகழ்ச்சித்திட்ட அலுவலர்களுக்கு என ஒதுக்கப்பட்டு வெளியிடப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பை அறிமுகப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இதற்கான அவசர உத்தரவை மாகாண பிரதம செயலாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

1998 இற்கு பின்னர் நியமனம் பெற்ற பட்டதாரி அலுவலர் அனைவரையும் இந்தத் திட்டத்திற்குள் உள்வாங்குவதுடன் இதற்கான கால நீடிப்புகளை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை வழங்கியுள்ளார்.

இந்தத் திகதிக்குள் உள்வாங்கப்பட்டவர்கள் அனைவருக்கும் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு உள்வாங்கப்பட்ட வகையில் பதவி உயர்வு வகுப்பு, தரம் என்பன விதிவிலக்களிக்கப்பட்ட சூழ்நிலையில் வழங்கலாம் எனவும் இதற்கான நடவடிக்கைகளை அடுத்த மாகாண பிரதம செயலாளர்கள், மாகாண பொது நிர்வாக செயலகம், பகிரங்க சேவை ஆணைக்குழுவுக்குத் தெரியப்படுத்தி மாகாண அரச பட்டதாரிகளின் நலன்கள், இடமாற்றங்கள், பதவி உயர்வுகள், வகுப்புகளை உடனுக்குடன் வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சித் திட்ட அலுவலர் சேவைக்குள் உள்வாங்க விருப்பமில்லாத பட்டதாரி அலுவலர்கள் தற்போதுள்ள பதவிகளில் தமது கடமைகளையும் பதவி உயர்வுகளை, தரங்களை, இடமாற்றங்களை பெற்றுக் கொள்ளலாம் என பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ம-50)

### மரக்கறிச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஒக.11

யாழ். குடாநாட்டில் விவசாயிகள் கடந்த ஜூலை மாதத்தில் ஆயிரத்தி 89 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் மரக்கறிச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் மரவள்ளி 133 ஹெக்ரெயரிலும், பயற்றை 113 ஹெக்ரெயரிலும், கத்தரி 106 ஹெக்ரெயரிலும் வெண்டி 106 ஹெக்ரெயரிலும் பயிரிடப்பட்டுள்ளன.

இதனைவிட ஏனைய மரக்கறி வகைகளை விவசாயிகள் ஓரளவு பயிரிட்டுள்ளனர்.

கடந்த மாதத்தில் விவசாயிகள் மரவள்ளிச் செய்கையில் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர் என்று விவசாய திணைக்களத்தின் புள்ளி விவரங்களில் இருந்து அறிய முடிந்தது. எனினும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மரவள்ளி விலை சற்று அதிகரித்துக் காணப்பட்டது.

தற்போது அதன் விலை கிலோ 30 ரூபாவாக வீழ்ச்சியடைந்தும் காணப்படுகின்றது. (ம-17)



யாழ்ப்பாணம் அத்தியடி ஜே/78 கிராம அலுவலர் பிரிவில் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு குறித்த செயற்பாடுகள் சிரமதானப் பணிகள் நடைபெற்ற போது கிராம அலுவலர், குடும்ப நல உத்தியோகத்தர்கள் மாநகர சபை உறுப்பினர் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு பிரிவின் பகுதிகளைத் துப்புரவு செய்தனர். (ம-7)

## இடர்களின்போது பாதிப்புறும் இடங்கள் யாழ்.மாவட்டத்தில் விவரம் திரட்டல்

வலி. வடக்கு, ஒக.11

யாழ். மாவட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் இடர்கள் ஏற்படும்போது பாதிக்கப்படும் இடங்கள் தொடர்பான விவரங்கள் இனங்காணப்பட்டு வருகின்றன.

வளங்கள், முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் கட்டடங்கள் உட்பட முக்கிய இடங்கள் தொடர்பான விவரங்கள் இதற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதங்களில் இதற்கான பயிற்சியை மேற்கொள்வதற்கான இரண்டு நாள் பயிற்சி வகுப்புகள் வழங்கப்பட்டு நிறைவு பெற்ற நிலையில் தற்போது கிராம அலுவலர் பிரிவுகள் ரீதியாக இத்தகைய விவரங்களை உள்ளடக்கிய வரைபடங்கள் சீர்செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கெனத் தற்போது நியமனம் பெற்ற பட்டதாரிப் பயிலுநர்கள் மற்றும் காணி நிலப்பயன்பாட்டு உதவியாளர்கள், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஏனைய துறை சார்ந்த நிபுணர்களையும் உள்ளடக்கி இந்தச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றது.(ம-86)

### மானிய அடிப்படையில் பசுமாடு வழங்கல்

யாழ். மாவட்டத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகளுக்கு திவிநெகும திட்டத்தின் கீழ் சுமார் அறுபதாயிரம் ரூபா பெறுமதியான பசு மாடுகளை மானிய அடிப்படையில் வழங்க பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே நான்கு மாடுகளைக்கொண்ட குடும்பம் ஒன்ற மேலும் ஒரு மாட்டை கொள்வனவு செய்ய முன்வரும் நிலையில் இதற்கு அறுபதாயிரம் ரூபாவை மானியமாக வழங்கவுள்ளது.

இத்தகைய மானியம் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலர் பிரிவுகளில் ஒருவருக்கு மட்டுமே வழங்கப்படும். (ம-86)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரி சுகாதாரம் கண்காணிப்புப் பணி நகரசபையிடம்

தென்மராட்சி, ஒக.11

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் சுகாதாரப் பணிகளை நகர சபைப் பொது சுகாதாரப் பரிசோதகர் கண்காணிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொது சுகாதாரப் பரிசோதகரே வைத்தியசாலை சுகாதாரப் பணிகளையும் கண் காணித்து வந்தார்.

தற்போது நகர சபைக்குத் தனியான பொது சுகாதாரப் பரிசோதகர் நியமிக்கப்பட்டதை அடுத்து நகர சபைப் பணிகளுடன் வைத்தியசாலை சுகாதாரப் பணிகளையும் கண் காணிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை சாவகச்சேரி நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், சாவகச்சேரி வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி ஆகியோருடன் நடத்திய கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# ஐந்து வைத்திய அதிகாரிகள் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு

தென்மராட்சி, ஒக.11

வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சியைப் பூர்த்தி செய்த ஐந்து வைத்திய அதிகாரிகள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டு நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலையில் பயிற்சி பெற்ற நால்வருக்கும் சிலாபம் பொது வைத்தியசாலையில் பயிற்சி பெற்ற ஒருவருக்கும் சுகாதார அமைச்சால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டதை அடுத்து புதிய சிகிச்சைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்படலாம் என்று நோயாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

இதேவேளை சுகாதார அமைச்சால் வருடாந்த இடமாற்றப் பட்டியலில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட மூன்று வைத்திய அதிகாரிகள் இன்னமும் கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். போதனா வைத்தியசாலை, களுபோவில வைத்தியசாலை, திருகோணமலை வைத்தியசாலை ஆகியவற்றில் கடமையாற்றிய வைத்திய அதிகாரிகள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட போதிலும் இதுவரை கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம-9)

## மண்டைதீவுக்கு மின்சாரம் ஏற்பாடுகள் துரித கதியில்

யாழ்ப்பாணம், ஒக.11

மண்டைதீவு பிரதேசத்துக்கு விரைவில் மின்சாரம் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தப் பகுதிக்கு மின்சார விநியோகத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கு முன்னேற்பாடாக கடல் மார்க்கமாக மின் இணைப்பை மேற்கொள்வதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தீவுப் பகுதியில் சகல பிரதேசங்களுக்கும் மின்சாரம் விநியோகிக்கப்பட்டும் கூட மண்டைதீவுக்கு இதுவரை மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படாமையால் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மின்சாரம் இன்மையால் இந்தப் பிரதேசம் இருளில் மூழ்கிக்காணப்படுகின்றது. ஏற்கனவே இந்தப் பிரதேசத்துக்கு மின்சாரம் விநியோகிப்பதற்கு முன்னேற்பாடாக மின்கம்பங்கள் நடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

## தனங்களப்பில் புனரமைக்கப்பட்ட குளங்களிலும் தண்ணீர் இல்லை

தென்மராட்சி, ஒக.11

தென்மராட்சி தெற்கு தனங்களப்பு பகுதியில் பல லட்சம் ரூபா செலவில் கடந்த வருடம் புனரமைக்கப்பட்ட இரு குளங்களிலும் தண்ணீர் இல்லை.இந்த நிலையில் கட்டாக்காலி கால்நடைகளும் மேய்ச்சலுக்கு விடப்படும் கால்நடைகளும் நீரின்றி தவிப்பதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

சாவகச்சேரி தனங்களப்பு வீதியின் கிழக்குப் புறத்தில் நெல் வயல்களுக்கு இடையில் உள்ள மரவில்குளம், மேற்குப் புறத்தில் உள்ள பூதவராயர்குளம் என்பன பல லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டன.

முன்னைய காலங்களில் இந்தக் குளங்கள் வருடா வருடம் ஆழமாக்கப்படுவது வழமை. இந்தப் பகுதியில் கால போக நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்ட பின்னர் பெரும் நிதிச் செலவில் இயந்திரங்கள் மூலம் ஆழமாக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த நிலையில் இந்தப் பகுதியில் உள்ள அனைத்துக் குளங்களும் நீரின்றிக் காணப்படுவது போல இந்தக் குளங்களும் காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.

இதேவேளை வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கீரை வாய்க்கால் மதகுகளைப் பார்வையிட்ட உயர் அதிகாரிகள் மதகுகளை உடைத்து புதிதாக அமைக்க உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (ம-9)

### கால்நடை வளர்ப்பு 39 பயனாளிகள் உதவி பெறத் தகுதி


யாழ்ப்பாணம், ஒக. 11

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வாழ்வெழுச்சித் திட்டத்தில் கால்நடைப் பிரிவின் ஒரு கட்டமாக 39 பயனாளிகள் உதவிகள் பெறத் தெரிவாகியுள்ளனர்.

பால் மாடுகள் வளர்ப்புக்கு ஒன்பது பயனாளிகளும் ஆட்டுப் பண்ணைக்கென பத்து பயனாளிகளும் மாட்டுத் தொழுவம் அமைக்க 20 பயனாளிகளும் தெரிவாகியுள்ளனர் என்று நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தெரிவித்தார். (ம-7)

# புறக்கணிப்போம் டெசோவை அழைப்பு விடுக்கிறார் சீமான்

சிங்கள பௌத்த இனவாத அரசின் கொடுங்கோன்மையில் இருந்து விடுதலை பெற்று தமிழீழ தனி அரசை ஏற்படுத்துவது ஒன்றே இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வுக்கு ஒரே வழி. ஈழத் தமிழர்களுக்கு எந்த நன்மையையும் கொண்டு வராத டெசோவைப் புறக்கணிக்க ஒன்றுசேருங்கள். நாம் தமிழர் கட்சித் தலைவர் சீமான் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார். இந்த விடயம் தொடர்பாகச் சீமான் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.



அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் பூர்வீகக் குடிகளான தமிழர்கள் முழு அரசியல் உரிமையுடனும், இறைமையுடனும், பாதுகாப்புடன் வாழ ஒரே வழி தனித் தமிழீழமே. இந்த இலக்கை எட்ட தங்கள் இன்னுயிரைத் தந்த போராளிகளின் ஈகையை அவமதிக்கும் செயலே டெசோ என்ற பெயரில் தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி கூட்டும் ஈழத் தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்பு மாநாடு.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதம் என்று சித்திரித்து, அதனை ஒழிக்கும் போர் என்று கூறி, நமது சொந்தங்கள் ஒன்றே முக்கால் லட்சம் பேரை சிங்கள அரசு கொன்று குவித்தது.

விடுதலைப் புலிகளை அழித்துவிட்டோம், போர் முடிந்துவிட்டது என்று 2009ஆம் ஆண்டு மே 19ஆம் திகதி அறிவித்த இலங்கை ஜனாதிபதி, போர் முடிந்து 3 ஆண்டுகளுக்கு மேலாகியும், போரால் இடம் பெயர்ந்து சொந்த மண்ணில் ஏதிலிகளாகவுள்ள மக்களை இதுவரை முழுமையாகக் குடியமர்த்தவில்லை.

> தென்னிலங்கையில் இருந்து பல்லாயிரக் கணக்கில் சிங்களவர்கள் தமிழர் பகுதிகளில் குடியேற்றப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தமிழர்களின் விளை நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

மாறாகத் தமிழர் வாழ்ந்த பூமியில் 30 விழுக்காட்டுக்கு மேல் சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. தென்னிலங்கையில் இருந்து பல்லாயிரக் கணக்கில் சிங்களவர்கள் தமிழர் பகுதிகளில் குடியேற்றப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தமிழர்களின் விளை நிலங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

இதைப்பற்றி எல்லாம் கடந்த 3 ஆண்டு காலத்தில் வாய் திறக்காத தி.மு.க. தலைவர் கருணாநிதி, டெசோ அமைப்புக்கு மீண்டும் உயிரூட்டி, தமிழீழ விடுதலைக்கு தனது உயிர், பொருள், ஆவி அனைத்தையும் அளிப்பேன் என்றும், தான் மரணிப்பதற்கு முன்னர் தமிழீழம் மலர்வதை பார்க்க விரும்புவதாகவும் கூறினார்.

தமிழினத்தை திட்டமிட்டு அழித்தொழித்த இலங்கை அரசுக்கு என்றைக்காவது தி.மு.க. நெருக்கடி கொடுத்துள்ளதா? அப்படி நெருக்கடி கொடுக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தி கூட்டமோ மாநாடோ நடத்தியுள்ளதா?

இந்த நிலையில் தி.மு.க. தலைவர் நடத்தும் இந்த டெசோ மாநாடு, ஈழத் தமிழரின் விடுதலைக்காகவோ அல்லது அவர்களின் நல்வாழ்வுக்காகவோ நடத்தப்படவில்லை.

அது முழுக்க முழுக்க தி.மு.கவின் அரசியல் செல்வாக்கை மீண்டும் தூக்கி நிறுத்தும் உள்நோக்கம் கொண்ட தமிழினத் துரோக முயற்சியாகும். இதில் ஈழத்தில் இருந்து எவர் கலந்துகொண்டாலும் அது தமிழினத்துக்குச் செய்யும் துரோகமாகவும், கருணாநிதியின் சுயநல அரசியலுக்கு துணை போவதாகவுமே அமையும்.- என்றுள்ளது. (ம)

# வழக்குப் போட்டு யாரை மிரட்டுகிறார்

## ஜெயலலிதா மீது ஸ்டாலின் பாய்ச்சல்

முதல்வர் ஜெயலலிதா வழக்குப் போட்டு யாரை மிரட்ட நினைக்கிறார் என்று தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

முதல்வர் ஜெயலலிதா என் மீது தொடுத்துள்ள வழக்கில் நான் பேசியவை அடிப்படை ஆதாரமற்றவை என்று கூறியிருக்கிறார். நான் கூறியது ஆதாரமற்றவையாக இருந்தால் அதனை ஆதார பூர்வமாக நிரூபிக்க வேண்டியதுதான் முதல்வர் பணி.

தவிர, எதற்கு எடுத்தாலும் வழக்குத் தொடர்வது என்ன நியாயம்? நீதிமன்றங்களுக்கு இந்த ஆட்சியில் வேறு வேலை இல்லை என்று முதல்வர் நினைக்கிறாரா?

அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் பொது நிகழ்ச்சிகளில் பேசினால் அதனை பத்திரிகைக்காரர்கள் வெளியிடத்தான் செய்வார்கள். அதற்காக அந்தப் பத்திரிகைகள் மீதெல்லாம் வழக்கு என்றால் இப்போது நெருக்கடி நிலையா நீடிக்கிறது? ஒரு நாட்டில் ஒரு முதல்வர் மாதக் கணக்கில் ஓய்வெடுத்தால் மக்கள் பிரதிநிதிகள் அதைப் பற்றிப் பேசக்கூடாதா?

சென்னையில் கொலரா இல்லை என்பதை நிரூபிக்கத் தயாரா என்று கேட்டேன். அது தவறு என்றால் அரசு நிரூபிக்க வேண்டும். அதற்குப் பதிலாக வழக்குத் தொடர்வது என்ன நியாயம்.

யாரை மிரட்ட முதல்வர் நினைக்கிறார்? வழக்கைச் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்- என்றுள்ளது. (ம)



கோவையில் அரச மரம் ஒன்று வெட்டப்பட்டதைக் கண்டித்து இயற்கை பாதுகாப்பு சங்கத்தினர் குழந்தைகளுடன் பஸ் நிலையத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இயற்கையின் பாதுகாப்புக் குறித்த பிரசுரங்களையும் வெளியிட்டுள்ளனர். (ம)

# வறட்சி நிவாரண நிதியுதவிக்கு ஒத்துழைப்பாரா கருணாநிதி?

தற்போது நிலவும் கடும் வறட்சி நிலையில் காவிரி மாவட்டங்களில் விவசாயம் பெரிதும் பாதித்துள்ளது. இந்த நிலையில் மத்திய அரசிடம் வறட்சி நிவாரண நிதி கேட்க, தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.



இந்த நிலையில் இதற்குக் கருணாநிதி ஒத்துழைப்பாரா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. தமிழகத்தில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருச்சி, கரூர் உள்ளிட்ட, 11 மாவட்டங்களில் 16 லட்சம் ஏக்கர் நிலம் காவிரியை நம்பியுள்ளது.

ஆண்டுதோறும் விவசாயத்துக்காக ஜூன் 12 ஆம் திகதி, மேட்டூர் அணை திறக்கப்படுவது வழக்கம். ஆனால் கடந்த 78 ஆண்டுகளில் இதுவரை 15 ஆண்டுகள் மட்டுமே ஜூன் 12 இல் மேட்டூர் அணை திறக்கப்பட்டுள்ளது.

கர்நாடகாவில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, காவிரியில் உபரி நீர் வந்தால்தான், மேட்டூர் அணை திறக்கப்படுகிறது. கடந்த ஆண்டு வரலாற்றில் இல்லாத அளவிற்கு, ஜூன் 6ஆம் திகதியே அணை திறக்கப்பட்டது.

இதனால், இந்த மாவட்டங்களில் 12.5 லட்சம் ஏக்கர் பரப்பளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இது கடந்த 2010 - 2011 ஆம் ஆண்டு விவசாய நிலத்தை விட 1.7 லட்சம் ஏக்கர் கூடுதலாக அமைந்தது.

இந்த நிலையில் இந்த முறை மேட்டூர் அணை திறக்கப்படாமையால் வறட்சியால் விவசாயம் பாதித்துள்ளது.

இது குறித்து தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதா, அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளை, உடனுக்குடன் செய்யுமாறும் விவசாயத் துறையினருக்கு முதல்வர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

### கருணாநிதி ஒத்துழைப்பாரா?

வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்டதால், 2 ஆயிரம் கோடி ரூபா இழப்பு ஏற்படும் என, கருணாநிதி தெரிவித்துள்ளார். மத்திய அரசிடம், மாநில அரசு வறட்சி நிவாரண நிதி கேட்கும் போது, மத்தியில் ஆளும் கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சி என்ற முறையில், அந்த நிதியை பெற்றுத் தர, தி.மு.க. தலைவர் கருணாநிதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

'தானே' புயல் பாதிப்புக்குப் போதுமான நிதி பெற்றுத் தருவதில், கருணாநிதி அதிக முனைப்பு காட்டாத நிலையில், இதற்காகவாவது, தமிழக அரசு கேட்கும் நிதியை பெற்றுத் தர, கருணாநிதி ஒத்துழைப்பாரா என்ற கேள்வி விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது. (ம)

# 25 லட்சம் ரூபா வசூல்

சென்னையில் நாளை நடைபெறவுள்ள டெசோ மாநாட்டு செலவுக்கு 25 லட்சம் ரூபா வசூல் செய்யப்பட்டுள்ளது. தேவையான நிதியை கட்சி பிரமுகர்களிடம் வசூலிக்கும் பணி தி.மு.கவினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் மாவட்டக் கிளைகள் தலா இரண்டு லட்சம் ரூபா வழங்க வேண்டும் என, தி. மு.க. தலைவர் கருணாநிதி உத்தரவிட்டுள்ளார். இதையடுத்து, கடந்த இரு நாள்களாக 25 லட்சம் ரூபா வசூலாகியுள்ளது. தனது பங்குக்கு இரண்டு லட்சம் ரூபாவை கருணா நிதி வழங்கியுள்ளார். டெசோ மாநாட்டுக்கு ஏறக்குறைய இரண்டு கோடி ரூபாவரை செலவாகும் வாய்ப்பு இருப்பதாக, மாநாட்டுக் குழுவினர் கணக்கிட்டுள்ளனர்.

ராயப்பேட்டை வை.எம்.சி.ஏ. மைதானத்தில் அமைக்கப்படும் பிரமாண்டமான பந்தலில் 20 ஆயிரம் நாற்காலிகள் அமைக்கப்படுகின்றன. டெசோ மாநாட்டுக்கு முன் சென்னை தி.நகரில் உள்ள விடுதியில் ஆய்வரங்கம் நடைபெறவுள்ளது. வெளிநாடுகளிலிருந்து பல்வேறு கட்சிகள் மற்றும் அமைப்புகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், முக்கிய தலைவர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர் என்று தி.மு.க. தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. முக்கிய பிரமுகர்கள் தங்குவதற்கு நட்சத்திர விடுதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவர்களை அழைத்து வருவதற்கும் ஆடம்பரமான கார்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாநாட்டுக்கு பல்வேறு வகைகளில் செலவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ள நிலையில் கட்சிப் பிரமுகர்களிடம் நிதி பெற தி.மு.க. தலைவர் கருணாநிதி முடிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கலைஞருக்கு சந்திரஹாசன் வாழ்த்து

தி.மு.க. தலைவர் கலைஞர் தலைமையில் டெசோ அமைப்பின் ஈழத்தமிழர் வாழ்வுரிமை பாதுகாப்பு மாநாடு சென்னையில் நாளை நடைபெறவுள்ள நிலையில் இந்த மாநாட்டை முன்னிட்டு ஈழத் தமிழர் பாதுகாப்பு கழகத்தின் தலைவர் சந்திரஹாசன், தி.மு.க.தலைவர் கலைஞருக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஓரணி திரளாது, ஈழத் தமிழரின் கருத்துருவை ஒரு முகப்படுத்தாது செயல்படும் வரை ஈழத்தமிழர் வாழ்வில் விடியல் எப்படி ஏற்படும் என்று நாளும் ஆதங்கப்படுபவர் நீங்கள். அதனால்தான் உண்மை உணராது, தங்களை வெறுத்து நிற்கும் ஈழத்தமிழர்களைக்கூட வையாது, வாழ்வாங்கு வாழும் தங்களை நாம் அறிவோம். எமது நல்வாழ்வுக்காய் ஏங்கும் உங்கள் எண்ணங்களையும் நாமறிவோம். ஈழ மண்ணின் ரத்தக் களரிக்கும், ஈழத் தமிழர்களின் விரும்பத் தகாத உயிரிழப்புகளுக்கும் முடிவுகட்டி அவரது வாழ்வின் அமைதிக்கும் வளமான எதிர்காலத்துக்கும் பொருத்தமான வழியைக் காட்ட வேண்டும் என்பதே ஈழத் தமிழர்களின் விருப்பம்.- என்றுள்ளது.

(ம)

# சிரியாவில் மத்தியஸ்தத்துக்கு தயார் என்கிறது ஈரான்

தெஹ்ரான், ஓக.11

உள்நாட்டுப் போர் தீவிரமடைந்து வரும் சிரியாவில் நாளாந்தம் இராணுவ வீரர்கள், போராளிகள் ஆகியோர் மாத்திரமின்றி பொது மக்களும் மடிந்து வருகிறார்கள். பொது மக்களில் சிறார்களும், பெண்களும்அடங்குவர்.

இந்த நிலையில் சிரியாவில் தலை தூக்கியுள்ள இப்பிரச்சினைக்குச் சுமுக தீர்வுகாண மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல்-அஸாத் அரசுக்கும், அரச எதிர்ப்புப் படையினருக்கும் இடையிலான உள்நாட்டுப்போர் உக்கிரமடைந்துள்ளது. கடந்த வருட மார்ச் மாதம் முதல் இடம்பெற்று வரும் இம்மோதலில் இதுவரை இருபதாயிரத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

சிரியாவுக்கான ஐ.நா. தூதராகவிருந்த கொபி அனான் சமீபத்தில் அப்பொறுப்பிலிருந்து விலகினார். இந்நிலையில், சிரியாவில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் மத்தியஸ்தம் வகிக்கத் தான் தயார் என ஈரான் அறிவித்துள்ளது.

இது குறித்து ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் அலி அக்பர் சலேஹி 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளதாவது:-

''சிரியாவில் துப்பாக்கிச் சண்டையை நிறுத்துதல், மனிதாபிமான உதவிகளைச் செய்தல், சமரசப் பேச்சுக்கான அடித்தளமிடுதல் ஆகியவற்றிற்கான கொபி அனானின் முயற்சிகளை ஈரான் தொடரும்.

''இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, பல்வேறு நாடுகள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தவும் ஈரான் தயாராகவுள்ளது.'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கப் பகுதிகளைச் சேர்ந்த 13 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டமொன்று நடைபெற்றது.

இதையடுத்து ஈரான் மத்தியஸ்தம் வகிப்பதற்கான இந்த முடிவு எடுக்கப்பட்டது என ஈரானின் அதிகார பூர்வ ஊடகத்தில் அலி அக்பர் சலேஹி புதன்கிழமை தெரிவித்திருந்தார்.

இக்கூட்டத்தை குவைத் உள்ளிட்ட சிலநாடுகள் புறக்கணித்து விட்டன. லெபனான் நாடும், கொள்கை முடிவு காரணமாகத் தலையிடவில்லை எனத் தெரிவித்துள்ளது.

சிரியாவில் தொடரும் வன்முறை காரணமாக 2.5 லட்சத்துக்கும் அதிகமானோர் வெளிநாடுகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்காக சிரியா-ஜோர்தான் எல்லைப் பகுதியில் மருத்துவ முகாம் அமைக்கும்பணியில் பிரான்ஸ் இராணுவம் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம)

## சீனாவில் கனமழையால் பெருஞ்சுவருக்குப் பாதிப்பு



சீனாவில் பெய்து வரும் தொடர் மழையால், உலக அதிசயங்களில் ஒன்றான சீன பெருஞ்சுவரில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

சீன நாட்டின் மீது எதிரி நாட்டைச் சேர்ந்தவர்கள் தாக்குவதை தவிர்ப்பதற்காக(1368-1644) இடைப்பட்ட காலத்தில் வடக்கு சீனாவில் ஹைபே மாகாணத்தில் இந்த பெருஞ்சுவர் கட்டப்பட்டது.

தற்போது இவை உலக அதிசயங்களுள் ஒன்றாக பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் ஹைபே மாகாணத்தில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதை அடுத்து சுமார் 36 மீற்றர் நீள அளவுக்கு பெருஞ்சுவரில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதிக மழையால் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் நாடுகளில் சீனாவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## லிபிய நாடாளுமன்றத்திடம் அதிகாரம் ஒப்படைப்பு

லிபியாவில் 40 ஆண்டு கால கடாபியின் ஆட்சி முடிவுக்கு வந்த பின்னர், அமைக்கப்பட்ட தேசிய இடைக்கால ஆட்சிக் குழு, புதிதாக தேர்ந் தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்திடம் அதிகாரத்தை ஒப்படைத்தது.

இதுபற்றி தேசிய இடைக்கால ஆட்சிக் குழுத் தலைவர் முஸ்தபா அப்தல்ஜலில் இப்படிக் கூறுகிறார்:-

''தனிச்சிறப்பு வாய்ந்த அரசியலமைப்பு அதிகாரத்தை பொது தேசிய காங்கிரஸிடம் (நாடாளுமன்றம்) அளித்து விட்டேன். ஏனென்றால் இந்த நாடாளுமன்றம் லிபிய மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட நியாயமான அமைப்பு ''என்றார்.

இந்த நிலையில், கடந்த ஜூலை 7ஆம் திகதி லிபியாவில் நடைபெற்ற தேர்தலில் 200 பேர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப் பட்டனர்.

அவர்களிடம் அதிகா ரத்தை ஒப்படைக்கும் விழா புதன் கிழமை மாலை, ரமழான் நோன்பு முடிந்த பின்னர் லிபியா தலைநகரிலுள்ள ஒரு ஹோட்டலின் கருத்தரங்கு அறையில் நிகழ்ந்தது.

இதற்கிடையே, தலைநகரிலும் பென்கின் பகுதியில் சில இடங்களிலும் நீடித்து வரும் கலவரம், கடந்த சனிக்கிழமை சந்தைப் பகுதியில் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பு ஆகிய வற்றையொட்டி விழா நிகழ்ந்த ஹோட்டலைச் சுற்றிலுமுள்ள வீதிகள் மூடப்பட்டிருந்தன.



அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் அதிபர் ஒபாமா , வெர்ஜினியாவில் பிரசாரம் செய்தார். அப்போது அங்கு வந்திருந்தவர்களிடம் உரையாடினார். (ம)

## நேபாள பெண்களுக்கு தடை

30வயதுக்கு கீழ் உள்ள பெண்கள் வளைகுடா நாடுகளுக்கு சென்று பணி புரிவதற்கு நேபாள அரசு தடை விதித்து உத்தரவு பிறப்பித்துள்ளது. இது குறித்து அந்நாட்டின் தகவல் தொடர்புத் துறை அமைச்சர் கிஷோர் யாதவ் கூறியதாவது:-

நேபாள நாட்டைச் சேர்ந்த 30 வயதுக்கும் குறைவான பெண்கள் பெரும்பாலானோர் வளைகுடா நாடுகளில் வீட்டு பணிப் பெண்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்கள் அனைவரும் அங்கு பாலியல் வன்முறைக்கு ஆளாவதாக தொடர்ந்து புகார் வருவதையடுத்து அமைச்சரவை இந்த முடிவை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

## சிரியாவின் புதிய பிரதமராக நதீர் அல் ஹால்குய் நியமனம்



சிரியாவின் சுகாதாரத் துறை அமைச்சராகப் பணியாற்றி வந்த நதீர் அல் ஹால்குய், புதிய பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்தை பதவி விலகக் கோரி, போராட்டக்காரர்கள் கடந்த ஓராண்டுக்கும் மேலாகப் போராடி வருகின்றனர்.

டமாஸ்கஸ், அலெப்போ உள்ளிட்ட பல நகரங்களில் இராணுவத்துக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே தொடர்ந்து சண்டை நடக்கிறது.

இராணுவத்தின் வான்வழித் தாக்குதல் காரணமாக, ஏராளமான கட்டடங்கள் சேதமடைந்துள்ளன. இதன் காரணமாக இங்குள்ள மக்கள் பலர் அண்டை நாடுகளில் தஞ்சமடைந்து வருகின்றனர்.

இந்த நிலையில் சிரியாவின் பிரதமராக இருந்த பரித் ஹிஜாப் போராட்டக்காரர்களுக்கு ஆதரவாகச் செயல்படுவதாகக் கூறி, ஜனாதிபதி அசாத் அவரை பதவி நீக்கம் செய்தார். இதையடுத்து ஹிஜாப் ஜோர்டானில் தஞ்சம் புகுந்துள்ளார். போராட்டக்காரர்கள் படையில் தன்னை இணைத்துக் கொள்வதாக ஹிஜாப் தெரிவித்துள்ளார். இதற்கிடையே சிரியாவின் சுகாதார அமைச்சராக இருந்த நதீர் அல் ஹால்குய்யை புதிய பிரதமராக ஜனாதிபதி அசாத் அறிவித்துள்ளார். (ம)

## ஏமன் அரசுக்கு எதிராக இராணுவத்தினர் கிளர்ச்சி

இராணுவப் படையை மறுசீரமைக்கும் ஏமன் அரசின் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, தென்பகுதியிலுள்ள இராணுவத்தினர் முகாம்களை விட்டு வெளியேறியுள்ளனர்.


இராணுவப் படையை மறுசீரமைக்கவும், முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லா சலேவின் மகன் உள்ளிட்ட தனது எதிர்ப்பாளர்கள் தலைமையிலான படையைக் குறைக்கவும் ஏமன் ஜனா திபதி அப்ராபு மன்சூர் ஹதி கடந்த திங்கட்கிழமை உத்தர விட்டார்.

குடியரசுப் படையைச் சேர்ந்த 3 பிரிகேடியர்கள் தலைமையில் ஜனாதிபதிக்கான பாதுகாப்புப் படையை அமைக்கவும் உத்தரவிட்டார். மற்ற எதிர்ப்புப் படையைச் சேர்ந்த பிரிகேடியர்களை மத்திய , தெற்குப் பகுதிகளுக்கு மாற்றவும் ஆணையிட்டார்.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், தெற்கிலுள்ள அபியன் மாகாணம் லோடரிலுள்ள இராணுவ முகாமிலும் சோதனைச் சாவடியிலுமி இருந்த நூற்றுக் கணக்கான இராணுவ வீரர்கள் செவ்வாய்க்கிழமை வெளியேறி விட்டனர்.

இந்த வீரர்களில் பெரும்பாலானவர்கள் சனா பகுதியைச் சேர்ந்தவர்கள். முன்னாள் ஜனாதிபதிஅலி அப்துல்லா சலே ஆட்சிக்கு எதிராக கடந்த ஓராண்டாக போராட்டம் நடைபெற்றது. இதையடுத்து அவர் பதவி விலகினார். இப்போது புதிய ஆட்சி அமைந்துள்ள நிலையில் இராணுவத் துக்கும் அரசுக்குமிடையே மோதல் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

## நடுவானில் 'பஷன் ஷோ' நடத்திய விமான நிறுவனத்துக்கு அபராதம்



நடுவானில் பறந்த விமானத்திற்குள் ஆடை அலங்கார அணிவகுப்பு நடத்திய, விமான நிறுவனத்துக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வியட்நாம் நாட்டின், வியட் ஜெட் ஏர் நிறுவனம், தன்னுடைய புது விமானத்தை, ஹோசிமின் நகரிலிருந்து சுற்றுலாத் தலமான நாடிராங் பகுதிக்கு இயக்கியது.

புது விமானம் நடுவானில் பறக்கும்போது, விமானத்திற்குள் உள்ளாடைகளுக்கான அலங்கார அணிவகுப்பு நடந்தது. ஐந்து மாடல் அழகிகள், இந்த அணிவ்குப்பின் போது மூன்று நிமிடங்கள் நடனமாடியுள்ளனர்.

இந்த விமானத்தில் பயணித்தவர்கள், இந்த அணிவகுப்பு மற்றும் நடனத்தை மொபைல் போனில் படம் பிடித்து, இணையத் தளத்தில் வெளியிட்டுள்ளனர்.

இந்தச் செய்தியை கேள்விப்பட்ட வியட்நாம் நாட்டு விமான கட்டுப்பாட்டு ஆணையம், உரிய அனுமதி பெறாமல் நடுவானில் இதுபோன்ற ஆடை அலங்கார அணிவகுப்பை நடத்திய விமான நிறுவனத்துக்கு, ஆயிரம் டொலர் அபராதம் விதித்துள்ளது. (ம)

# ஆஸியில் போக்குவரத்துச் சலுகை கேட்கும் வெளிநாட்டு மாணவர்கள்

மெல்போர்ன், ஓக.11

ஆஸ்திரேலியாவில் படித்துவரும் வெளிநாட்டு மாணவர்களின் பாதுகாப்பை மேம்படுத்த, அவர்களுக்குப் போக்குவரத்துச் சலுகை அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் விக்டோரியாவிலும் நியூசவுத் வேல்ஸ் மாகாணப் பகுதியிலும் தங்கிப் படித்து வரும் இந்திய மாணவர்கள் மீது கடந்த 2009ஆம் ஆண்டு சிலர் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, அங்கு படிக்கும் இந்திய மாணவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென்று இந்திய அரசு தரப்பில் வலியுறுத்தப்பட்டது. அதன்பின்னர், அங்கு நிலைமை ஓரளவு சீரடைந்தது.

இந்த நிலையில், சர்வதேசக் கல்வியை மேம்படுத்துவது தொடர்பாக ஆஸ்திரேலிய பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த பல்வேறு மாணவர் அமைப்புகள் அரசிடம் கூட்டாக 10 கோரிக்கைகளை அளித்துள்ளன. இவற்றில் ஒரு கோரிக்கை வெளிநாட்டு மாணவர்களுக்குப் போக்குவரத்துச் சலுகை அளிக்க வேண்டும் என்பதே.

(ம)

# பிரான்ஸிலும் பொருளாதார நெருக்கடி

பிரான்ஸ் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கும் காலம் நெருங்கி கொண்டிருக்கிறது என்று பிரான்ஸ் நிறுவனம் ஒன்று எச்சரித்துள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் பிரான்ஸ் பொருளாதார நெருக்கடியை தற்போது இரண்டாவது முறையாக சந்திக்கிறது என்று மத்திய வங்கி எச்சரித்துள்ளது.

மேலும் பிரான்ஸில் தொழில் மற்றும் வர்த்தகமும் பற்றாக்குறையைச் சந்தித்து வருகின்றன.

கடந்த 2011ஆம் ஆண்டின் முதல் பாதியில் 38.2 பில்லியன் யூரோ மதிப்பிலான ஏற்றுமதி, இந்த ஆண்டின் முதல் பாதியில் 34.9 பில்லியன் யூரோவாகக் குறைந்து விட்டது.

உலகப் பொருளாதாரம் நலிவடைந்து வருவதாலும், ஐரோப்பா பெரும் நெருக்கடியில் சிக்கியிருப்பதாலும், பிரான்ஸிலும் பொருளாதார நெருக்கடி ஏற்படக்கூடும் என்று தொழில்துறை அமைச்சர் நிக்கோல் பரிக் தெரிவித்தார்.

இத்தாலி, ஜேர்மனியிலும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருப்பது தெளிவாகி விட்டது. இத்தாலியில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான உள்ளூர் உற்பத்தி வீதம் கடந்த ஆண்டை விட 2.5 சதவீதம் குறைந்துவிட்டது. ஜேர்மனியில் தொழில்துறை 1.7 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது.

பிரான்ஸில் நுகர்வோரும், முதலீட்டாளரும் தற்போது செலவு செய்யத் தயங்குகின்றனர். புதிய செலவையும், முதலீட்டையும் ரத்துச் செய்கின்றனர் அல்லது காலதாமதமும் செய்கின்றனர். இதன் விளைவாக கட்டுமானத் தொழிலும், வாகனத் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த 2011ஆம் ஆண்டை விட 2012ஆம் ஆண்டில் புதிய வீடு கட்டும் பணி 14 சதவீதம் குறைந்து விட்டது. கார் விற்பனையும் இந்த ஆண்டு 7 சதவீதம் குறைந்தது. வேலை தரக்கூடிய இந்த இரண்டு துறைகளும் பாதிக்கப்பட்டுள்ளதால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து விட்டது என்று மேலும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)



இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பானின் நாகசாகியில் அணுகுண்டு வீசப்பட்டு 67 ஆவது ஆண்டு தினத்தை முன்னிட்ட அந்த நாட்டு பிரதமர் யாஷிஹிகோ நௌடா மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். (ம)

## ரஷ்யாவில் பாதாள அறையில் 12 ஆண்டுகளாக 20 சிறுவர்கள்

ரஷ்யாவில் 20 சிறுவர்கள் கடந்த 12 ஆண்டுகளாக பாதாள அறையில் உள்ளனர் என்ற செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவில் உள்ள டாட்டார் ஸ்டான் மாகாணத்தின் கஜான் நகரைச் சேர்ந்தவர் பைஸ்ரஹ்மான் சடாரோவ் (வயது 83).

தன்னை ஒரு தீர்க்கதரிசி என்று சொல்லிக் கொள்ளும் அவர் தனது ஆதரவாளர்களை உலக நடப்பில் இருந்து விலகி இருக்குமாறு தெரிவித்தார்.

இதையடுத்து கடந்த 2000ஆம் ஆண்டு கஜானில் உள்ள ஒரு வீட்டுக்கு அடியில் பாதாள அறைகள் கட்டப்பட்டு 70 ஆதரவாளர்கள் அதில் குடியேறினர். இதில் 1 முதல் 17 வயதுள்ள சிறுவர்களும் அடக்கம்.

அவர்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக சூரிய ஒளியைக் கூட பார்க்க முடியாத அளவுக்கு பாதாள அறைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர். இதை ரஷ்யாவின் வெஸ்டி என்ற தொலைக் காட்சி வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது.

ரஷ்ய நாட்டில் உள்ள 8 முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களில் கஜான் நகரமும் ஒன்றாகும். வோல்கா, கஜான்கா நதிகள் சந்திக்கும் இடத்தில் அமைந்துள்ளது கஜான் நகரம்.

கஜான் நகரில் தான் 2018ஆம் ஆண்டு பீஃபா உலகக் கோப்பை கால் பந்தாட்டப் போட்டிகள் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

12 ஆண்டுகளுக்கும் மேலாக சூரிய ஒளியைக் கூட பார்க்க முடியாத அளவுக்கு பாதாள அறைகளிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

## சுவிஸ் வாழ் பிரெஞ்சுக்காரரிடம் வாரிசு வரி வசூலிக்க முயற்சி

சுவிஸ் வாழும் பிரெஞ்சுக்காரர்களிடம் வாரிசு வரியை வசூலிக்க பிரான்ஸ் திட்டமிட்டுள்ளது. இதற்காக பிரான்ஸ் சுவிஸ் அரசின் ஒத்துழைப்பை நாடியுள்ளது.

சுவிஸில் குடியிருக்கும் ஒருவரிடம் இருந்து பிரெஞ்சுக்காரர் வாரிசுரிமை பெற்றால், அவர் சுவிஸுக்கு வரி செலுத்தினால் போதும். பிரான்ஸூக்கு வரி செலுத்தத் தேவையில்லை என்பது தற்போதைய சட்டமாகும்.

சுவிஸில் பிரெஞ்சுக்காரரிடமிருந்து சுவிஸ்காரர் ஒருவர் வாரிசுரிமை பெற்றால் அப்போதும் அவர் வாரிசு வரியை சுவிஸ் அரசுக்கே செலுத்துகிறார். எனவே சுவிஸ் அரசு இரண்டு வழிகளிலும் வரி வருமானத்தைப் பெறுகின்றது.

பிரான்ஸ் தனது வரி வசூலைக் கட்டாயப்படுத்தினால் சுவிஸ்ஸில் வாழும் பிரெஞ்சுப் பணக்காரர்கள் இரு நாடுகளுக்கும் வரி செலுத்த அஞ்சி சுவிஸை விட்டு வெளியேறுவர். இதனால் சுவிஸின் மேற்கு மாநிலங்கள் பெரிதும் பாதிக்கப்படும் என்று மாநில நிதி இயக்குநர் கருத்தரங்கில் கிறிஸ்டியன் வானெர் தெரிவித்தார்.

இந்த இரட்டை வரி விதிப்புமுறை பற்றி பேச்சு நடத்த சுவிஸ் ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ஈவ்லின் விட்மர் ஷ்லும்ஃப், பிரான்ஸ் ஜனாதிபதி ஹோலாண்டை இரண்டு மாதங்களில் சந்தித்துப் பேசவுள்ளார். (ம)

## தன்னைப் பார்த்து சிரிக்காத குழந்தையைக் கொன்ற தந்தை

தன்னைப் பார்த்துச் சிரிக்காத இரண்டு வயது மகளை, மிதித்துக் கொன்ற தந்தை மீது கொலை குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நியூசிலாந்து நாட்டின் ஆக்லாந்து பகுதியைச் சேர்ந்தவர் கெபு இகமானு. இவரது இரண்டு வயதுக் குழந்தை பிறந்தது முதல், பாட்டி வீட்டில் வளர்ந்தது.

கடந்த 2010ஆம் ஆண்டு தன்னுடைய மகளை வீட்டுக்கு அழைத்து வந்தார் கெபு இகமானு. பாட்டி வீட்டில் வளர்ந்ததால், அந்தக் குழந்தை தந்தையிடம் பழகுவதற்குத் தயங்கியது. இதனால் கடுப்பான இகமானு குழந்தையைச் சிரிக்கும்படி வற்புறுத்தினார்.

ஆனால் குழந்தை சிரிப்பதற்கு பதிலாக அழுதது. மேலும் கோபமடைந்த இகமானு அந்த குழந்தையைத் தூக்கி வீசினார்.

சுவருக்கு வெளியே போய் விழுந்த குழந்தையை மிதித்து காயப்படுத்தினார். கை எலும்பு முறிந்த நிலையில், தலையில் பலத்த காயத்துடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட குழந்தை சிகிச்சை பயனின்றி இறந்தது.

இது தொடர்பாக இகமானுவைக் கைது செய்த பொலிஸார், அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். அவர் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ம)





# 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 01 . 04 . 1941



இறப்பு 23 . 07 . 1992

## திருமதி மார்க்கண்டு அன்னமணி

(8ஆம் வாய்க்கால் - உருத்திரபுரம்)
திதி: 11.08.2012 (சனிக்கிழமை)

அன்பின் பிறப்பிடமே அமைதியின் திருவுருவே!
பண்பின் இருப்பிடமே பாசத்தின் ஒளிவிளக்கே
உமது பசுமையான நினைவுகள் எம் மனதை விட்டு அகலாது
நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்றன
உம் நினைவலைகள் எம் நினைவு உள்ளவரையும் நிலைத்து நிற்கும்
20 ஆண்டுகள் உருண்டோடிவிட்டாலும்
அதைப் பல்லாயிரம் முறை நினைத்து தவிக்கின்றோம்.
பல காலம் எம்மோடு வாழ்ந்து சில மணித்துளிகளில்
எம்மைவிட்டுப் பிரிந்து விட்டீர்களே
உங்கள் பிரிவை எம்மால் தாங்க முடியாமல் தவிக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 226,
ஆனந்தநகர், கிளிநொச்சி.

(9301)(45.6.7)

**TRACTOR FOR SALE**

MESSEY FERGUSON-135 (Fully Original Condition) with TAILOR. No- 49xxxx, No Brokers

Contact No. : 077 960 9121
077 757 0141

(21439)(5-6)

**வீடு காணி விற்பனைக்கு**

யாழ். பழைய பூங்கா வீதியில் உள்ள 4 அறை வீடும், காணியும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 6184 704

(21360)(45.51.7)

**மணமகன் தேவை**

யாழ்ப்பாணம் இந்து கௌரவ குடும்பம், 1974, B.Com M.E.D பட்டதாரி நட்சத்திரம் அனுசம், 7இல் செவ்வாய் (நீசமற்ற) உடைய அரசாங்க திணைக்களம் ஒன்றில் கௌரவமான பணியாற்றுகின்ற மகளுக்கு அதே குலத்தைச் சேர்ந்த அரச, தனியார் நிறுவன வரன் தேவை.

தொடர்பு: 077 125 0332
Email:pcmallevr@gmail.com (21604)(5-7)

**வீடு காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை பிர்தான வீதி, புத்தூர் சந்தியில் 5 பரப்பு காணியுடன் சகல வசதிகளுடனும் வீடு, விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 172 6854

(21607)(5-7)

**இறைச்சிக்கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.450 மட்டுமே. தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்.

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம்.
(21362)(6-54-45)

**மணமக்கள் தேவை**

இத்தாலி நாட்டில் குடியுரிமையுடைய யாழ். இந்து கௌரவ குடும்பம் 1978 பூரட்டாதி, கும்பராசி, 1ல் செவ்வாய் 97¾ கிரகபாவம் விவாகரத்தானவர் (பிள்ளைகள் இல்லை) 5'2'' GCE A/L HNDA மணப் பெண்ணுக்கு வெளிநாட்டு மணமகன் தேவை. யாழ். இந்து கௌரவ குடும்பம் பிரான்ஸ் நாட்டு குடியுரிமை, 1978 சித்திரை 2ஆம் பாதம் 1ல் சூரியன், செவ்வாய் 5'7'' கிரகபாவம் 42, BBA பட்டதாரி, எக்கவுண்டன் மணமகனுக்கு பட்டதாரி அழகான மணப்பெண் தேவை. உடன் அணுகவும்.

S.K. சிவகரன் (அமைப்பாளர்)
சிவாலயா சர்வதேச திருமண நிலையம்
42/11 இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
077 969 4009/077 145 0599
வவுனியா: 024 490 7956

## மாணவர் பகிஷ்கரிப்பு மூடப்பட்டது பல்கலை



பதுளை,ஓக.11

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முதல் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளது. இதனையடுத்து மாணவர்கள் அனைவரையும் பல்கலைக்கழக நிர்வாகம் அங்கிருந்து வெளியேற்றியுள்ளது.

பத்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த புதன்கிழமை முதல் வகுப்பு பகிஷ்கரிப்பில் ஈடுப்பட்டு வந்த நிலையில், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமும் மற்றும் தொழிநுட்ப பீடம், முகாமைத்துவ பீடம், விலங்கு விஞ்ஞானம் மற்றும் ஏற்றுமதி விவசாய பீடங்கள் காலவரையறையின்றி மூடப்பட்டன. குறித்த பல்கலைக்கழகத்தில் 1 852 மாணவர்கள் கல்வி கற்று வருகின்ற நிலையில், அங்கு 11 பாடநெறிகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வறிய மக்களுக்கு நிவாரணம் வழங்கல்

மட்டக்களப்பு,ஓக.11

புனித றம்ழானையொட்டி வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை காத்தான்குடி ஜாமியுள்ளாபிரீன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தநிகழ்வில் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.எல்.எம்.பரீட், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கிழக்கு மாகனாண சபை வேட்பாளர் ஷிப்லி பாறூக் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

# அகற்றப்பட்ட விநாயகர் சிலையை மீள அதே இடத்தில் நிறுவுங்கள்

## ஜனாதிபதியிடம் அவசரக் கோரிக்கை

அம்பாறை,ஓக.11

அம்பாறை, பாணமை சித்திவிநாயகர் ஆலயத்தில் பௌத்தர்களினால் அகற்றப்பட்ட விநாயகர் சிலையை மீண்டும் ஆலயத்தில் நிறுவ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நடவடிக்கையெடுக்க வேண்டும் என்று கிழக்கிலங்கை இந்துக் குருமார் ஒன்றியம் வேண்டுகோள்விடுத்துள்ளது.

**பாணமையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் இதுவரையில் எமது அரசியல்வாதிகள் எதுவித நடவடிக்கையும் எடுக்காது உள்ளனர்.**

இதுதொடர்பில் கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் மு.கு.சச்சிதானந்த குருக்கள் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இன்று நாட்டில் அனைவரும் அனைவரது மதத்தையும் மனித உணர்வுகளையும் மதிக்கும் நிலை மிகவும் குறைந்து வருவது கவலையளிக்கின்றது.

அண்மைக்காலமாக சிறுபான்மைச் சமூகங்களின் வழிபாட்டுத் தலங்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் அனைத்து மக்களையும் புண்படுத்துபவையாகவுள்ளன.

அனைவர் மீதும் அன்பு கொள்ளுங்கள் என்னும் புத்த பகவானின் போதனைகளை மீறி அம் மதத்தின் வழிகாட்டிகளாக இருப்போர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் அம் மதத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இல்லாமல் செய்துவிடும்.

இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பில் பௌத்த பீடங்களின் தலைவர்கள் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடக்கு,கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் கடந்த காலங்களில் இடம்பெற்ற போரால் தமது மத வழிபாடுகளை பின்பற்ற முடியாத நிலையில் இருந்தனர். தற்போது ஓரளவு தங்களின் மதக் கடமைகளை நிறைவேற்ற முற்படும்போது அதற்கெதிராக மேற்கொளப்படும் நடவடிக்கைகள் பல்வேறு சந்தேகங்களை தமிழ் மக்கள் மத்தியிலும் இந்து மக்கள் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளன.

வரலாறுகள் ஓர் இனத்தின் அடையாளமாகவும் அவர்களின் உயிர்நாடியாகவும் இருக்கும்போது அதனை இல்லாமல் செய்யும் நடவடிக்கைகள் அந்த மக்களை இல்லாமல் செய்யும் நடவடிக்கையாகவே நோக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தநிலையில் பாணமையில் ஆலயத்துக்குள் இடம்பெற்ற அத்துமீறிய செயற்பாடுகள் தொடர்பில் எமது அரசியல்வாதிகள் பாராமுகமாக இருப்பது எமது இனத்துக்குச் செய்யும் துரோகமாகவே கருத வேண்டியுள்ளது.

இந்த நாட்டில் இருக்கும் ஏனைய இனங்கள் தங்களது மதச் சுதந்திரத்துக்கு ஏதாவது பிரச்சினையேற்பட்டால் அதுதொடர்பில் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றுபட்டு குரல் கொடுக்கும் நிலை உள்ளது. ஆனால் பாணமையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் இதுவரையில் எமது அரசியல்வாதிகள் எதுவித நடவடிக்கையும் எடுக்காது உள்ளனர்.

இந்த சம்பவத்தை ஒரு சிறிய விடயமாக நோக்கினோம் என்றால் இதன் தொடர் ஏனைய பகுதிகளுக்கும் செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. இவ்வாறான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த அரசியல் சக்திகள் ஒன்றுபட்டு குரல் எழுப்புவதன் மூலமே எமது பாரம்பரியங்களையும் வரலாறுகளையும் காப்பாற்ற முடியும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பாணமை சித்திவிநாயகர் ஆலயத்தில் அண்மையில் பெரும்பான்மை இனத்தவர்களால் பலவந்தமாக விநாயகர் சிலை அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(ச)

## நீர்மட்டம் குறைந்தது மக்கள் பெரும் சிரமம்



நுவரெலியா,ஓக.11

நோர்வூட், காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மழைவீழ்ச்சி குறைந்துள்ளதால் இந்த நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 51.5 அடி உயரத்துக்குக் குறைந்துள்ளது.

பொகவந்தலாவை, நோர்வூட், சாஞ்சிமலை, டிக்கோயா போன்ற பகுதிகளில் மழை வீழ்ச்சி ஏற்படுகின்ற போதே காசல்ரீ நீர்த்தேக்கம் நிறைந்து காணப்படும். எனினும் இந்தப் பிரதேசங்களில் எதிர்பார்க்கப்பட்ட மழை வீழ்ச்சி காணப்படாததால் காசல்ரீ நீர்த்தேக்கத்தின் பெரும்பாலான பகுதியில் நீர் வற்றி வரண்ட நிலம் போலக் காட்சியளிக்கின்றது.

இந்த நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்து வருவதால் தாம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக இந்த நீர்த்தேக்கத்தை அண்மித்த தோட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை நீர்த்தேக்கத்தில் மீன்பிடித் தொழில் செய்கின்றவர்களும் பாதிப்படைந்துள்ளதாக மக்கள் கூறுகின்றனர். (ச)

## கிழக்கு மாகாண சபையை தீர்மானிக்கும் சக்தி ஐ.தே.கவே

### திருமலை மாவட்ட வேட்பாளர் கருத்து

திருகோணமலை,ஓக.11

கிழக்கு மாகாணசபையைத் தீர்மானிக்கும் சக்தி ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் கிடையாது என்று திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் எம்.ஏ.எம்.மகரூப் தெரிவித்தார்.


கிண்ணியா, றகுமானியாவில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் ஜனநாயகம் செத்துவிட்டது. அடாவடித்தனம் மேலோங்கிவிட்டது. தமிழர்களும், முஸ்லிம்களும் அரசுக்கு எதிரிகள் என்ற கண்கொண்டே பார்க்கப்படுகிறார்கள்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முஸ்லிம்களின் பள்ளிவாசல்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. முஸ்லிம்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. சிலை வைத்தலும், சிலையை உடைத்தலும் அவர்களின் கைவந்த கலையாகிவிட்டது. வேட்பாளர்களாகிய எங்களை வாக்காளர் களாகிய மக்கள் நன்கு புரிந்துகொள்வார்கள். அவர்கள் எவரைத் தெரிவு செய்யவேண்டும் என்பதை அவர்களே தீர்மானிப்பார்கள்.

இதனைவிடுத்து, மறைந்தவர்களின் புதைகுழிகளைத் தோண்டுவதோடு, அதனைச் சிதைப்பது அரசியலில் நாகரிகமான செயல் அல்ல- என்றார். (ச)



கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கு அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டை வழங்குவதற்கான பதிவுகளை 'கபே' என்றழைக்கப்படும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் மட்டக்களப்பு, வாகரைப் பிரதேச செயலகத்தில் மேற்கொண்டவேளையில்........

## கிழக்கில் ஆட்சியை நிறுவவே களத்தில் கூட்டமைப்பு

எருவில்,ஓக.11

கிழக்கு மாகாண மக்களின் நன்மைக்காகவே மக்களால் ஆளப்படும் மக்களாட்சிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் களத்தில் குதித்துள்ளது. எனவே, இதை உணர்ந்து தமிழ் மக்கள் செயற்பட்டு தமது ஆட்சியைத் தாங்களே கைப்பற்றி ஆட்சி நடத்துகின்ற காலம் கனிந்து வருகின்றது.

அதனைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் உங்கள் கையில்தான் உள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் த.கலையரசன் தெரிவித்தார்.

நாவிதன்வெளியிலுள்ள கழகங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இம்முறை கிழக்கு மாகாணசபையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றவேண்டுமாயின் கூட்டமைப்பின் பலத்தை தமிழ் மக்கள் பலப்படுத்தினால் மாத்திரமே எமது இருப்பை நிலைநாட்ட முடியும். அப்போது தமிழர்களாகிய நாம் சர்வதேசத்துக்கு ஒருசெய்தியைக் கொடுக்கலாம்.

மக்களின் ஆணை எமது கட்சிக்குப் பலமாக இருக்குமானால் எமது நிலங்கள் நாளுக்கு நாள் சூறையாடப்படுவதைத் தடுத்து நிறுத்துவதோடு எமது மக்களை நாங்களே ஆளக்கூடிய ஒருசூழலை உருவாக்கிக் கொள்ளமுடியும்.

எமது நாட்டைப் பொறுத்தவரை நாங்கள் சிறுபான்மை இனம். ஆனால், ஒரு ஜனநாயக நாட்டில் சிறுபான்மை இனத்துக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை உரிமைகள் இந்த நாட்டில் எமக்கு வழங் கப்படவில்லை.

கடந்த அறுபத்திரண்டு வருடங்களுக்கு மேலாக எங்களது உரிமைக்காக எமது மக்கள் பல உயிர்த் தியாகங்களையும், கோடிக் கணக்கான சொத்துகளையும் இழந்துள்ளார்கள்.

எனவே, நடைபெறவிருக்கும் இந்தத் தேர்தலில் அனைத்துத் தமிழ் மக்களும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புக்கு தமது வாக்குகளை அளிப்பதன் மூலம் எமது கட்சியின் கொள்கைகளுக்கு மேலும் வலுச்சேர்க்க முடியும்; எமது இலக்கை வெற்றி கொள்ள முடியும் - என்றார். (ச-31)

நல்லூர் கந்தனின் 18ஆம் நாள் வீதியுலாக் காட்சி



SUNDHARSON
Jaffna Road, Manipay
சுந்தர்சன்
யாழ்.வீதி, மானிப்பாய்.
TP: 021225 5136
Fax 021225 5136
(C1960)(2-6-7)



# யாழ்.மாவட்டத்தில் 24 மணி நேர சேவை சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முன்வந்தது

யாழ்ப்பாணம், ஒக.11

யாழ்.மாவட்டத்தில் தற்போது இடம்பெற்று வரும் வீதி விபத்துகள் மற்றும் வன்முறைச் சம்பவங்களால் பாதிப்புறுவோர்களுக்கு இரவு பகல் அம்புலன்ஸ் சேவையை நடத்த சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவு முன்வந்துள்ளது.

இரவு நேர அம்புலன்ஸ் சேவையை தொண்டு நிறுவனங்கள் பல நிறுத்தியுள்ள போதும் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை 24 மணி நேரமும் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது இடம்பெற்று வரும் சூழ்நிலைகள் காரணமாக அவசர நோயாளர்கள் பலர் தனியார் வாகனங்களைப் பயன்படுத்தி வைத்தியசாலைகளுக்குச் செல்வதை அவதானிக்க முடிந்துள்ளது.

எனினும் அவசர நோயாளர்கள் பலர் இரவு நேர அம்புலன்ஸ் சேவையை கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளனர்.

இந்த நிலையில் அதிக தொண்டு நிறுவனங்கள் தாம் எதிர்கொள்ளக் கூடிய அசௌகரியங்களைத் தவிர்த்து இரவு நேர அம்புலன்ஸ் சேவையை நிறுத்தியுள்ளன.

2011 ஆம் ஆண்டு ஆயிரத்து 436 நோயாளர்களுக்கு பகல் நேரமும் 414 நோயாளர்களுக்கு இரவு நேரமும் அம்புலன்ஸ் சேவையையும், இந்த வருடம் கடந்த ஜூன் மாதம் வரை 1ஆயிரத்து 191 நோயாளர்களுக்கு பகல் நேரமும் 2 ஆயிரத்து 217 நோயாளர்களுக்கு இரவு நேரமும் அம்புலன்ஸ் சேவையை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவசர அம்புலன்ஸ் சேவை பெற வேண்டியுள்ள நோயாளர்கள் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவையுடன் தொடர்பு கொண்டு அம்புலன்ஸ் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

# வீதிகளைப் புனரமைக்கக் கோரிக்கை

கிராமமக்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய ஆனைக்கோட்டை கூழாவடி இராணுவ முகாமுக்கு அருகில் மேற்கு திசையாகச் செல்லும் வீதியைப் புனரமைக்குமாறு வலி. தென்மேற்கு பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். உமாபாலன் வலி . தென்மேற்குப் பிரதேசசபை தவிசாளரைக் கோரியுள்ளார் .

வலி. தென் மேற்கு பிரதேசத்தில் யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதியில் ஆனைக்கோட்டை கூழாவடி இராணுவ முகாமுக்கு அருகில் மேற்குப் பக்கமாக உள்ள ஆனைக்கோட்டைக்குச் செல்லும் வீதி பல வருடங்களாகப் புனரமைக்கப்படாததனால் அப்பகுதி மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு பெரும் சிரமங்களுக்குள்ளாகிறார்கள். குறிப்பாக மழைகாலங்களில் இடைக்கிடை வெள்ளம் தேங்கி நிற்பதனால் நடமாடமுடியாத நிலை ஏற்படுகிறது. மேற்படி வீதியின் நிலைப்பாடு குறித்து இக்கிராமத்தைச் சேர்ந்த மக்கள் வலி. தென் மேற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தருக்குச் சுட்டிக்காட்டியதுடன் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தனர்.

மக்களின் கோரிக்கையை தொடர்ந்து, கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர் நீண்டகாலமாகத் திருத்தப்படாமல் இருக்கும் மேற்படி வீதியைப் புனரமைத்துக் கொடுக்குமாறு வலி. தென்மேற்கு பிரதேசசபை தவிசாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (3- 115)

* * *

யாழ்ப்பாணம், ஒக. 11

அரியாலை கிராம அலுவலர் பிரிவு ஜே/90 பகுதியில் மீளக்குடியேறிய மக்களின் போக்குவரத்துக்கு முக்கிய பாதையாகவுள்ள பிரதான வீதியைப் புனரமைத்துத் தரும்படி மக்கள் கோரிக்கை விடுத்தபோதும் வீதி புனரமைப்புக்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை இடம்பெறவில்லை. அத்துடன் எதிர்வரும் மாதங்கள் மழைகாலம் என்பதால் தமது குடியிருப்புக்கான போக்குவரத்து மிகவும் சிரமமாக இருக்கும் என அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

பெரிய சேதத்துக்கு உள்ளாகிக் காணப்படும் இந்த வீதி மழை ஆரம்பித்ததும் போக்குவரத்துச் செய்ய முடியாதபடி மிகவும் மோசமாக மாறும் என்பதால் குறிப்பிட்ட வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு எல்லா மட்டத்திலும் பிரஸ்தாபித்த போதும் எவரும் இந்த வீதியைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வருகிறார்கள் இல்லை எனக் கவலை தெரிவிக்கும் மக்கள் இன்னமும் 300 குடும்பங்கள் வரை இங்கு குடியமர்த்தப்படவுள்ளனர் எனவும் தெரிவித்தனர். (3- 115-7)

# நல்லூரான் திருவடிக்கு யாமிருக்கப் பயமேன்

யாமிருக்கப் பயமேனென்றாய் நல்லையிலே
வேலிருக்கத் துணை வேறொன்
றெனக்கேது?
எட்டாக் கனியாக இருப்பதும்
உன்அழகாமோ
பற்றிப்பிடிப்பதற்கு நின்னருள்
வேண்டுகிறேன் .
இப்பிறப்பில் யாம் பட்ட இன்ப
துன்பமெலாம்,
முற்பிறப்பிற் செய்த வினையாலானதோ?
இனி பிறவி யான் வேண்டேன், இந்
ஞாலத்தில்
எம்பெருமான் திருவடிக் கீழ் இணைய
வேண்டுகிறேன்



த. கந்தசாமி,கொக்குவில்

# வேல் கொண்டு புறப்பட்டு வா வா

ஆவணியில் ஆண்டுதோறும்
ஆரவாரத்துடனே விழாக்காணும்
ஆதாரமே எங்கள் நல்லூர் மூலாதாரமே
அழகாக உயர்ந்திட்ட - கோபுரத்துடன்
நீ மட்டும் வாழ்வது தகுமா
குனிந்திட்ட எம்நிலை போக்க
குறைகளை தடையறத் தாக்க
வேல்கொண்டு புறப்பட்டு வாவா
சால்மிக்க வாழ்வதைத் தாதா



புலோலியூர், வேல்நந்தன்

# குயில் கூவும் குரலினிமை

"குயில் கூவும் குரலினிமை.
குமரனின் வரவு கூறும்
மயிலேறும் மால் மருகன்
மாரனென அழகு காட்டும்
தையலர் இருவரினை
தண்ணருளான் பவனி காணக்
கயிலையின் காட்சிதனைக்
காட்டுதே எம் ஈழநல்லூர்! "



தேவி. கணேஸ்

சரவணா ரெக்ஸ்
விடுமுறை நாள்களிலும் திறக்கப்படும்.
நல்லூர், யாழ்ப்பாணம், நெல்லியடி.
(அ/1987)(54-7-2)

# ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் 2012 பழைய பாடத்திற்கான இறுதிப்பரீட்சை நடைபெறவுள்ளது. இதுவரை பழைய பாடத் திட்டத்தில் சித்தியடைய தவறியவர்கள், இறுதிப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பங்களை அனுப்பவேண்டியிருப்பதால் பழைய பாடத்திட்ட ஆசிரிய மாணவர்களை கோப்பாய் ஆசிரிய கலாசாலையுடன் தொடர்பு கொள்ளுமாறு கோப்பாய் ஆசிரிய கலாசாலை பதில் அதிபர் கேட்டுள்ளார். (3)

# தேசிய கல்வியியற் கல்லூரியில் சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் 2005/2007, 2006/2008, 2007/2009, 2008/2010 ஆகிய கல்வி ஆண்டுகளில் கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பயிற்சியைப் பூர்த்தி செய்து கொண்டவருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ். தேசிய கல்வியற் கல்லூரியின் கலை அரங்கில் நடைபெறவுள்ளது. (3)

# மனித உரிமை ஆணைக்குழுவுக்கு தரப்பட்ட விடயமே நடைமுறையில்

யாழ்ப்பாணம் ,ஒக 11

மனித உரிமை ஆணைக்குழு சர்வதேச மதிப்பீட்டாளர்களைக் கொண்டு கடந்த பெப்ரவரி மாதம் எமது செயற்பாடுகள் தொடர்பில் சுயமதிப்பீடுகளை மேற்கொண்டுள்ளோம்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் எமது ஆணைக்குழு நடைமுறைப்படுத்த வேண்டிய விடயங்களும் தரப்பட்டுள்ளன. இதற்கமைவாக எமது செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய ஆணையாளர் த. கனகராஜ் தெரிவித்தார்.

சிவில் சமூக கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது எமது ஆணைக்குழு சிவில் சமூகங்களை ஒன்றிணைத்து உப குழு ஒன்றை அமைக்கவுள்ளது. அத்துடன் மனித உரிமை தொடர்பான விடயங்களில் சிறப்பு தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்ட இன்னொரு குழு அமைக்கப்பட இருக்கிறது. இதனை விட அரச அதிகாரிகளைக் கொண்ட குறிப்பாக பொலிஸாரை உள்ளடக்கிய இன்னொரு குழுவும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் மூலம் மனித உரிமை ஆணைக்குழுவின் செயற்பாடுகளை இணைந்து முன்னெடுக்க கூடியதாக இருக்கும். எமது புதிய ஆணைக்குழு சர்வதேச மதிப்பீட்டாளர்களை கொண்டு செயற்பாடுகளை சுய மதிப்பீடு செய்து கொண்டுள்ளது.

அத்துடன் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் எமது ஆணைக்குழு நடைமுறைப்படுத்த வேண்டிய விடயங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. மேலும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவால் இலங்கை அரசுக்கு தயாரித்து வழங்கப்பட்ட அறிக்கை ஜெனிவாவுக்கு அனுப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம- 5)

# வளர்ப்பு நாய்களுக்கான வரி20 ரூபாவாக குறைப்பு

வலி. தென்மேற்கு பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கு வருடாந்த வரியாக அறவிடப்பட்டு வந்த ரூபா 50 மக்களின் நலன்கருதி 20 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கான தீர்மானம் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.வலி. தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச சபையினால் அறவிடப்படும்ட 50 ரூபாவைச் செலுத்த பொது மக்கள் முன் வராததினால் பிரதேச சபைக்குக் கிடைக்கும் வருமானத்தில் பாதிப்பு ஏற்படுகின்றது. இந்த நிலைப்பாடு குறித்து பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டு சகல உறுப்பினர்களின் கருத்துக்கமைய வளர்ப்பு நாய்களுக்கு அறவிடப்படும் வரியை 50 ரூபாவிலிருந்து 20 ரூபாவாகக் குறைப்பததென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. (3-115)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் வெளிநாட்டு தூதர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# 25 அடி குழியில் விழுந்தது பூனை காப்பாற்ற முயன்றவர் சாவு

## மேலும் நால்வர் வைத்தியசாலையில்

கொழும்பு,ஓக.11

25 அடி குழியொன்றில் விழுந்த பூனை ஒன்றைக் காப்பாற்ற முயன்ற நபர் உயிரிழந்துள்ளதோடு மேலும் நால்வர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் அளவ்வ - ரிகெலிய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

ரிகெலிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை 25 அடி குழியில் பூனை ஒன்று விழுந்து மேலே வருவதற்குத் தவித்துக் கொண்டிருந்தது.

இந்தப் பூனையை நபரொருவர் காப்பாற்றவென குழிக்குள் இறங்கியுள்ளார். குழிக்குள் இறங்கிய அவர் மூச்சு எடுக்க முடியாமல் சிரமப்பட்டுள்ளார்.

இதனை அறிந்த நான்கு இளைஞர்கள் குழிக்குள் இருக்கும் பூனையையும், நபரையும் மீட்க அதனுள் இறங்கியுள்ளனர்.

துரதிர்ஷ்டவசமாக குழிக்குள் இறங்கிய பூனையைத் தவிர அனைவரும் மூச்சு எடுக்க முடியாமல் மயக்கமடைந்தனர்.

சம்பவத்தைக் கேள்வியுற்ற பிரதேச மக்கள் உடன் சென்று குழிக்குள் இருந்த பூனையையும், 5 நபர்களையும் மீட்டு அளவ்வ மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

இதன்போது சிகிச்சை பயனின்றி நபர் ஒருவர் (வயது-45) உயிரிழந்துள்ளார். ஏனையோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ச)

# தேர்தல் பிரசாரத்துக்கு பாடசாலை கட்டடங்கள்

## நிறுத்துமாறு ஐ.தே.க. வலியுறுத்து

கொழும்பு,ஓக.11

தேர்தல் பிரசாரம் உள்ளிட்ட அரசியல் நடவடிக்கைகளுக்காக பாடசாலைக் கட்டடங்கள் பயன்படுத்தப்படுவது உடன் நிறுத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய் தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்விநேரத்தின்போது வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆளும் கட்சியின் மேதினக் கூட்டம் கொழும்பிலுள்ள பிரதான பாடசாலை மைதானத்தில் நடத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக பாடசாலை சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டதுடன், மறுநாள் அந்தப் பாடசாலையின் கல்வி நடவடிக்கையும் பாதிக்கப்பட்டது.

இன்று அரசியல் தேவைகளுக்காக பாடசாலைகள் பயன்படுத்தப்படுகின்றன. வடமத்திய மாகாணத்தில் இந்தநிலைமை அதிகளவில் காணப்படுகின்றது. எனவே, தேர்தல் பிரசாரங்கள் உள்ளிட்ட அரசியல் நடவடிக்கைகளை பாடசாலைக் கட்டட வளாகத்தில் முன்னெடுக்கப்படுவது தடுத்துநிறுத்தப்பட வேண்டும் - என்றார்.

அதேவேளை, பாடசாலைகளில் நடத்தப்படும் அரசியல் கட்சிகளின் நிகழ்வுகளின் போதோ அல்லது பொது நிகழ்வுகளின்போதோ பாடசாலைக்குச் சேதம் ஏற்பட்டால் நஷ்டஈடு அறவிடப்படும் என்று பிரதிக் கல்வியமைச்சர் விஜித் விஜிதமுனி சொய்சா தெரிவித்தார். (ச-சி)

# பலவந்தமாக விதவைகள் பாலியல் தொழிலில்

## வடக்கின் வறுமையே காரணம் என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்

கொழும்பு,ஓக.11

வடக்கில் விதவைப் பெண்கள் பலவந்தமாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர் என செய்திகள் வெளியாகியுள்ளன என்று நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் சுட்டிக்காட்டினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் எம்.ஏ. சுமந்திரன். அதேசமயம் சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் அதிகரித்துச்செல்கின்றன என்றும் இவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கை அவசியம் என்றும் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**இராணுவம் மட்டுமல்லாது, மதகுருமார்கள் கூட இன்று சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் சம்பவங்களுடன் தொடர்பு படுகின்றனர்.**



நாட்டில் இன்று சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. 10 வருடங்களுக்கு முன்னர் கூட இந்த நிலைமை காணப்பட்டது. ஆனால் அது இனங்காணப்படவில்லை.

சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். வடக்கைப் பொறுத்தமட்டில் வறுமை காரணமாக இந்த நிலைமை அதிகரித்துச் செல்கின்றது.

இராணுவம் மட்டுமல்லாது, மதகுருமார்கள் கூட இன்று சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் சம்பவங்களுடன் தொடர்புபடுகின்றனர். நான் ஏனைய மதத்தவர்களை மட்டும் கை நீட்டி குற்றஞ்சாட்ட விரும்பவில்லை. நான் ஒரு கிறிஸ்தவன். எனது மதம் சார்ந்த பாதிரியார்கள்கூட இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றனர்.

எனவே, இவற்றை தடுப்பதற்குரிய நடவடிக்கை அவசியம்- என்றார். (ச-சி)

# அதிகரிக்கும் கொள்ளை; நடமாடுவதற்கு அஞ்சும் மக்கள்

கொழும்பு,ஓக.11

காவத்தை, அவுப்பை தோட்டத்தில் நாளாந்தம் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்த வண்ணம் உள்ளதாகத் தோட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த அவுப்பை தோட்டத்துக்குச் செல்லும் வீதியில் இரவு நேரங்களில் கொள்ளையர்களின் நடமாட்டம் பெருகி வருவதுடன், இரவு நேரங்களில் தொழிலுக்குச் சென்று வீடு திரும்பும் மக்களை வழி மறித்து முகமூடிகள் அணிந்த வண்ணம் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி பணம், மோட்டார் சைக்கிள், கையடக்கத்தொலைபேசி என்பன சூறையாடப்பட்டு வருவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியில் கடந்த ஞாயிறு இரவு தொழிலுக்குச் சென்றுவிட்டு தமது வீட்டை நோக்கி சென்று கொண்டிருந்த ஒருவரை வழி மறித்து முகமூடி அணிந்த சிலர், அவரை மரம் ஒன்றில் கட்டிவிட்டு துப்பாக்கியைக் காட்டி பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பனவற்றை சூறையாடியுள்ளனர். இது குறித்து சம்பந்தப்பட்ட நபர் காவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனார். (ச)

# சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பது குறித்து ஆராய்வு

## சட்டங்களும் வலுப்படுத்தப்படும் என்கிறார் மகளிர் விவகார அமைச்சர்

கொழும்பு,ஓக.11

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பது குறித்து தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்கள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று சிறுவர் அபி விருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கர லியத்த நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதிகரித்துவரும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண் களுக்கு எதிரான பாலியல் வன்புணர்வு ஆகியன தொடர்பிலான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இவ் வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது:-

நாடளாவிய ரீதியில் பல பிரதேசங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான சம்பவங்கள்குறித்து நாம் அதிக கவனம் செலுத்தி யுள்ளோம்.

பொலிஸார் , சிறுவர் அதிகார சபையினர் ஆகியோர் இந்த விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்கின்றனர்.

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்புணர்வு ஆகியவற்றுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை அல்லது மரணதண்டனை வழங்கப்படவேண்டும் என்று நீதி அமைச்சின் செயலாளருக்கு நான் அறிவுறுத்தல் விடுத்திருந்தேன்.

சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு தனது அமைச்சாலோ அல்லது சட்டத்தைநடைமுறைப்படுத்துவதன் ஊடாக மாத்திரம் முடியாது. பெற் றோர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் என அனைத்து தரப்பும் இதற்கு ஒத்துழைக்க வேண்டும். சமயம் சார்ந்த விடயங்கள் அதிகமாக போதிக் கப்படுகின்ற போதிலும் சிறு வர் மற்றும் பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் காணப்படுவது விந்தைக்குரிய விடயமாகவுள்ளது.- என்றார். (ச-சி)

# சிறுவர் துஷ்பிரயோகக் குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும்

## நாடாளுமன்றில் ஐ.தே.க.கோரிக்கை

கொழும்பு,ஓக.11

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்புணர்வு ஆகியவற்றுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஸி சேனாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

அதிகரித்துவரும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்புணர்வு ஆகியன தொடர்பில் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையொன்றை சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்புணர்வுகளுடன் தொடர்புபட்ட சம்பவங்கள் அண்மைக்காலமாக நாட்டில் அதிகரித்தவண்ணமுள்ளன. இவை குறித்தே அதிகம் பேசப்படுகின்றன. எனவே, இது குறித்து அதிக கவனம் செலுத்தி அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சிறுவர், பெண்களைப் பாதுகாப்பதற்கு மஹிந்த சிந்தனையில் பல திட்டங்கள் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது. அப்படியான திட்டங்கள் இருக்கின்றபோதிலும்கூட இவ்வாறான சம்பவங்கள் நாட்டில் அதிகரித்தவண்ணமேயுள்ளன.

குறிப்பாக 2007- 2011 ஆகிய காலப்பகுதியில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் 15 ஆயிரத்து 158 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அத்துடன், அக்காலப்பகுதியினுள் ஆயிரத்து 143 வன்புணர்வுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. ஆய்வறிக்கைகள் மூலம் குறித்த தகவல்களை எம்மால் பெறக்கூடியதாகவுள்ளது. கடந்த வருடத்திலும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்துக் காணப்பட்டதை அறிக்கைகள் ஊடாக அறியக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறான சம்பவங்களின் பின்னணியில் அரசியல்வாதிகள், பணபலம் படைத்தவர்களே அதிகளவு காணப்படுகின்றனர்.

எனவே, சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கு சிறுவர் பாதுகாப்புப் பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். மாவட்ட மட்டங்களில் விழிப்புணர்வு செயற்பாடுகள் அவசியம்.

அதேசமயம் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்புணர்வு குறித்தான முறைப்பாடுகளுக்கு உயர்நீதிமன்றத்தின் ஊடாக மூன்று அல்லது ஆறு மாதங்களுக்குள் தீர்ப்பு வழங்கப்படல் வேண்டும். இவ்வாறான குற்றச்சாட்டுக்களில் ஈடுபடும் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனையான மரண தண்டனை விதிக்கப்படவேண்டும்- என்றார். (ச-சி)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நண்பர்கள் சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். சில வேலைகளை நேரத்திற்கு செய்ய முடியாமல், காலதாமதமாகச் செய்வீர்கள். தந்தை வழியில், எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் திடீர் பயணங்கள் செல்லும் வாய்ப்பு உருவாகும்.

**இடபம்:** எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். ஒரு வேலையை முடிக்க, ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அலைய வேண்டிவரும். உடல் உபாதைகளால் பணிபுரிவோர் திடீர் விடுமுறை எடுக்க நேரிடலாம். உங்களின் குடும்ப உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும்.

**மிதுனம்:** வழக்கத்துக்கு மாறாக நீண்ட நேரம் ஓய்வு எடுத்துக்கொள்வீர்கள். திட்டமிட்ட சில வேலைகளை நாளை செய்யலாம் என்று தள்ளிவைப்பீர்கள். சிலருக்கு வாக்குக் கொடுத்துவிட்டு, அதைக் காப்பாற்ற முடியாமல் தடுமாறலாம். கடனாக வாங்கிய பணத்தை உடனே திருப்பிக் கொடுக்க நேரிடலாம்.

**கடகம்:** தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நண்பர்கள் சிலருடன் வெளியிடங்களுக்குச் செல்ல நேரிடலாம். வெளியுலகத் தொடர்புகள் விரிவடையும். உறவினர் ஒருவரைச் சந்தித்துக் கலந்துரையாடுவீர்கள். ஓய்வாக இருக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம்.

**சிங்கம்:** புத்துணர்ச்சியுடன் செயற்படுவீர்கள். முடியுமோ, முடியாதோ என்று நினைத்த வேலை ஒன்று சுமூகமாக முடிவடைவதால், மகிழ்ச்சி அடைவீர்கள். சிலர் கேட்ட உதவிகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். வீட்டில் சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும்.

**கன்னி:** வீண் செலவுகள் ஏற்படும். அரசியல் தொடர்புடையவர்கள் வீண் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். வியாபாரிகளுக்கு போட்டிகள் குறைந்து கணிசமான வருமானம் கூடும். குழந்தைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்களால் உங்களின் வேலைகளில் தடை ஏற்படலாம்.

**நாளை**

ஆடி 28 ஞாயிற்றுக்கிழமை 12.08.2012
திதி: தசமி மா. 06.20 வரை
நட்சத்திரம்: ரோகிணி, பி.ப. 01. 34 வரை
சுபநேரம்: 09.05 -10.35 வரை
ராகு காலம்: 04.35-06.05 வரை

**துலாம்:** சிறிய பிரச்சினை ஒன்றை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். உறவினர்கள் சிலர், தாங்கள் செய்ய வேண்டிய வேலைகளை உங்களிடம் ஒப்படைக்கலாம். எதிலும் ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாகச் செயற்பட வேண்டும்.

**விருச்சிகம்:** அடுத்தடுத்து பணிகள் இருந்தபோதும் உற்சாகமாகச் செய்து முடிப்பீர்கள். வெளியூர்களில் இருக்கும் சிலரை தொலைபேசியில் தொடர்புகொண்டு முக்கிய விடயங்களைப் பேசுவீர்கள். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு:** இன்று செய்ய வேண்டாம் என தள்ளி வைத்த சில வேலைகளை மீண்டும் செய்வீர்கள். வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். உறவினர்கள் உங்களிடம் அன்பாக நடந்து கொள்வர். நீங்கள் எதிர்பாராத சில தரப்பிலிருந்து உங்களுக்கு உதவி கிடைக்கும்.

**மகரம்:** குடும்ப உறுப்பினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி, உற்சாகம் தரலாம். நீண்ட நாள் களாகச் சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். அடுத்த சில நாள்களுக்குப் பின்வரும் என நினைத்த பண வரவு ஒன்று இன்றே வந்து சேரும்.

**கும்பம்:** தந்தை வழியில் மனஸ்தாபம் வராமல் இருக்க, விட்டுக்கொடுத்துச் செல்ல வேண்டும். சில விடயங்களில் முன்னெச்சரிக்கையுடன் செயற்படாததன் மூலம் இழப்புகளைச் சந்திக்கலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரை தொலைபேசியில் தொடர்புகொண்டு பேச முற்பட்டு அவர்கள் இல்லாமல் போகலாம்.

**மீனம்:** வீட்டில் வசதி, வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். மற்றவர்கள் மதிக்கும் வகையில் எந்த விடயத்தையும் செய்ய நினைப்பீர்கள். உங்களின் கடந்த கால செயல்பாடு ஒன்றை, மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். உங்களுக்கு வேண்டிய விடயம் ஒன்றைச் சாதிக்க மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 7 | | 2 | | | 4 |
| | 4 | | | | | 7 | | |
| 8 | | 9 | | 5 | | | | 1 |
| | 9 | 1 | 2 | | | | 4 | |
| 4 | 2 | 8 | 9 | | 3 | 1 | 7 | 5 |
| | 6 | | | | 5 | 8 | 9 | |
| 9 | | | | 2 | | 4 | | 7 |
| | | 4 | | | | | 8 | |
| 2 | | | 4 | | 9 | | | 3 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 | 6 | 4 | 3 | 2 | 8 | 5 | 7 |
| 5 | 7 | 2 | 6 | 8 | 9 | 4 | 1 | 3 |
| 4 | 8 | | 7 | 1 | 5 | 9 | 2 | 6 |
| 1 | 4 | 8 | 3 | 7 | 6 | 2 | 9 | 5 |
| 7 | 6 | 5 | 9 | 2 | 8 | 3 | 4 | 1 |
| 2 | 3 | 9 | 5 | 4 | 1 | 6 | 7 | 8 |
| 3 | 2 | 7 | 8 | 5 | 4 | 1 | 6 | 9 |
| 8 | 9 | 4 | 1 | 6 | 7 | 5 | 3 | 2 |
| 6 | 5 | 1 | 2 | 9 | 3 | 7 | 8 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
021 567 1111

இந்து விளையாட்டுக்கழகம்-இணுவில்
சமுர்த்தி வங்கிச் சங்கம் -இணுவில்
அனுசரணையுடன் நடத்தும்
**இந்துவின் கிண்ணம்-2012**
மாபெரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி
(07பேர் பங்கு பற்றும் 06 பந்துப் பரிமாற்றம்)
இடம்: இணுவில் மத்திய கல்லூரி மைதானம்
விண்ணப்பப்படிவங்கள் பெற்றுக்கொள்ளவும், ஒப்படைக்கவும்
பிரியங்கா நகையகம் (K.K.S. வீதி, இணுவில்)
விண்ணப்பக் கட்டணம்: 500/=
விண்ணப்ப முடிவு திகதி: 15.08.2012
இந்து விளையாட்டுக்கழகம்
இணுவில்
(21620)(54-7-5)
லக்கி வீடியோ&போட்டோ
கே.கே.எஸ் வீதி, இணுவில்.

## தேர்தல் சட்டமீறல் 108 முறைப்பாடுகள்

கொழும்பு,ஓக.11

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 108 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தேர்தல் முறைப்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பொலனறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அதிக தேர்தல் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு அரச வளங்களைப் பயன்படுத்தல், அரச அதிகாரிகளை ஈடுபடுத்தல் குறித்து அநுராதபுரம் மற்றும் கேகாலை மாவட்டங்களில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து தேர்தல்கள் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யவுள்ளதாக அவர் கூறியுள்ளார். இதேவேளை, தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் அரச வளங்கள் பயன்படுத்தப்படுவது அதிகரித்துச் செல்வதாக 'கபே' இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

**முக்கிய அறிவித்தல்**
நில அளவையாளர் K.S.Chandrasegaram (JP) Australiya இல் இருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளேன். எனது காரியாலயத்தில் 08.08.2012 புதன்கிழமையில் இருந்து அளந்த காணி விபரங்களையும், உறுதிக்கொப்பிகளையும் பொறுப்பேற்கும்படி வேண்டுகின்றேன். புதிய அளவீடை செய்வதற்குத் தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே. 021 222 6922,
mobile: 077 975 9174
228/1, சேர்.பொன்:இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
(21468) (2,54,7)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்**

பிறப்பு 08 ★ 07 ★ 1942

இறப்பு 12 ★ 07 ★ 2012



அமரர்
**M.R.ஆனந்தராசா**
(முன்னாள் நீர்கொழும்பு வர்த்தகர்)

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட அமரர் ஆனந்தராசா அவர்களின் மரணச்சடங்கில் நேரடியாகக் கலந்து கொண்டும் மற்றும் அனுதாபங்களையும் ஆறுதல்களையும் தெரிவித்த அனைவருக்கும் மற்றும் பலவழிகளில் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நீர்கொழும்பு. [21440][5-7-54] குடும்பத்தினர்.

**கார் விற்பனைக்கு**
KI - xxxx
தொடரிலக்கமுடைய மாருதி 800 கார் விற்பனைக்கு.
தொடர்பு: 077 138 1492
(21621)(5-7-54)

**மாடி வீடு வாடகைக்கு**
யாழ்.கோயில் வீதியில் அமைந்துள்ள மாடி வீடு முழுமையாக வாடகைக்கு விடப்படும். (தனியார் நிறுவனங்கள் கம்பனிகள் மட்டும் கொடுக்கப்படும்) தொ.பே.:0772489903
(21663)(7,2)

**மணமகள் தேவை**
81 இல் பிறந்த சூரியனும் செவ்வாயும் 8 இல் 97 ¼ பாவமுடைய B.Sc, M.sc அரச நிறுவனத்தில் பணிபுரியும் மண மகனுக்கு, படித்த அழகான மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. இந்து கௌரவ குடும்பத்தில் பிறந்தவராக இருக்க வேண்டும். (21669) (2-7-54)
தொடர்பு : கமலக்கண்ணன் திருமணசேவை
இல. 320, கோயில் வீதி, நல்லூர். 077 6070862

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



மண்ணில்
15★ 06★ 1929

விண்ணில்
12★ 07★ 2012

அமரர்
**பொன்னையா சண்முகநாதன்**
(இளைப்பாறிய உள்ளகக் கணக்காய்வாளர், உரிமையாளர் மருதனார்மடம் எரிபொருள் நிரப்பு நிலையம்)

கடந்த (12.07.2012) வியாழக்கிழமை சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம் பொன்னையா சண்முகநாதன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (11.08.2012) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புத்தூர் வீதி, மீசாலை வடக்கு, மீசாலை. (21475) (2-7) – குடும்பத்தினர்.




5 மாவட்டங்களிலும் பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# இந்தியாவில் நடக்கும் டெசோ குறித்து இலங்கை விமர்சிக்கத் தேவையில்லை

## மத்திய அமைச்சர் வி. நாராயணசாமி பாய்ச்சல்

சென்னை, ஓக.11

டெசோ மாநாடு இந்தியாவிற்குள் நடைபெறும் ஓர் உத்தியோகபூர்வ மாநாடாகும். இது தொடர்பில் வேறுஓர் நாட்டுக்கும், எதிர்ப்பை வெளியிடும் உரிமைகிடையாது என்று மத்திய அமைச்சர் வி. நாராயணசாமி தெரிவித்துள்ளார்.

டெசோ மாநாடு குறித்து மத்திய அரசின் நிலைப்பாடு என்ன என்று நாராயணசாமியிடம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**டெசோ மாநாட்டில் இலங்கை வாழ் தமிழர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட உள்ளது.**

தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதியினால் நாளை ஞாயிற்றுக்கிழமை நடத்தப் படவுள்ள டெசோ மாநாடு குறித்து இலங்கையில் விமர்சனங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

இது குறித்து கருணாநிதியும் தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இந்த மாநாட்டில் இலங்கை வாழ் தமிழர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட உள்ளது.

இந்த மாநாடு தொடர்பில் இலங்கைத் தலைவர்கள் சிலர் வெளியிடும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அமையவில்லை.

இதேவேளை, இந்த மாநாட்டில் ஆளும் காங்கிரஸ் கூட்டணி பிரதிநிதிகள் பங்கேற்க மாட்டார்கள் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (3)



கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரனிடம் 18 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த கட்டில்களை பிரான்ஸ் ஐயப்பன் ஆதீனமும், இந்திரஜித் குடும்பத்தினரும் கையளித்தனர். (3-17)

# ஓடும் ரயிலில் மோதுண்டு வெளிநாட்டுப் பெண் சாவு

கொழும்பு - பம்பலபிட்டி ரயில் நிலையத்திற்கு அருகில், ரயிலில் மோதுண்டு பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த விபத்து நேற்றுக் காலை 08.15 மணி அளவில் இடம்பெற்றதாகவும் அலுவலகம் தெரிவித்தது.

இரத்மலானை நோக்கிச் சென்ற ரயிலில் மோதுண்டே இந்த உயிரிழப்பு நேர்ந்துள்ளதாகவும் உயிரிழந்த பெண் வெளிநாட்டைச் சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த பெண் தொடர்பான மேலதிக தகவல்கள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை எனப்-பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

# இலவசக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக.11

கொழும்பு அருள்கல்வி வட்ட அனுசரணையுடன் 2012 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்கான இலவசக் கருத்தரங்கு நாளைமுதல் மூன்று தினங்கள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

காலை 6 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை நடைபெறும் இந்தக் கருத்தரங்கில், நாளைய தினம் மாணவிகளும், மறுநாள் 13 ஆம் திகதி மாணவர்களும், 14 ஆம் திகதி இருபாலாரும் கலந்துகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும் தெய்வீக இசையரங்கில் பத்தொன்பதாம் திருவிழாவான இன்று மாலை 6.30 மணிக்கு செல்வி .சிவரூபி ஸ்ரீ ஜெகநாதனின் பாட்டுக் கச்சேரி நடைபெறவுள்ளது. வயலின் - ஏ.ஜெயராமன், மிருதங்கம்- எஸ். துரைராசா, கெஞ்சிரா -ஆர். சிவராமன். (3-14-86)

* * *

நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு 'கானகதா வாரிதி' பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் கந்தபுராணம் பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரை யில் 'வீரவாகு தூது' இடம்பெறவுள்ளது.(3)

* * *

நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் "மயில்வாகனன்'' என்ற கருப்பொருளில் சிறப்புச் சொற் பொழிவு ஆற்று வார். (3)

* * *

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணி மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஜாக்கிரத் சைத்தன்ய சுவாமிகள் 'நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி' என்னும் கருப்பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

தொடர்ந்து ஊரெழு சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப்பாடசாலை, அராலி கோமாதா அறநெறிப் பாடசாலை, உரும்பிராய் திருக்குமரன் அறநெறிப் பாடசாலைகளின் கலைநிகழ்வுகள் இடம்பெறும். (3-7-86)

# நோயாளர் நலன்புரி சங்கங்களை பதிவு செய்யக் கோரிக்கை

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்டக் கண்காணிப்புக்குழுக் கூட்டத்தில் புதிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் உள்ள வைத்தியசாலைகளில் இயங்கும் நோயாளர் நலன்புரிச் சங்கங்கள் புதிய யாப்பு விதிமுறைக்கமைய, அவை செயல்படும் பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட வேண்டும்.

அதேநேரம் வைத்தியசாலை நோயாளர் நலன்புரி சங்கங்கள் வெளிநாடுகளில் இருந்து எதுவித நிதிகளையும் கோரிப் பெறக்கூடாது என முடிவுகள் எடுக்கப்பட்டு நிறுவனத் தலைவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (3-300)

# புலமைப் பரிசில் கருத்தரங்கு

தென்மராட்சி, ஓக.11

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை சாவகச்சேரி சிவன் கோயில்வீதியில்உள்ள தென்மராட்சி கலை மன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். றோட்டறிக் கழகத்தின் அனு சரணையுடன் நடத்தப்படும் இந்தக் கருத்தரங்கில் வளவாளர்களாக என்.எஸ்.தீபன், வை.தயாளன்ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3-9)

**வீடு விற்பனைக்கு**

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அருகில் வீட்டுடன் கூடிய நான்கு(4) பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 017 0389, 021 225 0287

(21616)(5-54-7)

**டிஜிற்றல் பனர் பிரிண்டிங்**

1 சதுர அடி 30/=

மூர்த்தி டிஜிற்றல்

62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

021 222 1358

(ஏ/2303)(2-54-7)

**வீடு விற்பனைக்கு**

யாழ். நகர் கடைத்தெருவுக்குச் சமீபமாகவும், கொட்டடிச் சந்திக்கு அருகில் சுமார் 3 பரப்பில் அமைந்த மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 2279 219

(21622) (54.7.2)

**மருத்துவ உதவியாளர் பயிற்சி**

O/L வரை கற்றிருக்கும் அனைவருக்கும் கே.யு வின் பிரபலமான தொழில் வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்ட பயிற்சி நெறி.

M.B.B.S வைத்தியர்களிடம் நேரடியாக கற்கும் அரிய வாய்ப்பு.

பயிற்சிக்கட்டணம் : 12,500/= (6 Months)

லாவா வைத்தியசாலையில் செயன்முறைப் பயிற்சிகள்

புதிய பிரிவு ஆரம்பம்:17/08/2012

**Knowledge Universe**

No 75,Temple Road,Jaffna

Call : 0213208342/0777302882

www.kugroup.info

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

45 நாள்கள் பூர்த்தியடைந்த ஜேர்மன் செப்பேட் அல்சேசன் நாய்க்குட்டிகள் புத்தகத்துடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0771510306

(21624)(54-7-2)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 31 ★ 01 ★ 1946

விண்ணில் 13 ★ 07 ★ 2012

அமரர்

**மா. சவிரிமுத்து**

(வர்த்தகர் புங்குடுதீவு) (பாய் வியாபாரி)

கடந்த 13.07.2012 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர் மார்சலின் சவிரிமுத்து அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அன்னாரது நினைவாக 12.08.2012 அன்று ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன விருந்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்.

[இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்]

புங்குடுதீவு,
12ஆம் வட்டாரம்.

[21608][5-7-54]

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வமணி சின்னத்தம்பி



சித்தங்கேணி, பண்டத்தரிப்பு வீதியைப் பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வமணி சின்னத்தம்பி கனடாவில் கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ் சென்ற செல்லர் சின்னத் தம்பியின் மனைவியும் குணம், குலேந்திரா(கனடா), விஜயன், சுவர்ணா (டென்மார்க்), சிறி, நந்தினி(ஜேர்மனி),வசந்தன், வாணி (டென்மார்க்), கிருபா-மஞ்சு (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் முன்னறிவித்தபடி 11.08.2012 அன்று நடைபெறமாட்டாது. அன்னாரின் பூதவுடல் (18.08.2012) சனிக்கிழமை டென்மார்க்கில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பூரணம்'

ஆச்சியடி ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

தகவல்:
சகோதரன்
வ.வரதராசன்

(21619)(45-54-7)

-உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு-
021 567 1111


## விற்பனைக்கு

1 வயது நிரம்பிய அல்சேசன் ஆண் பெண் நாயும், பொமேரியன் ஆண் பெண் நாயும், பொக்கட்ஸ் பெனியர் ஆண் பெண் நாயும், ரொட்விலர் ஆண் நாயும், வண்டம், வெள்ளடியன் வாமஸ், முயல், லவ்வேட்ஸ் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு- லி.மயூரன்
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஆயக்கடவை பிள்ளையார் கோயில் முன்பாக, பூதராயர் கோயிலடி டயலொக் ரவர் அருகில்.
(21638)(9.14)


# உயர் டிப்ளோமாதாரிகளின் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக. 11

உயர்தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவ டிப்ளோமா பட்டதாரி மாணவர்கள் தாக்கல் செய்த வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தில் புறக்கணிக்கப்பட்ட யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த உயர் தேசிய கணக்கியல் மற்றும் முகாமைத்துவ டிப்ளோமா பட்டதாரிகள் 228 பேர் உயர் நீதிமன்றில் கடந்த மாதம் 31ஆம் திகதி மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது பிரதிவாதிகள் போதிய கால அவகாசம் கோரினர். இதனையடுத்து எதிர்வரும் 27ஆம் திகதிக்கு இந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பட்டதாரிகள் சார்பில் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வாதாடினார். இந்த வழக்கில் பிரதிவாதிகளாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர், அமைச்சின் செயலர், பொதுச் சேவை ஆணைக் குழுவின் அதிகாரிகள், யாழ். அரச அதிபர், திறைசேரிப் பணிப்பாளர், சட்டமா அதிபர் உட்பட 14 பேர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

(16-5)


## மணல் விற்பனைக்கு

நாகர் கோயில் மணல், கண்டாவளை மணல், பூநகரி மணல் என்பன மிகவும் குறைந்த விலையில் டிப்பர்கள் மூலம் நேரடியாக உங்கள் இடங்களுக்கு விநியோகிக்கப்படும்
(21645)(8-14) தொ.பே : 077 1988 980

## கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா ? உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தி தருகிறோம். அழையுங்கள்
T.P : 077 9086737 GUNAA BEST PC
(21639)(8-14)

## வேலையாள் தேவை

பான்சிக் கடைக்கு வேலையாள் (பெண் பிள்ளை) தேவை. முன்பு வேலை புரிந்த அனுபவம் உடையவர்களும், யாழ். நகருக்கு அருகில் வசிப்பவர்களும் விரும்பத்தக்கது, பயிலுநரும் தொடர்புகொள்ளலாம்.
தொடர்பு: 077 9793 300
(21261) (6.51.45)



## நல்லூர் திருவிழாவை முன்னிட்டு பஜாஜ் வாடிக்கையாளர்களுக்கு இலவச விசேடசேவை



எதிர் வரும் 10.08.2012 தொடக்கம் 17.08.2012 வரை நடைபெறும்

ஸ்ரீலங்கா நம்பர் வன் கம்பனி டேவீட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் அங்கீகாரம் பெற்ற யாழ் முகவர் சந்நிதி முருகன் வேக் சொப் அன்ட் சேவிஸ் பஜாஜ் வாடிக்கையாளர்களாகிய உங்களுக்கு டேவீட் பீரிஸ் மோட்டார் கம்பனியின் சேவிஸ் பிரிவில் தொழில்நுட்ப வல்லுனர்களால் உங்களது மோட்டார் சைக்கிளும் மற்றும் முச்சக்கரவண்டியும் இலவசமாக பரீட்சித்து பெற்றுக் கொள்ள முடியும் வாகனங்களுக்குரிய தர நிர்ணய பரிசோதனை இலவசமாகச் செய்து கொள்ளலாம்.

### விசேட சலுகை

*பஜாஜ் தரமான உதிரிப்பாகம் பெற்றுக்கொள்ளும் பஜாஜ் வாடிக்கையாளர்களான உங்களுக்கு 10.08.2012 தொடக்கம் 17.08.2012 வரை எமது நிறுவனத்தில் பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களை மட்டுமே கொள்வனவு செய்யும் உங்களுக்கு பெறுமதி மிக்க பல பரிசில்ககள் காத்திருக்கின்றன 10 % விலைக்கழிவும் உண்டு.*

**சேவிஸ் திருத்த வேலைகளுக்கும் இந்த நாள்களில் 10 % விலைக்கழிவு உண்டு**



## மகோற்சவ கால கடை ஏலம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவியின் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (12.08.2012) காலை 9.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இந்து இளைஞர் சங்கம், தெல்லிப்பழை.
(21633) (2-54-7)


## மீள் விலைக்கேள்வி அழைப்பு
## வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம்

1. வலயக் கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம் யாழ்ப்பாணம், தலைவர்,பிராந்திய பெறுகை குழுவினால் தகுதியான கேள்விதாரர்களிடமிருந்து பின்வரும் வேலைக்காக மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ.இல | பெறுகை இல. | வேலை விவரமும் இடமும் | பதிவு தரம் | விலை மனுப் பிணை ருபா. | மதிப்பீட்டு தொகை மில். |
|---|---|---|---|---|---|
| 01 | J/ZEO/SWB/PSDG/2012/06 | இரண்டாம் மாடி வகுப்பறை கட்டட மிகுதிவேலை (50x25) யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியபலயம் | C8 | 26,000.00 | 2.60 |

2. மேற்குறிப்பிடப்பட்ட வேலையானது ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து 90 நாள்களினுள் முடிக்கப்பட வேண்டும்.
3. ஒப்பந்தத்தை வழங்கத் தகுதி பெறுவதற்காக சித்திகரமான கேள்விதாரர் நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) கட்டட நிர்மாணத்தில் மேற்குறிப்பட்ட தரத்திலோ அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்து கொண்டிருப்பதுடன், பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருத்தல் ஆகாது. (Black listed)
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தில் பாடசாலை வேலைகள் பிரிவில் தேவையான மேலதிக தகவல்களை காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும்
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா ஆயிரத்து ஐந்நூறை (1,500/-) யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்தில் பணமாக் செலுத்தி 2012.08.13 ஆம் திகதி முதல் 2011.08.21 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி தொடக்கம் - பி.ப 3.00 மணிவரை வலயக்கல்வி பணிமனையில் எழுத்து மூலமான விண்ணப்பத்தினை பாடசாலை வேலைகள் பிரிவில் சமர்ப்பித்து முழுமையான கேள்வி ஆவணங்களை ஆங்கில மொழியில் பெற்றுக் கொள்ளலாம்.
6. கேள்விகளைப் பாடசாலை வேலைகள் பிரிவு, வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணத்தில் 22.08.2012 அன்று பி.ப 14.00 மணிக்கு முன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் உடனடியாக, கேள்விப்பத்திரதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்
7. மேற்குறிப்பிட்ட அட்டவணையில் குறிக்கப்பட்ட தொகை கேள்விப்பிணை ஒவ்வொரு கேள்வியிலும் இணைக்கப்பட வேண்டும். கேள்விப்பிணை திறக்கப்படும் தினத்திலிருந்து 120 நாள்கள் (22.08.2012 – 18.12.2012) செல்லுபடியாகக் கூடியதாகவும் அனுமதிக்கப்பட்ட வங்கிகள் அல்லது நிருமாண உத்தரவாத நிதியத்திடமிருந்து பெறப்பட்டு இருத்தல் வேண்டும். கேள்விப்பிணை On-demand & Un-Conditional ஆகவும் தரப்படும் படிவத்திலும் இருத்தல் வேண்டும்.

**V.செல்வராசா**
**தலைவர் ஃ வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**வலயக்கல்வி அலுவலகம்,யாழ்ப்பாணம்.**

(C/2311)(2)


## உடன் விற்பனைக்கு

01. உழவு இயந்திரம் - 49 - xxxx, 270 - xxxx
02. வான் - (KB - VVJC 23) - NPJF - xxxx (NISSAN)
03. மோட்டார் சைக்கிள் - NPVV - xxxx (PASSION PRO)
மேற்குறிப்பிட்ட வாகனங்கள் உடன் விற்பனைக்குண்டு. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
திங்கள் - வெள்ளி காலை 9.00 - மாலை 4.00 மணி வரை
தொடர்பு:- 021 222 1898, 021 222 1900, 0757182184.
TRADE FINANCE&INVESTMENTS PLC


## மரண அறிவித்தல்

திருமதி புஸ்பவதி கனகரத்தினம்
(நயினாதீவு)



நயினாதீவு, 5A வட்டாரம், கந்தசாமி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் இல. 17/12, சந்தனமாதா லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி - கனகரத்தினம் கடந்த (08.08.2012) புதன்கிழமை இரவு கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.08.2012) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17/12, சந்தனமாதா லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.




பிரமாண்டமான ஆடித்தள்ளுபடி
எமது காட்சியறையில்
சரவணா ரெக்ஸ்
Saravana text

யாழ்நகரில்
சரவணா ரெக்ஸ் களஞ்சிய சாலை
சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
(கெங்காதரன் மருத்துவமனை அருகில்)

வடமராட்சியில் 171, பிரதான வீதி,
நெல்லியடி (சம்பத் வங்கி அருகில்)
விடுமுறை நாள்களிலும் திறக்கப்படும்

### இராணுவப் பாதுகாப்பு மாநாட்டில்

# நல்லிணக்கத்துக்கான எட்டு வழிகள் முன்வைத்தார் சுப்பிரமணிய சுவாமி

கொழும்பு, ஓக.11

அரசியலமைப்பின் 13 பிளஸ் திருத்தத்தில் முதலமைச்சர்களுக்கு பொது ஒழுங்கைப் பேணுவதில் அதிகாரம் வழங்கும் சரத்துக்களைச் சேர்க்க வேண்டும் என இந்திய ஜனதா கட்சியின் தலைவர் டாக்டர் சுப்ரமணியம் சுவாமி தெரிவித்தார்.

அத்துடன் இந்தியா, ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் போன்றவற்றில் எவையும் இலங்கை மீது தீர்வினைத் திணிக்க முடியாது எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

கொழும்பில் இடம்பெற்ற பாதுகாப்பு மாநாட்டின் இறுதி நாள் செயலமர்வில் கலந்துகொண்டு போருக்குப் பின்னரான இலங்கை அபிவிருத்தியும் இந்திய அரசின் செயற்பாடுகளும் எனும் தலைப்பில் உரை நிகழ்தியபோதே சுப்ரமணியம் சுவாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் முக்கியமான எட்டு ஆலோசனைகளை முன்வைத்து உரை நியழ்த்தியிருந்தார். அந்த ஆலோசனைகளின் விவரம் வருமாறு:-

01. நல்லிணக்கத்துக்கான முன்மொழிவுகள் வெளியிலிருந்து திணிக்கப்பட முடியாது. இது பங்குதாரர்கள் யாவரினதும் பங்குபற்றலுடன் இலங்கையில் உருவாக வேண்டும். குறிப்பாக இந்தியா, ஐ.நா. சபை, ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை இலங்கை மீது தீர்வினைத் திணிக்க முடியாது.

02. நாடாளுமன்றத்தில் ஓரளவு ஏற்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் 13 பிளஸ் திருத்தத்தின் அடிப்படையில் இறுதித் தீர்வுக்கான ஆலோசனைகள் அமைய வேண்டும்.

03. மாகாணங்களின் ஒன்றியமாக இலங்கை அமையும் வகையில் அரசியலமைப்புத் திருத்தப்பட வேண்டும். மத்திய அரசுக்கும் மாகாணங்களுக்கும் தனித்தனியான அதிகாரங்கள் மற்றும் பொது அதிகாரங்கள் வரையறுக்கப்பட வேண்டும்.

04. இலங்கை அரசியலமைப்பு ஒற்றையாட்சி முறையில் அமைய வேண்டும். மாகாணம் ஒன்றின் அரசைக் கலைக்கும் நிர்வாகத்தை பொறுப்பேற்கும் ஏற்பாடு இந்த அரசியலமைப்பில் இருக்க வேண்டும்.

05. பொது ஒழுங்கைப் பேணுவதற்கு மாகாண அரச தலைவரின் கீழ் மாகாண பொலிஸ் அமையும். ஆனால் ஒன்றியத்தின் அதாவது மத்திய அரசின் கீழ் பொலிஸ், இராணுவம் இருக்கும்.

06. மத்திய அரசு அல்லது ஒன்றியம் விசேட மாவட்ட நீதிபதிகளை நியமிக்கும். இந்த நீதிபதிகளுக்கு மாகாணங்களின் நீதிபதிகளை வழங்கிய தீர்ப்புக்களை மறுபரிசீலனை செய்யும் அதிகாரம் இருக்கும். இவ்வாறாக புதிய அரசியலமைப்பில் நீதித் துறை அமையும்.

07. இலங்கை அரசு சமய சார்பற்றதாக இருக்கும். இலங்கை பௌத்த நாடாயினும் சகல சமயங்களையும் பாதுகாப்பது அரசின் பொறுப்பாகும்.

08. தமிழ், சிங்கள சமுதாயங்கள் ஓரினப் பரம்பரை அடியிலிருந்து தோன்றியவர்கள். வரலாறு, கலாசாரத்தால் இணைந்தவர்கள். இரு மொழி எழுத்துக்களும் பிராமி அடிப்படையிலானவை. சமஸ்கிருதம், பாளி ஆகிய மொழிகளின் பொதுப் பாரம்பரியங்கள் தமிழ், சிங்கள மக்களிடையே காணப்படுகின்றன.

இவற்றின் அடிப்படையில் தமிழர்களைச் சிங்களவர் பெரும்பான்மையாக உள்ள இடங்களிலும் சிங்களவர்களைத் தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள இடங்களிலும் குடியேற்ற வேண்டும். இதை அரசாங்கம் ஊக்குவிப்புக்கள், பாதுகாப்பு ஏற்பாடுகளால் ஊக்குவிக்க வேண்டும். நிச்சயமாக இதில் அரசாங்கத்தின் நெருக்குவாரம் இருக்கக் கூடாது. - என்று அவரது எட்டு ஆலோசனைகளும் அமைந்தன. (10)



இராணுவப் பாதுகாப்பு மாநாட்டின் இறுதிநாள் அமர்வில் சிறப்புரையாற்றிய இந்திய ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுடன்.

# வலுவிழந்த 23 சிறுவருக்கு ஜூலையில் மட்டும் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஓக.11

வலுவிழந்த 23 சிறுவர்கள் கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் யாழ்.போதனா வைத்தியசாலையின் தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று பிரதான தொழில் வழிச் சிகிச்சையாளர் ஆர்.கணேசலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்துக்கென பிரதான தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவு யாழ்.போதனா வைத்தியசாலையில் மட்டும் உள்ளது. இந்த நிலையில் அதிகமாக சிறுவர்களே இங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து ஜூலை மாதம் வரை 217 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். இவர்களில் சிறுவர்களே அதிகமானவர்கள். எனினும் கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் 23 சிறுவர்கள் சிகிச்சை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மன்னார், வவுனியா, திருகோணமலை, உட்பட வன்னி மாவட்டம், யாழ்.மா வட்டம் என வடமாகாணத்தில் பல பாகங்களிலும் இருந்து நோயாளர்கள் வந்த வண்ணமே உள்ளனர்.

யாழ். போதனா வைத்திய சாலையில் குழந்தைகளுக்கான சிகிச்சையே முன்னிலைப்படுத்தி வழங்கப்படுகிறது. ஏனைய பக்கவாத நோய், தற்கொலை முயற்சி, விபத்து போன்ற காரணங்களால் அங்கங்கள் செயலிழந்து அல்லது அங்கங்கள் இழக்கும் நோயாளர்களுக்கும் விடுதிகளில் வைத்து சிகிச்சை வழங்கப்படுகிறது.

கடந்த 7 மாத காலப் பகுதிக்குள் மட்டும் 50 வயதுக்கு மேற்பட்டவர்களில் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 42 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

தற்கொலை முயற்சி, விபத்து, நாள்பட்ட காயங்கள், சத்திர சிகிச்சையால் உண்டான காயங்கள் காரணமாக எட்டு வயது முதல் 32 வயதுக்கு உட்பட்டவர்கள் 62 பேரும், 12 வயதுக்குட் பட்ட அங்கங்கள் செயலிழந்து பக்கவாத நோயால் பாதிக்கப்பட்ட 119 சிறுவர்களும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சிறுவர்களுக்கான நோய்களைக் குணப்படுத்த தொழில் வழியூடாகச் சிகிச்சை வாரந்தோறும் வழங்கப்படுகிறது. இயந்திர சாதனங்கள், சிகிச்சைக்கான உபகரணங்கள், இடவசதிகள் இல்லாத போதும் பெரும் சிரமத்தின் மத்தியில் இங்கு சிகிச்சை வழங்கி வருகின்றோம்.-என்றார். (ம-14)

# ஐ.நா. செயலர் நியமித்த குழுவின் அறிக்கை கேள்விக்குரியதொன்றே

### இலங்கை அரசு நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.11

தனக்கு ஆலோசனை வழங்கவென ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நியமித்த தருஸ்மன் தலைமையிலான நிபுணர்கள் குழு தனது அறிக்கையில் வெளியிட்டுள்ள விவரங்களைச் சேகரிப்பதற்கு குழுவுக்கு சாட்சியமளித்தவர்கள் தொடர்பான தகவல்கள் இதுவரை எவருக்கும் தெரியவராததால், அந்த நிபுணர்கள் குழுவின் அறிக்கை இன்னமும் கேள்விக்கு உரிய தொன்றாகவே இருந்து வருவதாக இலங்கை அரசு நேற்று வலியுறுத்தித் தெரிவித்துள்ளது.

நவம்பர் மாதத்தில் கூட்டவுள்ள பூகோள பருவகால மீளாய்வுக் கூட்டத்தில் இலங்கையின் மனித உரிமை நிலவரம் தொடர்பில் ஆராயப்படும்.

கொழும்பு கலதாரி ஹோட்டலில் இடம்பெற்ற சர்வதேச பாதுகாப்பு மாநாட்டின் நேற்றைய கடைசி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சரும், மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியுமான மஹிந்த சமரசிங்க, ஐ.நா. நிபுணர்கள் குழுவுக்குச் சாட்சியம் வழங்கியவர்கள் தொடர்பான விவரங்கள் எதிர்வரும் 20 ஆண்டுகள் காலத்துக்கு பகிரங்கப்படுத்தப்படமாட்டாதென ஐ.நா. நிபுணர்கள் குழுவால் உறுதியளிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அதேவேளை ஐ.நா. செயலாளர் நாயகம் இலங்கை தொடர்பாகத் தமக்கு ஆலோசனை வழங்கவென நிபுணர்கள் குழுவொன்றை நியமிப்பதற்குக் கொண்டிருந்த உரிமை குறித்து இலங்கை அரசு கேள்வி எழுப்பியதில்லை என்பதையும் அமைச்சர் வலியுறுத்தித் தெரிவித்தார்.

தனது பூரண அறிக்கையைத் தயாரிப்பதற்கு முன்னர் ஐ.நா. நிபுணர் குழு இலங்கைக்குப் பயணம் செய்து தகவல்களைத் திரட்ட வாய்ப்புப் பெற்றிருந்ததெனத் தெரிவித்த அமைச்சர் சமரசிங்க, ஆனால் ஐ.நா. நிபுணர்கள் குழு இதுவரை அத்தகைய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளவில்லையெனவும் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் கூட்டவுள்ள பூகோள பருவகால மீளாய்வுக் கூட்டத்தில் இலங்கையின் மனித உரிமை நிலவரம் தொடர்பான நியாயமான கணிப்பீட்டை இலங்கை அரசு எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

குறிப்பிட்ட மீளாய்வுக் கூட்டத்தில் போருக்குப் பின்னரான காலத்தில் நாட்டில் மனித உரிமைகளைப் பேண இலங்கை அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் முன்னேற்றங்கள் குறித்த தகவல்களை இலங்கை அரசு பகிர்ந்து கொள்ளவுள்ளதாகவும் அமைச்சர் சமரசிங்க தெரிவித்தார்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின் புள்ளி விவரங்கள், போரின் இறுதிக் கட்டத்தில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கொல்லப்பட்டனர் என்பது தவறான கணிப்பீடு என்பதை நிரூபிக்கும் என அரசு நம்புவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (த)

# உடல் ஊனமுற்றவர்களுக்கு வவுனியாவில் வீட்டுத் திட்டம்

வவுனியாவ, ஓக.11

வலுவிழந்தோர்களின் தேசிய செயலகத்தில் வவுனியா மாவட்டத்திலுள்ள உடல் ஊனமுற்றவர்களுக்கு வீடமைப்புத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

வலுவிழந்தோர் தேசிய செயலகத்தினால் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஊனமுற்றவர்களுக்கான வீடமைப்புத் திட்டத்தின் மூலம் வீடுகள் அமைத்துக் கொடுக்கும் பணிகள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இந்த வகையில் வவுனியா மாவட்டத்திலுள்ள வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, செட்டிகுளம் மற்றும் நெடுங்கேணி ஆகிய நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் தலா 10 வீடுகள் வீதம் மொத்தமாக 40 வீடுகள் உடல் ஊனமுற்றவர்களுக்கு மானிய அடிப்படையில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

உடல் ஊனமுற்றவர்களைக் கொண்ட குடும்பங்களுக்குத் தேவையான வீட்டு வசதிகள் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. (க-400)

# ஈழத் தமிழ் மக்களின் வாழ்வும் சாவும் தமிழக அரசியல்வாதிகளின் சுயலாபத்துக்கா?

### வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் டெசோவுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஓக. 11

ஈழத் தமிழினம் போரின் அவலங்களை அனுபவித்த போது இந்த டெசோ அமைப்பு என்ன செய்தது? இப்போது என்ன அவசியம் ஏற்பட்டது மாநாடு நடத்துவதற்கு?

ஈழத் தமிழனின் வாழ்வையும் சாவையும் தமிழ்நாட்டின் அரசியல்வாதிகள் தமது சுயலாபத்திற்கும் வளமான வாழ்வுக்கும் பயன்படுத்தும் வரை ஈழத் தமிழினத்திற்கு விடிவு எப்படி ஏற்படும்?

போர் ஓய்ந்த பின்னர் நாம் இழந்த சொத்தை மீட்க கடலில் சென்றால் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய அடாவடி. இவ்வாறான நிலையில் கூட்டப்படும் டெசோ மாநாடு கடற்றொழில் மக்களின் அவல வாழ்வு நீங்க நடவடிக்கை எடுக்குமா?

இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர்களின் கூட்டமைப்பினால் டெசோ மாநாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

1985ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ ஆதரவாளர் அமைப்பு (டெசோ) இந்த 27 வருடங்களில் ஈழத் தமிழனுக்கு எந்த வகையில் என்ன செய்தது?

வன்னி மண்ணில் கொத்துக் குண்டினால் குலை குலையாக தலை சாய்ந்த எம்மினத்தவர் எத்தனை? கிபிர் போட்ட குண்டுகளினால் சிதறி சின்னாபின்னமாகி மாண்டு போன எம்மினத்தவர் எத்தனை? தாய், தந்தையரை இழந்த அநாதைச் சிறுவர்கள் எம்மாத்திரம்? கணவனை இழந்து நிர்க்கதிக்குள்ளாகி வாழவழி தெரியாத விதவைப் பெண்கள் எத்தனை?

போர் ஓய்ந்த பின்னர் மீண்டும் நாம் இழந்த சொத்தை கடல் தாயின் மடியிலிருந்து மீண்டும் மீட்டுவிடுவோம் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் கடல் மீது சென்றால் இந்திய இழுவைப் படகுகளின் நடவடிக்கைகள், அத்துமீறிய செயற்பாடுகள் காரணமாக தொழில் செய்ய முடியாத அவலம்.

இந்த நிலை தொடர்பாக உயர்மட்டத்திலான அதிகாரிகளிடம் எத்தனை மனுக்கள் கொடுத்தோம். தொடர்பாடல் பலதடவை மேற்கொண்டோம். முடிவுகள் சாதகமாக ஏற்படவில்லை.

இதன்பின் ஈழத்தமிழ் மீனவர் குழு நேரடியாக தமிழ்நாட்டுக்குப் பயணத்தை மேற்கொண்டு தமிழ்நாட்டின் கரையோர மீனவர்களைச் சந்தித்து எம்மவர்களின் நிலைமையை, கடந்த போர் அனுபவங்களையெல்லாம் பரஸ்பரம் வெளிப்படுத்தினோம். இதன்பின்னராவது, எம்மவர்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்று நம்பினோம். ஒன்றுமே நடைபெறவில்லை.

இந்த நிலையில் இது விடயமாக இந்திய அரசு மௌனம் காத்தது ஏன்? தமிழ்நாடு அரசு கூட பாராமுகமாக இருந்து விட்டது ஏன்? இரு அரசுகளும் மௌனம் சாதித்ததற்கு அர்த்தம் இல்லாமல் இல்லை.

இழுவைப் படகு தொழில் நடைமுறைகளால் எம்மவர்கள் பட்ட துன்பங்கள், துயரங்கள் சொல்லிமாளாது. இழுவைப் படகுகளின் நடவடிக்கைகளால் வலைகளை இழந்த மீனவர்கள் இன்றும் கூட தொழில் செய்ய முடியாத அவல வாழ்வு வாழ்கிறார்களே! இவை அனைத்தும் அரசியல்வாதிகளுக்குத் தெரிந்தும் தெரியாமல் இருக்கின்றனரே. அரசியல்வாதிகளைப் பகைத்துக் கொள்ளும் எண்ணம் அரசுகளுக்கு சற்றேனும் இல்லை. ஈழத் தமிழர்களின் கடற்றொழில் நடைமுறைக்குப் பூரண பாதுகாப்பு வழங்கி கடல் வளங்களைப் பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கு ஒப்படைக்குமா டெசோ மாநாடு?- என்றுள்ளது.

(10-5)

# மயிலங்காடு ஞானமுருகனைப் பந்தாடி நாச்சிக்குடா சென்.மேரிஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக.11


வடமாகாணத்தில் உதைபந்தாட்டத் துறையை வளர்க்கும் முகமாக நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்ற உதைபந்தாட்ட விழா-2012 நிகழ்வில் கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கில் அங்கத்துவம் வகிக்கும் நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.



இந்த நிகழ்வின் இறுதியாட்டத்தின் நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியினர் மோதிக் கொண்டனர். ஆட்டம் ஆரம்பமாகியது முதல் இரண்டு அணியினரும் தத்தமது அணிக்கான கோல்களை பெறும் நோக்கோடு எதிர் அணியினரின் கோல்பரப்பினுள் நுழைந்த வண்ணம் இருந்தனர். இதன் போது நாச்சிக்குடாசென்.மேரிஸ் அணியினருக்கு கிடைத்த கோல் பெறும் சந்தர்ப்பம் ஒன்று தவற விடப்பட்டது. ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமான போது இரு அணியினரும் தமது ஆட்டத்தினை வேகப்படுத்தி கோல்களை பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர்.

இதன் போது நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி தனக்குக் கிடைத்த கோல் பெறும் சந்தர்ப்பத்தினை சரியாகப் பயன் படுத்தி முதலாவது கோலினை அடித்தது. இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. பதிலுக்கு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி வீரர்களும் கோல்களை பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட போதும் சென்.மேரிஸ் அணியால் அந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டன. ஆட்டம் நிறைவடைவதற்கு 10 நிமிடங்கள் இருக்கையில் சென். மேரிஸ் அணி இரண்டாவது கோலினையும் பெற்றது. பதிலடியாக ஞானமுருகன் அணி கோல் அடிக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் அனைத்தும் பயனற்றுப் போயின. ஆட்ட நிறைவில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல்க்கணக்கில் வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் நாச்சிக்குடா சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜேசுதாசன், ஞானமுருகன் அணியைச் சேர்ந்த தசரதன் ஆகியோர் ஆட்ட நாயகன் விருதைப் பகிர்ந்து கொண்டனர். ஆட்டத் தொடர் நாயகனாக நாச்சிக்குடா சென்.மேரிஸ் விளையாட்டக் கழகத்தைச் சேர்ந்த ஜெராட் சுரேன், சிறந்த கோல் காப்பாளராக ஜோன் மேரி மைக்கல் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.



மேற்படி போட்டியில் பங்குபற்றிய அனைத்து விளையாட்டுக் கழகங்களுக்கும் பணப் பரிசில்களும், ஒவ்வொரு போட்டிகளிலும் தெரிவுசெய்யப்பட்ட சிறந்த வீரர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டது. (ஙு-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக.11

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் வருடந்தோறும் நடத்தும் விளையாட்டு விழாவில், ஓர் அங்கமான யாழ். மாவட்டத்தின் முன்னணி நட்சத்திர விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றும் 7 பேர் கொண்ட விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் லீக் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகளின் விவரம் வருமாறு -

பிற்பகல் 3.30 மணி

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் நவிண்டில் கலைமகள் விளையாட்டுக்கழகம்

பிற்பகல் 4.30 மணி

ஊரெழு றோயல்விளையாட்டுக்கழகம் எதிர் மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் .

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப. 4 மணி

சுடர் ஒளி விளையாட்டுக் கழகம் எதிர் வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகம்.

* * *

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை நவாலி அட்டகிரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப. 3.30 மணி

ஆனைக்கோட்டை விளையாட்டுக்கழக அணி எதிர் நவாலி சென் . பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம்

பி.ப 4.30 மணி

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக ''பி'' அணிஎதிர் உரும்பிராய் சென். மைக்கல் ''ஏ''அணி.

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ்தொழிற்சாலையின் ஆதரவுடன் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு-

பி.ப 3.30 மணி

கலட்டி ஐக்கியம் விளையாட்டுக்கழகம் ''பி''அணி எதிர் விண்மீன் விளையாட்டுக்கழகம்

பி.ப 4.30 மணி

பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக்கழக''பி'' அணி எதிர் சிவானந்தா விளையாட்டுக்கழக ''ஏ'' அணி (ஙு-23)

# குமரன் ரி/6 தொடர் கைதடியில் இன்று



யாழ்ப்பாணம், ஒக.11

கைதடி மேற்கு சனசமுக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குமரன் விளையாட்டுக்கழகம் தென்மராட்சி ரீதியிலான விளையாட்டுக்கழகங்களுக்கிடையில் நடத்தும் 6 பேர் பங்கு பற்றும் 5 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட 'குமரன் ரி/6' மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை போட்டிகள் இடம்பெறவுள்ளன. மேற்படி போட்டிகளில் பங்கு பெறவுள்ள விளையாட்டுக்கழகங்கள் நேர காலத்துடன் மைதானத்துக்கு சமுகம் தந்து தங்களது வரவினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஙு-23)

# வலைப்பந்தில் கையெழுத்து ஊர்தி யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், ஒக.11

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி முதல் 31ஆம் திகதி வரை 8 ஆவது ஆசிய வலைப்பந்தாட்ட வெற்றிக் கிண்ண போட்டிகள் இடம் பெறவுள்ளன. இந்தத் தொடருக்கு பிரதான அனுசரணையாளராக மக்கள் வங்கி செயற்படவுள்ளது.

ஆசிய வலைப்பந்தாட்ட போட்டியை முன்னிட்டு மக்கள் வங்கியினால் ஒழுங்கு செய்யப்பட்ட, வலைப்பந்தில் கையெழுத்திடும் நடமாடும் நிகழ்வு இன்று சனிக்கிழமை யாழ்.மாவட்டத்தில் இடம் பெறவுள்ளது.

இதனையொட்டி இராட்சத பந்தினை தாங்கிய ஊர்தி இன்று காலை கொடிகாமத்தில் இருந்து சாவகச்சேரி, அங்கிருந்து யாழ்.ஆஸ்பத்திரி வீதி ஊடாக மணிக்கூட்டு கோபுரத்தடி பின்னர் அங்கிருந்து இராமநாதன் கல்லூரிக்குச் செல்லவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் மற்றும் யாழ்.மாவட்ட வலைப் பந்தாட்டத் தலைவி சறோஜினி சிவச்சந்திரன் மற்றும் யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி ஜே.எப். ஏ.றூபசிங்கம் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் மற்றும் மக்கள் வங்கியின் உயரதிகாரிகள் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். (ஙு-5-23)

# நாமகள் வெற்றிக் கிண்ண உதைபந்து முடிவுகள் சில

யாழ்ப்பாணம்,ஒக.11

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின்ஆட்டங்கள்சிலவற்றின் முடிவுகள் வருமாறு -

றோயல் விளையாட்டுக் கழகஅணியைஎதிர்த்து அராலி ஏ.எல் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்ட ஆட்டத்தில் றோயல் அணி கோல் மழை பொழிந்து 10:4 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.

அராலி சில்வெஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் சாவற்காடு மகாத்மா விளையாட்டுக்கழக அணிக்கும் இடையில் நடைபெற இருந்த ஆட்ட நேரத்தின் போது சாவற்காடு மகாத்மா அணி மைதானத்துக்கு சமுகம் தராமையினால் அராலி சில்வெஸ்ரார் அணிக்கு வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

நாவாந்துறை சென். நீக்கிலஸ்''ஏ''அணிக்கும் மயிலங்காடு ஞானமுருகன் ''பி'' அணிக்கும் இடையிலான பரபரப்பான ஆட்டத்தில்இரு அணிகளும் சமபலத்தோடு மோதிக்கொண்டன. எனினும் அனுபவ வீரர்களின் துணையோடு ஆட்ட நேர நிறைவில் ஞானமுருகன் ''பி'' அணி 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

உரும்பிராய் சென். மைக்கல்''ஏ''அணிக்கும் நாவாந்துறை சென் மேரிஸ் ''பி'' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உரும்பிராய் சென். மைக்கல்''ஏ ''அணி 4:2 கோல்கணக்கில் சென். மேரிஸ் அணியை தோற்கடித்தது. (ஙு-23)

## சாதனை வீராங்கனை



*வடமாகாண கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட தடகள விளையாட்டுப் போட்டிகளில் உடுவில் மகளிர் கல்லூரி வீராங்கனை நவரத்தினசாமி வராகிணி 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் மாகாண மட்டத்தில் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.*

*இவர் 1.43 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து முதலிடத்தைப் பெற்று இந்த தங்கப்பதக்கத்தைத் தனதாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (86)*

# கருணாகரனை வீழ்த்தி நெடியகாடு வி.க. வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக 11

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அல்வாய் மனோகரா சனசமூக நிலையத்தின் 85 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மனோகரா விளையாட்டுக் கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில்நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில்நெடியகாடு விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில், ஆட்டம் முடிவடையும் வரை இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. எனவே வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் நெடிய காடு விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. (ஙு-23)

# ஆட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஒக 11

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் முக்கோணக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இன்று சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக அணிக்கும் கே. ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழகத்துக்கும் இடையே நடைபெற இருந்த ஆட்டம் பிற்போடப்பட்டுள்ளது. யாழ் பல்கலைக்கழக அணி வீரர்கள் அனைத்து பல்கலைகழகங்களுக்கிடையிலான ஹொக்கிப் போட்டியில் பங்குபற்றுதற்கு சென்றுள்ளதாலேயே இன்றைய ஆட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஙு-23)













# விரக்தியில் விஜய் குமார்

லண்டன் ஒலிம்பிக் துப்பாக்கி சுடுதலில் வெள்ளி வென்று சாதனை படைத்த இந்திய வீரர் விஜய் குமார் விரக்தியின் உச்சத்தில் இருக்கிறார். தனக்கு பதவி உயர்வு வழங்காமல் புறக்கணிக்கும் ராணுவத்தில் இருந்து விலக முடிவு செய்துள்ளார்.

இமாச்சல பிரதேசத்தை சேர்ந்தவர் விஜய்குமார் (வயது - 26). லண்டன் ஒலிம்பிக் துப்பாக்கி சுடுதல் 25 மீற்றர் 'ரேபிட் பயர் பிஸ்டல்' பிரிவில் வெள்ளி வென்றார். தற்போது ராணுவத்தில் 'சுபேதார்' அந்தஸ்தில் பணியாற்றுகிறார். இவர் பல போட்டிகளில் பதக்கம் வென்ற போதும் எவ்வித அங்கீகாரமும் அளிக்கப்பட வில்லை. இதையடுத்து ராணுவத்துக்கு 'குட்பை' சொல்ல முடிவு எடுத்துள்ளார்.

ஒலிம்பிக்கில் வெள்ளி வென்றதும் இவருக்கு, இமாச்சல பிரதேச அரசு ரூ. 1 கோடி பரிசு அறிவித்தது. ஆனாலும் அரசு விருது எதுவும் தனக்கு வழங்கப்படவில்லை என்று குறை கூறுகிறார்.

இது குறித்து விஜய்குமார் கூறுகையில், கடந்த 2006 முதல் பல்வேறு சர்வதேச போட்டிகளில் பங்கேற்று நாட்டுக்காக நிறைய பதக்கம் வென்றுள்ளேன். 2010 இல் டில்லியில் நடந்த கொமன்வெல்த் போட்டியில் 3 தங்கம், ஒரு வெள்ளியை வென்றேன். துப்பாக்கி சுடுதல் பயிற்சிக்கு தேவையான வசதிகளை மட்டும் ராணுவம் செய்து கொடுத்தது. மற்றபடி எனது பெயரை எந்த ஒரு சலுகைக்கும் மூத்தவர்கள் பரிந்துரை செய்யவில்லை. ராணுவத்தில் பதவி உயர்வு அல்லது கௌரவ விருது உட்பட எதுவுமே வழங்கப்படவில்லை. 'சுபேதார்' பணியில் பல காலமாக நீடிக்கிறேன். ஒலிம்பிக்கில் வெள்ளி வென்ற பின்பும், எனக்கு பதவி உயர்வு வழங்க மறுத்தால், ராணுவத்தில் இருந்து விலகி விடுவேன். தேசிய, சர்வதேச போட்டிகளில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு வழங்கும் இமாச்சல பிரதேச அரசின் 'பரசுராம், இமாச்சல் கவுரவ்' போன்ற விருதுகளும் எனக்கு அளிக்கப்படவில்லை ,என்றார்.

இதற்கிடையே விஜய் குமாரை சமாதானம் செய்யும் முயற்சியில் ராணுவம் இறங்கியுள்ளது. இவரது பதவி உயர்வு பற்றி பரிசீலிக்கப்படும் என்றும் நாடு திரும்பியதும், ரொக்க பரிசு வழங்கி கௌரப்படுத்த இருப்பதாகவும் தெரிவித்துள்ளது. (5)

# ஜமைக்கா வெளியேற்றம்

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகளில் ஆண்களுக்கான 400 மீற்றர் தொடர் ஓட்டத்தில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட தென்னாபிரிக்கா மற்றும் ஜமைக்கா நாட்டின் அணிகள் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளன. தகுதிச் சுற்றுப் போட்டிகளில் இந்த இரு நாட்டு அணிகளும் ஓட்டத்தை நிறைவு செய்யத் தவறிவிட்டன.

அதிலும் குறிப்பாக இளம் வயதிலேயே போலியோ நோயினால் இரு கால்களையும் இழந்து செயற்கை கால்களுடன் ஓடும் தென்னாபிரிக்க வீரரான ஆஸ்கர் பிஸ்டோரியஸின் ஒலிம்பிக் கனவும் தகர்ந்து போனது.

நான்கு பேர் ஓடும் இந்தத் தொடரோட்டத்தில் இரண்டாவதாக ஓடிய தென்னாபிரிக்க வீரர் அபெண்ட்ஸே மொகவானே, அஞ்சல் ஓட்டத்துக்கான குச்சி ஆஸ்கர் பிஸ்டோரியஸிடம் கொடுக்க வந்தபோது, அடுத்த பாதையில் ஓடிய கென்யாவின் வின்செண்ட் கீலுவுடன் மோதி தடுக்கி விழுந்தார். இதன் மூலம் அந்த அஞ்சல் ஓட்டத்துக்கான குச்சி எகிறி விழுந்து அடுத்த சுற்றை ஓட வேண்டிய ஆஸ்கர் பிஸ்டோரியஸ் கைக்கு கிடைக்காமல் போனது. ஜமைக்காவை பொறுத்தவரை மூன்றாவதாக ஓடிய ஜெர்மையின் கொன்ஸாலஸ் தசைபிடிப்பு காரணமாக தனது சுற்றை முடிக்க இயலாமல் போனது.

கென்யா அணி தொடரோட்டத்தை முடித்தாலும், தென்னாபிரிக்கா செய்த மேல்முறையீடு காரணமாக தகுதி நீக்கம் செய்யப்பட்டது. இந்த தொடரோட்டத்தின் இறுதிப் போட்டியில் தமது அணி பங்குபெற முடியாமல் போனது தனக்கு மிகுந்த ஏமாற்றம் அளித்துள்ளது என்று ஆஸ்கர் பிஸ்டோரியஸ் கூறியுள்ளார்.

ஒலிம்பிக் கிராமத்தில்

# வீரர்கள் தலைமறைவு

கெமரூன் நாட்டைச் சேர்ந்த ஒலிம்பிக் போட்டியாளர்கள் 7 பேர் பிரிட்டனில் காணாமல் போயுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இவர்களில் ஐந்து பேர் குத்துச்சண்டை போட்டியாளர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் பொருளாதார காரணங்களுக்காக ஐரோப்பாவில் தங்கியிருக்க தீர்மானித்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

முதலில் மகளிர் உதைபந்தாட்ட அணியைச் சேர்ந்த மாற்று கோல்காப்பாளரான ட்ருசில்லே என்கோகா காணாமல் போனதாக கெமரூன் ஒலிம்பிக் குழுவினர் கூறியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதன் பின்னர் நீச்சல் போட்டியாளர் ஒருவரும், குத்துச்சண்டை போட்டியாளர்கள் ஐவரும் ஒலிம்பிக் கிராமத்திலிருந்து காணாமல் போயுள்ளனர்.

முதலில் வதந்தி என்று கருதப்பட்ட விடயம் உண்மையாகியுள்ளது என்று கெமரூன் விளையாட்டுத்துறை அமைச்சுக்கு அனுப்பிய கடிதமொன்றில் அந்த நாட்டு ஒலிம்பிக் குழுவின் தலைவர் டேவிட் ஒஜோங் தெரிவித்துள்ளார். (5)




# சொல்லி அடித்தார் போல்ட்

லண்டன் ஒலிம்பிக் தடகளப் போட்டியில் மின்னல் வேக வீரரான ஜமைக்காவின் உசைன் போல்ட் மீண்டும் தங்கப் பதக்கத்தை வென்று தனது ஆதிக்கத்தை நிலைநாட்டினார்.

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் தடகளப் போட்டியில் ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் அனைவரும் எதிர்பார்த்தது போலவே ஜமைக்காவின் உசைன் போல்ட் 19.32 செக்கன்களில் 200 மீற்றரை கடந்து தங்கப்பதக்கத்தை தட்டிச்சென்றார்.

அவரது சக நாட்டு வீரரான யோஹன் பிளேக் 19.44 செக்கன்களில் இலக்கை கடந்து வெள்ளிப் பதக்கத்தையும், ஜமைக்காவின் மற்றொரு வீரரான வரன் வெய்ர் 19.84 செக்கன்களில் கடந்து வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

ஏற்கனவே நடைபெற்ற 100 மீற்றரிலும் போல்ட் தங்கப்பதக்கத்தையும், யோஹன் பிளேக் வெள்ளிப்பதக்கத்தையும் வென்றது குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியாக இரண்டு ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று இருதடவையும் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டங்களில் தங்கம் வென்ற முதல் வீரர் என்ற சாதனையையும் போல்ட் படைத்தார். (5)




# மன்னிக்க வேண்டுகின்றேன்

லண்டன் ஒலிம்பிக்கின் பெண்கள் குத்துச்சண்டை போட்டி 51 கிலோ எடை பிரிவு அரையிறுதியில், இந்தியாவின் மேரிகோம் 6:11 என்ற கணக்கில் இங்கிலாந்தின் நிக்கோலா அடம்சிடம் தோல்வியடைந்தார்.

இதனால் மேரிகோமுக்கு வெண்கல பதக்கமே கிடைத்தது. இது குறித்து மேரிகோம் கூறுகையில், முதல் 2 சுற்றுகளும் சரியாக அமையவில்லை.

கடைசி சுற்றில் கடுமையாக போராடினேன். ஆனால் பலமுறை நடுவர்கள் எனக்குப் புள்ளிகள் வழங்கவில்லை. நிக்கோலா ஆட்டத்திறன் இல்லாவிட்டாலும் வலிமையான உடல்வாகு கொண்டவர். ரசிகர்கள் ஆதரவு அதிகளவில் அவருக்கு இருந்தது. தங்கம் வெல்ல முடியாமல் போன தற்காக என்னை இந்திய மக்கள் மன்னிக்க வேண்டும்.

வெண்கலம் வென்றதன் மூலம் எனது ஒலிம்பிக் பதக்க கனவு முழுமை அடைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார். (5)




நீச்சலில் மரதன்

# தங்கம் வென்றது ஹங்கேரி

நீச்சல் போட்டியில் பெண்களுக்கான 10 கிலோ மீற்றர் மரதன் போட்டியில் ஹங்கேரி வீராங்கனை தங்கம் வென்றார்.

பெண்களுக்கான 10 கிலோ மீட்டர் மரதன் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் 22 வீராங்கனைகள் கலந்து கொண்டனர். போட்டியின் முடிவில் ஹங்கேரி வீராங்கனை ஈவா ரிஸ்டோவ் பந்தய தூரத்தை 1 மணி 57 நிமிடம் 38.2 செக்கன்களில் கடந்து தங்கப் பதக்கம் வென்றார்.

அமெரிக்க வீராங்கனை ஹலே அண்டர்சன் 1 மணி 57 நிமிடம் 38.6 செக்கன்களில் கடந்து வெள்ளிப் பதக்கமும், இத்தாலி வீராங்கனை மார்ட்டினா கிரிமால்டி 1 மணி 57 நிமிடம் 41.8 செக்கன்களில் கடந்து வெண்கல பதக்கமும் வென்றனர். (5)

# ஒலிம்பிக் பதக்கப் பட்டியல்

10.08.2012

LONDON 2012

| நாடுகள் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| அமெரிக்கா | 39 | 25 | 26 | 90 |
| சீனா | 37 | 25 | 19 | 81 |
| பிரிட்டன் | 25 | 15 | 15 | 55 |
| ரஷ்யா | 13 | 21 | 24 | 58 |
| தென்.கொரியா | 12 | 7 | 6 | 25 |
| ஜேர்மனி | 8 | 17 | 11 | 38 |
| பிரான்ஸ் | 8 | 9 | 12 | 29 |
| ஹங்கேரி | 8 | 4 | 3 | 15 |
| ஆஸ்திரேலியா | 7 | 13 | 10 | 30 |
| இத்தாலி | 7 | 6 | 7 | 20 |

# கெய்லும் இல்லை




இலங்கையின் முதலாவது ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரில், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல் பங்குபற்றமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்டுள்ள உடற்தகுதிப் பிரச்சினை காரணமாகவே அவர் பங்குபற்றமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்துக்கெதிராக இடம்பெற்ற டெஸ்ட் தொடரின் போது அவருக்கு ஏற்பட்ட காயம் காரணமாக முழுமையான உடற்தகுதியுடன் காணப்படாத நிலையில் அவர் இந்தத் தொடரில் பங்குபற்ற மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடரில் அவர் ஊவா நெக்ஸ் அணி சார்பாகப் போட்டியில் பங்குபற்றவிருந்த நிலையில் அவரது இழப்பு பெரியது எனத் தெரிவித்த ஊவா நெக்ஸ் அணி நிர்வாகம், ஆனால் ஏனைய வீரர்கள் அவரின் இடத்தை நிரப்பி எஸ்.எல்.பி.எல். தொடரை வென்று கொடுப்பார்கள் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

கிறிஸ் கெய்ல் தவிர, பாகிஸ்தானின் அப்துர் ரெஹிமான், மேற்கிந்தியத் தீவுகளின் பிடல் எட்வேர்ஸ் ஆகியோரும் இந்தத் தொடரில் பங்குபற்ற மாட்டார்கள் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பங்களாதேஷ் அணியின் சகிப் அல் ஹசன் இந்தத் தொடரிலிருந்து நீங்கியிருந்த நிலையில் இலங்கையின் குமார் சங்ககாரவும் உபாதை காரணமாக எஸ்.எல்.பி.எல். தொடரில் பங்குபெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஊவா அணியில் கிறிஸ் கெயில், அப்துர் ரெஹிமானுக்குப் பதிலாக ஷிவ்நரின் சந்தர்போல், பாவாத் அலாம், ஜேக்கப் ஓரம் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளதோடு, உத்துர அணி சார்பாக சகிப் அல் ஹசன், பிடல் எட்வேர்ஸ் ஆகியோருக்குப் பதிலாக கைல் மில்ஸ், ரொப் குய்னி ஆகியோர் சேர்க்கப் பட்டுள்ளனர். (5)

## 'அவர்கள் உதவவில்லை'

நாட்டின் கிரிக்கெட் துறையை முன்னேற்றும் வகையில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் செயற்படவில்லை எனவும் விளையாட்டுத்துறை அமைச்சு இது குறித்து திருப்தியடையவில்லை எனவும் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கூறியுள்ளார்.

தம்முடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ள கழகங்களை ஊக்குவிப்பதில் மாத்திரமே இலங்கை கிரிக்கெட் ஆர்வம் காட்டுகிறது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (5)

**Colour Print**

Colour Photo copy Colour Print

A4,A3 அளவுகளில் தரமான பிரதிகள்

30 ரூபாவில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

Online Uthayan
359, Kasthuriyar Road, Jaffna.
T.P- 0215676722

(சி/2217)(3.14)



**Semester 3** தொடர்ந்து 10 வருடங்களாக BIT பட்டக்கறகை நெறியில் முன்னணியில்...

Commences on 11-08-2012 Saturday

By R.Kumaran-B.Sc. TP: 0776577359

புதிய கல்வியாண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

74. சபாபதி லேன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வீதியிலிருந்து 200 m

**MIS BIT Academy**

**கார் விற்பனைக்கு**





புத்தம் புதிய HONDA Insighy Hybird 2010 ஆம் ஆண்டு ஜூன் மொடல் KS-xxxx பதிவுடன் விற்பனைக்குண்டு.

* காசாக 750,000/= மிகுதி லீசிங் மாதாந்தம் 93,000/= கட்டுப்பணம்.

தொடர்புகளுக்கு:
N.திகானி
077 249 7729,077 476 7320

(21623)(5-54-7)

**உடனடியாகத் தேவை**

பிரபலமான கணினிக்கற்கை நிறுவனத்திற்கு பின்வருவோர் தேவைப்படுகின்றனர்

Clerk , Instructor

தகைமை: O/L , A/L, Ms-Office, DTP

O/L உடன் பழகவிரும்புவோரும் விண்ணப்பிக்கலாம் Call: 0718474239

Salary Negotiable பகுதிநேரமும் விரும்பத்தக்கது

**சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் தேவை**

இன்று அல்லது நாளை காலை 10.00 மணிக்கு சுயவிபர கோவையுடன் நேரில் வரவும்

மாத ஊதியம் : Rs. 20,000

ஊக்குவிப்பு : 10%

அரச அலுவலர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் காப்புறுதி முகவர்கள் நிரந்தர மாத ஊதியத்துடன் பகுதி நேரமாகவும் பணிபுரியலாம்

MyWay. 180, Stanley Rd, Jaffna
077 520 2747

**அடிப்படை உடல் பரிசோதனை.**

கிரமமான உடல் பரிசோதனைகள் பாரிய நோய்களை முற்கூட்டியே இனங்காட்டி உங்களை பாதுகாக்கும்.

*இலவச வைத்திய ஆலோசனை வழங்கப்படும்

A full package includes Scan,ECG,Blood and Urine Tests&Reports

Lava Diagnosis & Lava Hospitals

Member of Lava Holdings Pvt Ltd Reg No:PV74170

கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடம் மற்றும் அறிக்கைகள்.

Tel: 0212224333 | # 75,Temple Road,Jaffna | www.Lavahospitals.com



கணக்கீடு
திரு.பாலகஜன் B.Com
A/L 2013
"கர்ஷனி"
Mon To Fri -9-11am
ஆரம்பம்
13/08/2012 திங்கள் 9.am
புதிய பொருளியல் கல்லூரி
(மணிக்கூட்டு வீதி- யாழ்ப்பாணம்)

**வீடு விற்பனைக்கு**

கே.கே.எஸ் வீதி சுன்னாகத்தில் தேசிய சேமிப்பு வங்கிக்கு (NSB) அருகில் 2½ பரப்பு காணியுடன் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு- 0718827506

**PHYSICS**

A/L - 2014
* பொறியியல்
ஆரம்பம் 12.08.2012 ஞாயிறு 4.00 Pm

A/L - 2013
* புலங்கள்
ஆரம்பம் 12.08.2012 ஞாயிறு 5.00 Pm

ஆசிரியர்:
Mr.M. ஸ்பெல்மன் (B.Sc)

* Personal Class
* Group Class

ஆகவும் விரும்பிய பகுதியை கற்கலாம்
இடம்: NO.18, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(பெரிய கோயில் அருகில்)

(21618)(8.7.54)

**விற்பனையாகிறது**

*வெற்றிச்சிகரம்*

2012- தரம் 5 மாணவர்களுக்கு.
1-20 வரையான வினாத்தாள்கள் விடையுடன் - 20/=
ஆக்கம் :- திருமலை.எஸ். கணேசலிங்கம்
18,19,20 ஆவது இதழ்கள் முற்றிலும் எதிர்பார்க்கை வினா-விடையுடன்
யாழ். நகரில் கிடைக்குமிடம்
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்
வெளியீடு: புனிலங்காஸ்
கொழும்பு - 13

**பணியாளர் தேவை**

*யாழ்நகரில் இயங்கும் "உல்லாசப் பயணிகள் விடுதிக்கு" கீழ்க்காணும் பணிநிலைகளுக்கு பணியாளர்கள் தேவை.*

1. முகாமையாளர்
2. வரவேற்பாளர் (ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்) } மும்மொழிகளும் தெரிந்தவர்கள்
3. கணக்காளர்
4. றூம்போய்
5. தோட்டப் பராமரிப்பாளர். (ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
6. சமையலாளர் (யாழ். உணவு வகைகளை திறம்படத் தயாரிக்கக்கூடிய முன் அனுபவம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

* மேற்படி பணிநிலைகளில் முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.*

* பணிநிலைகளுக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

*விண்ணப்பங்களை பணிநிலை, தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு 18/08/2012 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல- 4389
மே/பா. உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/2301)(3.7.54)

**SPOKEN ENGLISH**

அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர், A/L எடுத்த மாணவர், இளைஞர், யுவதிகளுக்கு

புதிய பிரிவு ஆரம்பம்

சனி, ஞாயிறு புதிய பிரிவு இன்று ஆரம்பம்

பிரிவு 1 : காலை 9 - 10 பிரிவு 2 : காலை 11 - 12
பிரிவு 3 : மாலை 3 - 4 பிரிவு 4 : மாலை 5 - 6

(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)

கட்டணம் : ரூபா 3000 காலம் : 1 - 3 மாதம்

பயிற்சி முடிவில் ஆங்கிலம் கதைக்க முடியாதோருக்கு பயிற்சிக்கட்டணம் முழுமையாக திருப்பித்தரப்படும்

முதல் நாள் வகுப்புக்கு அனுமதி, பயிற்சி புத்தகம், DVD மற்றும் சான்றிதழ் முற்றிலும் இலவசம்

MyWay 182, Stanley Rd, Jaffna
077 520 2747

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ் மாவட்டத்திலுள்ள தொண்டு நிறுவனம் ஒன்றுக்கு யாழ்.மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு- 0710456456

**வீடு வாடகைக்குத் தேவை**

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட பிரபல விற்பனை நிறுவனம் ஒன்றுக்கு யாழ்.மாநகர சபை எல்லைக்குள் களஞ்சியவசதி, வாகனத்தரிப்பிட வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு- 0710456456

யாழ்ப்பாணத்தில்...

**IELTS** BRITISH COUNCIL

பரீட்சை நாள்கள் வரை விசேட வகுப்புகள் நடைபெறும்

பரீட்சைகள் October 27th

IELTS FOR UK STUDENT VISA APPLICANTS

புதிய பிரிவுகள்

ஆரம்பம் : 11.08.2012

CITY COLLEGE OF ENGLISH
No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.
Tel. 021 222 0384
077 8803887

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

விழிப்பதற்கே உறக்கம்;
வெல்வதற்கே தோல்வி
எழுவதற்கே வீழ்ச்சி.
-இராபர்ட் பிரவுனிங்-

# வார வசந்தம்


01

உதயன் 11 ஓகஸ்ட் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

**மீளக்குடியமர்ந்து இயல்பு வாழ்வுக்கு திரும்பிக்கொண்டிருக்கும் வன்னி மக்களின் மீதான இராணுவத்தின் செயற்பாடுகள் அவர்கள் வாழ்வினை சீர் குலைப்பதாகவே எண்ணத்தோன்றுகின்றது. இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் பல கஷ்டத்தின் மத்தியிலும் வாழும் மக்களின் காணிகளை இராணுவம் கையகப்படுத்தி வைத்திருக்கின்றது.**

# வன்னி மக்களை வாழ விடுங்கள்

**துன்னாலைச் செல்வம்**



அடிமைகளின் புரட்சி எந்த நாட்டில் வென்றது?
அமெரிக்க கண்டங்களில் காலனியாதிக்கத்தில் இருந்து விடுதலையடைந்த இரண்டாவது நாடு எது?
உலகில் தோன்றிய முதலாவது கறுப்பினக் குடியரசு எது?

'ஹைத்தி' என்பதே அனைத்துக் கேள்விகளுக்குமான விடை.

அமெரிக்கப் புரட்சி பற்றி உலக நாடுகளின் பாடப்புத்தகங்கள் யாவும் போதிக்கின்றன. ஆனால் அதற்குப் பிறகு வரலாற்றில் இடம் பெற்ற முக்கியமான புரட்சியை கண்டுகொள்ளாமல் மறைக்கப் பார்க்கின்றன. பாட நூல்கள் மட்டுமல்ல, எந்தவொரு சரித்திர ஆசிரியரும், ஊடகமும் அதை நினைவுபடுத்துவதில்லை. அதற்குக் காரணம், ஒரு நாட்டில் வெற்றி பெற்ற அடிமைகளின் புரட்சி, பிற நாடுகளுக்குப் பரவக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்கள்.

ஹைத்தியின் சுதந்திரத்தை அடக்குவதற்காக படைஅனுப்பிய நெப்போலியன் பின்வருமாறு கூறினான். "நான் ஹைத்தியின் செல்வத்தை பாதுகாப்பதற்காக படையனுப்பவில்லை." கறுப்பின அடிமைகளின் வெற்றி, உலக கறுப்பினத் தவர்களின் விடுதலைக்கு தூண்டுகோலாக இருக்கக்கூடாது. ஹைத்தி விடுதலையடைந்த நேரம் ஆங்கிலேயர்கள் இந்தியாவை காலணித்துவ அடிமையாக்கிக் கொண்டிருந்தார்கள்.

அன்று உலகம் முழுவதையும் ஆண்ட ஐரோப்பிய காலணியாதிக்க நாடுகள், ஹைத்தி புரட்சியை இருட்டடிப்புச் செய்தன. வேறு சில மத்திய அமெரிக்க, கரீபியன் நாடுகளில் அடிமைகள் கிளர்ச்சி செய்த பொழுது முளையிலேயே அழித்தார்கள். இதேபோல்தான் இப்பொழுது ஈழத்தில் நடைபெறுகிறது. சோதனைகள் கெடுபிடிகள் அதிகரித்துக் காணப்பட்ட போர்க் காலங்களில் தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அந்தக் காலப்பகுதியில் எந்த வேளையும் என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். அதாவது இராணுவத்தினரின் சுற்றி வளைப்புக்கள், கைதுகள், விசாரணைகள் போன்றவற்றுக்கு உள்ளாகி உடலாலும் மனத்தாலும் வேதனைப் பட்ட நாள்களை இன்றும் மறக்க முடியவில்லை. மறப்பதற்கான சந்தர்ப்பத்தையும் இராணுவத்தினர் வழங்குவதாகத் தெரியவில்லை. போர் முடிந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வன்னிப் பிரதேச மக்கள்தான் இராணுவத்தின் அடக்குமுறைக்குள் கூடுதலாக அகப்பட்டுள்ளனர்.

போர் இடம்பெற்ற மண்ணில் வாழும் மக்களை அதில் இருந்து விடுபடுவதற்கான மன உடல் ரீதியான மாற்றங்களை கொண்டு வருவதற்கு தொண்டு நிறுவனங்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இந்த நடவடிக்கையால் போரிற்கு முகம் கொடுத்த மக்களின் வாழ்வில் இயல்பு ஓட்டத்தை கொண்டுவர முடியும். தொடர்ந்தும் இராணுவத்தினரின் விசாரணைகள் இந்த மக்களின் இயல்பு வாழ்வில் எந்தவிதமான பங்களிப்பினைச் செய்யவுள்ளது என்பதைக் காலம்தான் பதில் சொல்லும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் மீண்டும் துன்புறுத்துவதை பார்க்கின்றபோது அந்த மக்களின் இயல்பு வாழ்வு என்றுதான் சீராகுமோ என்ற கவலை வருகிறது. சிறுபான்மை இனமான தமிழ் மக்களை பெரும்பான்மை சக்தி கொண்ட சிங்களப் படையினர் அடக்கி வருவது இரு இனங்கள் ஒற்றுமையாக வாழ முடியாது என்பதையே காட்டுகிறது. பிரிவினையைத் தூண்டும் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் தொடருமாக இருந்தால் மீண்டும் இந்த மண்ணில் ஒரு போரினை எதிர்பார்க்க முடியும்.

"அவன் வருவானா" என்றுதான் இராணுவத்தின் அடக்குமுறைக்குள் இருக்கும் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் தமது மனதிலும். அந்தளவுக்கு தமிழ் மக்களுக்கு அவன் பாதுகாவலன் என்பது வரலாறு தந்த பாடமாகும். தமிழ் மக்கள் மீது இராணுவத்தினரின் அடக்குமுறை தொடர்ந்தால் விடுதலைப் புலிகளையே தமிழ் மக்கள் எதிர்பார்த்திருப்பார்கள் என்பது கண்கூடு. பாதுகாப்பாக இருந்த வன்னிமரமும் மக்களும் இன்று தறிக்கப்பட்டு ஏதிலிகளாக கைவிடப்பட்டுள்ளனர்.

வன்னி வாழ்வில் விடிவில்லாத போதும், தமது வாழ்வை நகர்த்துவதற்காக பல நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்துவரும் மக்களின் துன்பங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. மீளக்குடியமர்ந்த மக்களின் அன்றாட அத்தியாவசிய தேவைகளைக்கூட நிறைவேற்ற முடியாமல் தவிக்கின்றனர். செழிப்பாக வாழ்ந்த வன்னி மண், இன்று போரின் வடுக்களில் இருந்து மாறுபட முடியாமல் காட்சியளிக்கிறது. வாழ்வையே நகர்த்த முடியாத வன்னி மக்களின் வாழ்வில் இராணுவத்தினரின் இடையூறு பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. இராணுவத்தினரிடமிருந்து விடுபட முடியாமல் வன்னி மக்கள் பல துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு சிவபுரம் பாலத்தடி மற்றும் சிறாட்டிகுளம் ஆகிய பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் அந்த வீதியூடாகப் பயணம் செய்யும் மக்களுக்கு பெரும் இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றனர் என்று மக்கள் முறையிடுகின்றனர். அந்த வீதியூடாக வரும் பயணிகள் பஸ்கள் உட்பட ஏனைய வாகனங்களையும் மறித்து சோதனைக்கு உட்படுத்துவதுடன் பயணப் பொதிகளையும் சோதனையிட்டு வருகின்றனர். இவ்வாறு சோதனையிடும் போது சிலரை தாம் சந்தேகிப்பதாகக் கூறி பல மணிநேரம் மறித்து வைத்து தீவிர விசாரணை நடத்திய பின்பே பயணத்தை தொடர அனுமதிக்கின்றனர்.

இதே போன்று துணுக்காய் பிரதேசத்துக்கு உட்பட்ட யோகபுரம் பகுதியிலும் திடீரென இராணுவத்தினர் வீதித் தடைகளைப் போட்டு சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு வன்னிப் பகுதியில் இராணுவத்தினர் தொடர்ச்சியாகக் கொடுக்கும் தொல்லையால் மக்கள் அச்சத்துடன் வாழ்ந்து வருகின்றனர். ஏன் எதற்கு என்று தெரியாமல் இருக்கின்றனர். பயணத்தின்போது திடீரென மறிக்கப்பட்டு விசாரணை, சோதனை நடத்தப்பட்டு வருவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் போர் இடம்பெற்ற காலப்பகுதியில் மக்கள் மீதான இராணுத்தினரின் சோதனைகள் இடம்பெறுவது வழக்கம். இப்பொழுது போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் மீண்டும் இராணுவத்தினரின் சோதனைகள் இடம்பெறுவது ஏன் என்று தெரியாத மக்கள் பெரும் அச்சத்தில் வாழ்ந்து வருகின்றனர். பல மணி நேரம் மறித்து வைத்து விசாரணையை மேற்கொள்வது என்பது அந்தப் பகுதியில் ஏதாவது அசம்பாவிதங்கள் இடம்பெற்றிருக்க வேண்டும் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மீளக்குடியமர்ந்து இயல்பு வாழ்வுக்கு திரும்பிக்கொண்டிருக்கும் வன்னி மக்கள் மீதான இராணுவத்தின் இது போன்ற செயற்பாடுகள் அவர்கள் வாழ்வினை சீர்குலைப்பதாகவே எண்ணத்தோன்றுகின்றது. மேலும் இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களிலும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் பல கஷ்டத்தின் மத்தியிலும் வாழும் மக்களின் காணிகளை இராணுவம் கையகப்படுத்தி வைத்திருக்கின்றது. இந்தப் பகுதி மக்களின் மீளக்குடியமர்வு விடயத்தில் எந்தவிதமான அக்கறையையும் எடுக்காத சிங்கள அரசு அந்தப் பகுதியில் இராணுவ முகாம்களை தொடர்ந்து வைத்திருப்பதற்கு உதவுகிறது.

முல்லைத்தீவு கேப்பாபுலவுப் பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான சுமார் 2 ஆயிரத்து 262 ஏக்கர் நிலப்பகுதியை இராணுவம் ஆக்கிரமித்துள்ளமையால் அந்தப் பகுதி மக்கள் மீளக்குடியமர முடியாத நிலை காணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கேப்பாபுலவு கிராமத்தில் சுமார் ஆயிரம் வரையான குடும்பங்களுக்குச் சொந்தமான குடியிருப்புக் காணிகள் மற்றும் விவசாய நிலங்கள், பாடசாலை, ஆரம்ப சுகாதார நிலையம், ஆலயங்கள் என்பன அடங்கி உள்ளன. இந்த நிலப்பரப்பை இலங்கை இராணுவத்தின் 591 ஆவது படைப்பிரிவு முழுமையாக ஆக்கிரமித்துள்ளது.

குறித்த நிலப்பகுதிகளை தமக்கு வழங்குமாறும் அந்தப் பகுதி மக்களுக்கு வேறு இடங்களில் மாற்றுக் காணிகளை வழங்குமாறும் அரச அதிகாரிகளை இராணுவத்தினர் கோரி வருகின்றனர். அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் கோம்பாவில் திம்பிலிவில் நலன்புரி நிலையம், மனிக்பாம் நலன்புரி நிலையம் என்பவற்றிலும் உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இந்த மக்களின் மீளக்குடியமர்வு விடயத்தில் எந்தவிதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் அரசு இருப்பதால் அந்தப் பகுதி மக்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. போரில் அனுபவித்த துன்பங்களைவிடப் பெரும் வாழ்க்கைப் பிரச்சினைக்கு மக்கள் முகம்கொடுத்திருக்கின்றனர்.

இவர்களின் சொந்த நிலங்களை விடுவித்து அந்தப் பகுதியில் மீளக்குடியமர்வை ஏற்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தில் முக்கியபங்கை வகிக்கவேண்டிய அரசு அதைச் செய்யவில்லை. போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் நிலத்தை அபகரித்துக்கொண்டு இராணுவத்தினர் அந்த மக்களின் சொந்த நிலம் தொடர்பாக எந்தவிதமான சிந்தனையும் இன்றி அரச அதிகாரிகளிடம் மாற்றுக் காணிகளை வழங்குமாறு கூறி வருவதால் அந்தக் காணி தமக்குக் கிடைக்குமா என்ற சந்தேகத்துடன் மக்கள் இருக்கின்றனர். இவர்களின் காணி விடயத்தில் இராணுவத் தரப்பும் அரச அதிகாரிகளும் சேர்ந்து ஒரு முடிவை எடுத்து அதே நிலத்தில் தம்மை மீளக்குடியமர்த்துவார்களா என்று கேட்கின்றனர்.

இந்த மக்களின் பிரச்சினை தொடர்பில் சர்வதேசம் கண்டுகொள்ளாத நிலையில் புலம்பெயர் தமிழர்களின் கையில்தான் இருக்கிறது. புலம்பெயர் தமிழர்கள் ஒன்றாக சேர்ந்து சர்வதேச நாடுகளின் தலைவர்களின் காதுகளில் உரத்துச் சொல்லுவார்களாயின் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வினை எட்ட முடியும். இங்கிலாந்து மாநகரில் அந்த நாட்டுக் கொடிக்குப் பக்கத்தில் புலிக்கொடி பறக்கும்போது ஏன் வன்னி மக்களின் பிரச்சினையை இலகுவாக அந்த நாட்டு தலைவர்களின் காதுகளில் சொல்லமுடியாமல் இருக்கிறது? புலம்பெயர் தமிழர்கள் உரிமைகள் தொடர்பாக அரசியல் போராட்டங்களை நடத்துகின்றபோது ஏன் வன்னி மக்களின் துயரில் பங்கெடுக்காமல் இருகின்றனர்?

மூன்று தசாப்த போரில் ஈடுபட்டு பல துன்பங்களை வாழ்வில் அனுபவித்திருக்கும் இந்த மக்களின் வாழ்வாதாரத்தில் தமிழர் உரிமைகள் தொடர்பாக அரசியல் காய் நகர்த்தல்களை மேற்கொள்ளும் புலம்பெயர் தமிழர்கள் பங்கெடுப்பார்களா?

உதயன்
11/08/2012

# உங்கள் கைரேகைகளின் பலன்கள்


28




### பாசம் அல்லது ஐக்கிய ரேகைகள் (தொடர்ச்சி)

7.பாச ரேகையின் இறுதி, இரண்டு கிளையாகப் பிரிந்திருக்குமாயின் தம்பதியர் பூர்வவினை காரணமாகப் பிரிந்து, பாசம் குறைவதைக் குறிக்கும். என்றாலும் கிளை மங்கும் போது நாளடைவில் கூடி வாழ்வர்.

கிளை மிக நெருங்கி மெல்லியதாயிருந்தால் மனக்கசப்பு சொற்பகாலமிருந்து நீங்கும்.




8.பாசரேகை இறுதி, பல கிளைகளோடு குஞ்சம் போலிருந்தால் தம்பதிகளுக்குள்ள பிரிவினை உயர்ந்து நிற்கும்.

9.பாசரேகையின் சிறுகிளைகள், இருதய ரேகையை நோக்கி இருக்குமாயின் வாழ்வில் துயரமும் தோல்வியும் மிகுந்திருக்கும்.

பாசரேகையின் சிறு கிளைகள் மேல்நோக்கியிருக்குமாயின், ஆபாசம் அதிகரிக்கும் என்பதைக் குறிக்கும்.

10.பாசரேகை துண்டுபட்டுக் காணப்படில், வாழ்வின் மத்தியில் பிரிவைக் குறிக்கும். ரேகையின் இடைவழி ஒரு கால் பொருந்தும் போது பிரிந்தவர் கூடி வாழக்கூடும். இணைப்பைக் கண்டு இதைத் தீர்மானிக்க வேண்டும்.

11.பாசரேகையின் இறுதி கொக்கிபோல் வளைந்திருக்குமாயின், இழந்த காதலரை மீண்டும் பெறுவது அரிதாகும்.




பாசரேகையின் மத்தியில் ஒரு புள்ளி காணப்படில், வாழ்க்கையில் தடையைக் குறிக்கும். புள்ளிக்குப் பின் ரேகை மெல்லியதானால் பாசம் குறைந்துபோகும்.

12.சுக்கிரமேட்டினின்றும் ஒரு நீண்ட ரேகை பாசரேகையில் குறுக்கிட்டிருந்தால், பாசத்துக்கு இடையூறாகப் பந்துக்கள் செய்யும் தொந்தரவைக் குறிக்கும்.

பாசரேகை கால அளவில் வளைந்து இருதய ரேகையை நோக்கிச் செல்லும். இது எதிரினத்தின் நோயைக் குறிக்கும். காலத்தால் வளைந்த ரேகை மங்கிப் போகுமாயின், நோய் குணப்பட்டு வருவதைக் குறிக்கும்.

சந்தர்ப்ப ரேகையும் கால அளவில் பாச ரேகையில் குறுக்கிட்டு வாழ்வில் மூளை கலங்கும் வேதனையைக் கொடுக்கும்.

பாசரேகையைக் கவனித்துக்கொள்வது நலம். இதன் செல்வாக்குப் பெரும்பாலும் பாச ரேகைக்கும் ஆதரவாயிருந்து வரும். மனைவியைப் பற்றிய பிரச்சினையுண்டாகும் போது, சுக்கிரமேடு உதவியாயிருக்கும். பாசரேகையிலும், சந்தர்ப்ப ரேகை காலத்துக்கேற்றவாறு தோன்றி மறையும். பலபேர்களின் பாசரேகையைப் பார்த்து அனுபவங் கண்டவர்தான் விவாக சம்பந்தமாய் பேசக்கூடும். விவாகமாகியும் வாழ்நாளெல்லாம் பிரிந்திருப்போருமுளர். ஒன்றிரண்டு குழந்தை பெற்ற பின்னும் மனைவியின் மனத்தைப் புழுங்கவைத்து அந்நிய சாவகாசம் செய்து வருவர். சதிபதிகளுக்கு மத்தியிலிருந்து தேன் பூசிய கத்திபோல் வாழ்வைக் கெடுப்போரும் இருந்து வருவர். இவைகளுக்கெல்லாம் காரணங் காட்டும் ரேகைக் குறிகளிருக்கின்றன.

### சூரிய ரேகை அல்லது அதிர்ஷ்ட ரேகை

சூரியரேகை ஆயுள் ரேகைக் கருகில் சந்திரமேட்டில் உற்பத்தியாகி மோதிர விரலுக்கு அடியிலுள்ள சூரியமேடுவரை செல்லும். இவ்வாறு அமைவது அபூர்வமாயிருக்கும். சாதாரணமாக, புத்தி ரேகையின் மேலிருந்தும், இன்னும் சிலருக்கு இருதய ரேகையின் மேலிருந்தும் இந்தத் தனரேகை சூரியமேடுவரை சென்றிருக்கக் காணலாம். பெரும்பாலும் இது எல்லோருடைய கையிலிருப்பதும் அரிது. விதிரேகையின் அமைப்புக்கேற்றவாறு, பலாபலன்களுண்டு. விதி ரேகையின் நல்லமைப்புக்கொத்து, சூரிய ரேகையுமிருந்து விடுமானால் தன சம்பத்து, கௌரவம், புகழ் எல்லாம் பொங்கிப் பிரபல்யத்தைக் கொடுக்கும். சனி ரேகையான விதி ரேகை, பொருளை மாத்திரம் கொடுக்கும். அதிர்ஷ்ட ரேகை கௌரவத்தோடு சௌகரியத்தையும் கொடுக்கும்.

சூரியரேகைக்கு முக்கியமாக சில குணங்களை சொல்வதுண்டு. அதாவது, அது கலைஞானம், கவித்துவம், ஓவியம், சங்கீதம், நடனம் முதலியவைகளில் விசேஷ ஞானத்தைக் குறிக்கும் என்பர்.

*(தொடரும்)*

# குடும்ப வாழ்க்கை பலவீனமடைகிறதா ?

*களஞ்சியன்*

வாழ்க்கை உறவுகளின் மீது கட்டப்பட்ட புனிதமான ஆலயத்தைப் போன்றது. இந்த ஆலயம் சிதிலமடைகையில் மனித மாண்புகளும், வாழ்வின் புரிதல்களும் அர்த்தமிழந்து போகின்றன.

உயரிய பண்பாடுகளினாலும், அடர்த்தியான கலாசார வாழ்க்கை முறையினாலும் உலகின் கவனத்தைக் கவர்ந்த இந்திய குடும்ப வாழ்க்கை முறை சமீப காலமாகச் சரிவடையத் துவங்கியிருப்பது குடும்ப உறவு முறையில் நம்பிக்கை கொண்டிருப்பவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருக்கிறது.

பலவீனமான குடும்ப வாழ்க்கைக்கு மேற்கத்திய நாடுகளை உதாரணம் காட்டிய நிலை இன்று மாறி அடுத்த வீட்டு வாசலை நோக்கி விரல் நீட்டும் நிலை உருவாகி வருகிறது. விவாகரத்து விண்ணப்பங்களோடு வழக்கறிஞர்களைச் சந்திக்கும் நகர்ப்புறவாசிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக என்னுடைய வழக்கறிஞர் நண்பர் ஒருவர் புள்ளி விவரங்களோடு விளக்கி அதிர்ச்சியளித்தார்.

ஆழமாய் சிந்திக்கையில் பெரும்பாலான விவாகரத்துக்கள் மிகவும் சாதாரண காரணங்களுக்காகவே கோரப்படுகின்றன. மிக மிக முக்கியமான காரணம் கணவன் மனைவியரிடையே இன்றைக்கு குறைந்து போயிருக்கின்ற உரையாடல்கள்.

மாலை நேரங்களில் ஒன்றாக அமர்ந்து மனம் விட்டுப் பேசும் குடும்பங்களில், ஒன்றாக இரவு உணவு அருந்தி குழந்தைகளோடு அளவளாவும் இல்லங்களில் உறவு விரிசல்கள் பெரும்பாலும் நிகழ்வதேயில்லை. கிராமப் புறங்களில் விவாகரத்து குறைவாய் இருப்பதற்கு இந்த கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையும், மனம் விட்டுப் பேசுவதற்கு அவர்களுக்கு வாய்க்கின்ற சந்தர்ப்பங்களுமே காரணமாகி விடுகின்றன.

இன்றைய அவசர உலகின் மாலை நேரங்களை தொலைக்காட்சியின் தொடர்கள் திருடிக் கொண்டிருப்பது இதற்கு ஒரு முக்கியமான காரணம் என்பதையும் மறுக்க முடியாது. இன்றைய தேதியில் ஒளிபரப்பாகும் எந்த ஒரு தொலைக்காட்சித் தொடரிலேனும் பலமான அடித்தளமுள்ள ஒரு குடும்ப உறவு சித்திரிக்கப்படவேயில்லை என்பது வேதனைக்குரிய விஷயம்.

திருமணத்துக்கு முன் தாய்மை அடைவதும், மனைவிக்குத் தெரியாமல் இன்னொரு திருமணம் செய்து கொள்வதும், கணவனுக்குத் தெரியாமல் மனைவி இன்னொருவனை நேசிப்பதும் என தொலைக்காட்சித் தொடர் சித்தரிக்கும் கதா பாத்திரங்கள் எல்லாம் வாழ்வின் மீதான நம்பிக்கையை கேள்விக்குள்ளாக்குகின்றன.

தேவையற்ற சந்தேகங்களையும், இப்படி இருப்பதில் தவறில்லை என்னும் சஞ்சல மனப்பான்மைகளையும், இதெல்லாம் சகஜம் போலிருக்கிறது என்னும் கலாசாரச் சீரழிவிற்குத் துணைபோகும் எண்ணங்களையுமே இவை பரப்புகின்றன.

கணவன் மனைவிக்கிடையேயான புரிதலும், விட்டுக் கொடுத்தலை தோல்வி என்று கருதாத மனப்பான்மையும் இருத்தலே போதுமானது குடும்ப உறவு பலமடைய. மனைவியின் கருத்துக்களைக் கேட்பது தவறென்று கருதும் ஆணாதிக்க சிந்தனையும், கணவனின் பேச்சைக் கேட்பது பெண்ணடிமையோ என குழம்பும் பெண்களின் மனநிலையும் குடும்ப உறவின் விரிசலுக்கான முக்கிய காரணிகள்.

பொருளாதார, உடலியல் சார்ந்த, முரண்பாடுகளுடைய எந்த புற சிக்கல்கள் இருந்தாலும் உயரிய புரிதலுடைய குடும்பத்தில் உறவுகள் விரிசலடைவதில்லை என்கிறார் அமெரிக்காவின் பிரபல வழக்கறிஞர் கெஸ்லர்.

> ஆழமாய் சிந்திக்கையில் பெரும்பாலான விவாகரத்துக்கள் மிகவும் சாதாரண காரணங்களுக்காகவே கோரப்படுகின்றன. மிக மிக முக்கியமான காரணம் கணவன் மனைவியரிடையே இன்றைக்கு குறைந்து போயிருக்கின்ற உரையாடல்கள்.



புதிதாக திருமணமானவர்களைப் பொறுத்தவரையில் பணம், நேரம், பாலியல் போன்றவை உறவு பலவீனத்துக்கானது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா போன்ற நாடுகளில் திருமணத்துக்கு முன்பாக திருமணத் தயாரிப்பாக உளவியல் மருத்துவரிடமோ, அல்லது பிரத்தியேக ஆலோசனை மையங்களிலோ சென்று ஆலோசனை பெற்றுக் கொள்ள பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஊக்குவிக்கின்றனர். இது புரிதலுடன் கூடிய மணவாழ்க்கையின் ஆரம்பத்துக்கு உதவும் என்பது அவர்களின் நம்பிக்கை. காரணம் தற்போதைய அமெரிக்கா பலமான குடும்ப உறவுகளைக் கட்டியெழுப்ப முடியாமல் திண்டாடி வருகிறது.


மணமுறிவு பிரச்சினைகளின் முடிவு என்று பலர் நினைக்கிறார்கள். அது பெரும்பாலான வேளைகளில் பிரச்சினைகளின் துவக்கம் மட்டுமே. பிரச்சினைகள் வரும் போது எதிர்கொண்டு அதை சுமுகமாக முடிப்பதற்காகத் தான் மனிதர்களுக்கு ஆறாவது அறிவு தரப்பட்டிருக்கிறது. மணமுறிவு செய்து கொண்டபின் ஏற்படும் மன அழுத்தமும், அதனால் குழந்தைகளுக்கும் உறவினர்களுக்கும், சார்ந்திருப்போருக்கும் ஏற்படும் மன உளைச்சலும் மண முறிவு செய்தவர்களுக்கு மட்டுமே புரியும் விஷயம்.




# சிங்கராஜவனம்



சிங்கராஜவனம் இலங்கையில் அமைந்துள்ள பாதுகாக்கப்பட்ட தேசியவனமாகும். இது இலங்கையின் சப்ரகமுவ, தென் மாகாணங்களின் எல்லையில் இரத்தினபுரி, காலி, மாத்தறை மாவட்டங்களில் தாழ்நில ஈரவலயத்தில் அமைந்துள்ளது. சிங்கராஜவனம் கடல் மட்டத்தில் இருந்து 300 மீற்றர் தொடக்கம் 1,170 மீற்றர் உயரம் கொண்ட அயன மண்டல மழைக்காடாகும். இக்காட்டில் உயிரினங்களின் வகை மிக அதிகமாகும். இதன் உயிரியல் முக்கியத்துவம் காரணமாக 1988ஆம் ஆண்டு முதல் யுனெஸ்கோவினால் உலக உரிமைத் தளமாக அறிவிக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளிடையே மிக பிரசித்தமான தளங்களில் ஒன்றாகவும் இது காணப்படுகிறது.

# ஏதைத் தின்பது?



ஒரு வேடன் ஒரு நாள் காட்டில் அலைந்து கொண்டு இருந்தான். காலை முதல் ஒரு விலங்கு கூட அவன் கண்ணில் படாததால் அதிக கவலையுடனும், பசியுடனும் வருந்தினான்.

அப்போது எதிர்பாராமல் அவன் எதிரில் ஒரு பெரிய முள்ளம் பன்றி வந்தது. அது பார்ப்பதற்கு ஒரு பெரிய கறுப்பான மலையைப் போல இருந்தது. உடனே வேடனின் மனம், மகிழ்ச்சியில் துள்ளியது. தனது வில்லில் அம்பை ஏற்றி முள்ளம் பன்றி மீது ஏவினான். அடுத்த நிமிடம் அம்பு முள்ளம் பன்றியின் உடலை துளைத்தது. வலியால் பன்றி பெரிதாக அலறியது என்றாலும் தனக்கு துன்பம் செய்த வேடனை நோக்கிப் பாய்ந்தது. அவன் வயிற்றைக் கிழித்து அவனைக் கொன்றது. அடுத்த நிமிடம் தானும் அவன் அருகில் விழுந்து இறந்தது. அதே நேரத்தில், அந்த வழியாக ஒரு குள்ளநரி வந்தது.

இறந்து கிடந்த வேடனும் பன்றியும் அதன் கண்ணில் பட்டவுடன் அதிவேகமாக அங்கு ஓடி வந்தது. உடனே அதன் நாவில் எச்சில் ஊறியது. "கொழுத்த வேடனின் கறியும், பன்றியின் கறியும் கிடைத்துள்ளது," என நினைத்து மகிழ்ந்தது.

"குறைந்தது மூன்று நாள்களுக்காவது அமர்ந்து சாப்பிடக் கூடிய அளவுக்கு ஏராளமான உணவு நமக்கு கிடைத்துள்ளதே என மகிழ்ச்சியுடன் கூத்தாடியது.

"இப்போது கொஞ்சம் சாப்பிடலாம்" என நினைத்தது. திடீரென வேடனுக்கும், பன்றிக்கும் அருகில் கிடந்த வேடனின் வில்லின் நாண் அதன் கண்ணில் பட்டது. அந்தக் காலத்தில் வில்லின் நாண் என்பதனை மிருகங்களின் நரம்பினால் தான் கட்டுவர். அப்படிப்பட்ட வில்லின் நாணை நரி கண்டதல்லவா? உடனே, "சே! இந்த நாணை முதலில் திண்போம். இல்லாவிட்டால் வேறு ஏதாவது மிருகம் வந்து இதை தின்றுவிடும்" என்று நினைத்தது. உடனே வேடனையும், பன்றியையும் விட்டு, வில்லின் நாணைத் தனது வாயில் கவ்வி இழுத்தது.

"அடக்கடவுளே!" நாணை இழுத்த வேகத்தில் வில்லின் கூரிய மேல் நுனி நரியின் தொண்டையில் பாய்ந்தது. தொண்டையைக் கிழித்து கழுத்து வழியே வெளியே வந்தது. நரியின் பேராசை பெரு நஷ்டத்தில் முடிந்தது. முதலிலேயே வேடனையும், பன்றியையும் இழுத்துப் போய் ஒரு பாதுகாப்பான இடத்தில் வைத்து தின்றிருந்தால் நரிக்கு இந்தக் கதி வந்து இருக்குமா? அதிகமாக ஆசைப்பட்டதால் நரி பட்ட துன்பத்தை பார்த்தீர்களா?


எதிலும் அளவோடு ஆசை வைத்து வாழும் வாழ்வே துன்பமற்ற நல்ல வாழ்வுக்கு வழி. இதனால்தான், "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து," என்று நம் பெரியோர்கள் கூறினர். போதும் என்ற மனம் உடையவர்கள் வீட்டில் தங்கமும் செல்வமும் பெருகும் என்பது இதன் பொருளாகும்.

# காரைக்கால் அம்மையார்



காரைக்காலில் வசித்த தனதத்தன் தர்மவதி தம்பதிக்குப் பிறந்தவர் புனிதவதி. இவரை பரமதத்தன் என்ற வணிகருக்கு திருமணம் செய்து வைத்தனர். புனிதவதி சிறந்த சிவபக்தை. பரமதத்தனோ வியாபாரத்தில் பெரும் பணம் சம்பாதித்து இன்ப வாழ்வு வாழ எண்ணம் கொண்டவன்.

ஒரு சமயம் பரமதத்தனுக்கு இரண்டு மாம் பழங்கள் கிடைத்தன. அவற்றை வீட்டுக்கு கொடுத்து அனுப்பினான். அந்தநேரத்தில் ஒரு அடியவர் வேடத்தில் சிவன் அங்கு வர மாம் பழங்களில் ஒன்றை அவருக்கு அளித்தாள் புனிதவதி. அன்று பணி முடிந்து வந்த பரமதத்தனுக்கு இன்னொரு மாம்பழத்தை வைத்தாள். அதைச் சாப்பிட்ட அவன் "இது ருசியாக இருக்கிறதே இன்னொன்றையும் கொண்டு வா" எனச் சொல்ல இதை எதிர்பாராத புனிதவதி அதிர்ச்சியுடன் சிவனை வேண்டினாள். அவளது கையில் ஒரு பழம் வந்து அமர்ந்தது.



அதை வெட்டி கணவனுக்கு கொடுத்தாள். இது முன்பு சாப்பிட்ட பழத்தை விடப் பல மடங்கு ருசியாக இருக்கவே சந்தேகமடைந்த பரமதத்தன் "இரண்டும் ஒரே மரத்தின் கனிகள்; ஒன்றை விட ஒன்று எப்படி ருசிக்கும்?" என மனைவியிடம் கேட்டான். அவள் நடந்ததைச் சொல்லவே அதை நம்பாத அவன் "அப்படியானால் இன்னொரு பழத்தை என் கண்முன் வரவழைத்துக் காட்டு" என்றான்.

புனிதவதியும் அவ்வாறே செய்ய, அவளது பக்தியின் மேன்மையை உணர்ந்த அவன் இனி அவளோடு குடும்ப வாழ்வு நடத்த தனக்குத் தகுதியில்லை என்பதை உணர்ந்தான். தன் மனைவியை தெய்வப் பிறவியாக நினைத்து ஊரை விட்டே போய்விட்டான். மற்றொரு பெண்ணை மணந்து அவளுக்கு பிறந்த குழந்தைக்கு முதல் மனைவியின் பெயரை வைத்தான். இதையறிந்த புனிதவதி அதிர்ச்சியுடன் சிவபெருமானிடம் என் கணவருக்கு பயன்படாத இந்த இளமை எனக்குத் தேவையில்லை; பேய் வடிவத்தைக் கொடு என வேண்டினாள். அதன்படி பேய் உருவம் கிடைக்கவே இறைத்தொண்டு செய்து அதே வடிவிலேயே கைலாயத்துக்கு தலைகீழாக நடந்தே சென்றாள். சிவன் அந்தத் தாயை "அம்மையே வருக" என்று எதிர்கொண்டு வரவேற்றார்.

சிவபெருமானே "நீ எனக்கு வரும் துன்பங்களை போக்காவிட்டாலும் கருணை செய்யாவிட்டாலும் வாழும் வழி காட்டாவிட்டாலும் பரவாயில்லை. உன் மீதுள்ள அன்பு எனக்கு சற்றும் குறையாது" என்ற பொருளில் பாடினார் அம்மையார். இறைவனிடம் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் பக்தி செலுத்த வேண்டும் என்பதில் ஆணித்தரமாக இருந்தவர். பக்தியால் இறைவனுக்குத் தாயாகும் தகுதியைப் பெற்ற அந்தத் தாயின் குருபூஜை பங்குனி சுவாதியில் நடக்கிறது. காரைக்காலில் பிறந்த அவரை காரைக்கால் அம்மையார் என மக்கள் அன்போடு அழைக்கின்றனர்.

# இலங்கை

மாவட்டங்கள் -25
மாகாணங்கள் -9




மிகப் பெரிய மாவட்டம்- அநுராதபுரம்
மிகச் சிறிய மாவட்டம்- கொழும்பு
மிக நீளமான நதி- மகாவலிகங்கை
மிக உயரமான மலை - பேதுருதாலகால மலை
மிக உயரமான நீர்வீழ்ச்சி- பம்பரகந்த
இயற்கைத் துறைமுகம் -திருகோணமலை
தேசிய மரம்- நாகமரம்
தேசியப் பறவை - மர அணில்
தேசிய மலர்- நீல அல்லி
தேசிய உணவு- நெல்லரிசிச் சோறு
தேசிய விளையாட்டு- கரப்பந்தாட்டம்
யானைகளின் சரணாலயம்- பின்னவெல
பறவைகளின் சரணாலயம்- குமண
இயற்கைவனம்- சிங்கராஜவனம்
மிகப்பெரிய தாவரவியற் பூங்கா- பேராதனைப்பூங்கா

# தற்கொலை விரும்பங்களும் தூண்டும் காரணங்களும்



இணையவன்

''நான் தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன். எப்படிச் சாவது நல்லது என்று சொல்லுங்கள்?''

இப்படி ஒரு கேள்வியை உங்களிடம் யாராவது கேட்டால் என்ன செய்வீர்கள் ? அந்த நபரை அழைத்துப் பேசி, தனியே அறிவுரை சொல்லி தற்கொலை எண்ணத்தை கைவிட உதவி செய்வீர்கள். அப்படித் தானே?

ஆனால் எல்லா இடங்களிலும் இதே அரவணைப்பும், ஆறுதலும், வழி காட்டுதலும் கிடைப்பதில்லை!

இப்படி ஒரு கேள்வி இணையத் தளத்தில் எழும்ப, உடனடியாகக் களத்தில் குதிக்கின்றன பல பதில்கள். எல்லோரும் பல்வேறு வழி முறைகளை கைவசம் வைத்திருக்கின்றனர். இப்படிச் சாவது வலியற்ற சாவு. இப்படிச் சாக செய்ய வேண்டியவை இவை, தற்கொலைக்குத் தேவையான இந்தப் பொருள்கள் இந்த இடங்களில் கிடைக்கின்றன. இந்த முறையில் சாக நினைப்பது உசிதம் ஏனெனில் சில மணி நேரங்களில் இறந்து விடலாம்.

இப்படி ஏராளமான அதிர்ச்சியூட்டும் வழிமுறைகள் தற்கொலையை உற்சாகப்படுத்துகின்றன. இந்தக் கட்டுரையில் நான் விளக்க விரும்பாத அந்த வழிமுறைகளில், திரைப்படங்களில் நாம் பார்த்துப் பழகிய தற்கொலை வழிகள் முதல் அதிர்ச்சியில் உறைய வைக்கும் அதி நவீன முறைகள் வரை உள்ளன என்பது பயங்கரம்.

''நன்றி இது தான் என் விலாசம். நான் தற்கொலை செய்யப் போகிறேன்'' என்று சொல்லி விட்டு விடைபெறுகிறான் ஒரு பதின்ம வயது இளைஞன். கடமையில் கருத்தாய் இருப்பதாய் கருதிக் கொண்டு செத்துப் போகிறான். எல்லோரும் அவனை உற்சாகமாய் வழியனுப்பி வைக்கிறார்கள். ஒரு உயிர் அநியாயமாகச் செத்துப் போகி றது. அதன் பின்னணியில் எழும் ஒரு குடும்பத்தின் அழுகுரலைப் பற்றிய எந்த விதமான உறுத்தலும் இன்றி விவாதம் தொடர்கிறது. நான் தனியாகத் தற்கொலை செய்து கொள்ளப் போகிறேன். யாராவது சேர்ந்து தற்கொலை செய்யலாம் வருகிறீர்களா? அழைப்பு விடப்படுகிறது. உடனே உற்சாகமாக கும்பல் சேர்ந்து விடுகிறது. அந்தக் கும்பலில் ஐந்து பேரோ, ஐம்பது பேரோ குவிகின்றனர். தங்களுக்குள்ளாகவே எப்படிச் சாவது ? எங்கே சாவது ? எப்போது சாவது என பேசி முடிவெடுக்கின்றனர். அனைவரும் கை கோர்த்துக் கொள்கிறார்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். இதெல்லாம் பரபரப்பூட்டும் திரைக் கதையோ, நாவலோ அல்ல. அன்றாடம் நடக்கும் நிகழ்ச்சி என்று சொன்னால் உள்ளம் பதறுகிறது அல்லவா?


ரஷ்யாவில் மட்டும் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட இணையத் தளங்கள் மும்முரமாய் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இளம் வயதினர் உறுப்பினராக இருக்கும் பல இணையத் தளங்கள் உள்ளன. இத்தகைய தளங்கள் பலரை தற்கொலைக்கு வழியனுப்பி வைத்துக் கொண்டே இருக்கின்றன. இதில் அதிர்ச்சியூட்டும் செய்தி என்னவெனில், யாரேனும் தனக்கு ஒரு பிரச்சினை இருப்பதாகச் சொன்னால் உடனே தற்கொலையே தீர்வு என பலர் அறிவுரை செய்கின்றனர். யாரும், தற்கொலை செய்ய வேண்டாம் என்றோ, அது தவறு என்றோ சொல்வதே இல்லை. எப்போதேனும் எழும் சிறு சிறு குரல்களும் வெளிவராமல் அடங்கி விடுகிறது. தற்கொலை செய்வதா? வேண்டாமா எனும் மனநிலையில் சிக்கித் தவிக்கும் இளைஞர்கள் இத்தகைய தளங்களில் வந்தால் செத்துப் போவது உறுதி என்கின்றனர்.

சுமார் பதினொன்று முதல் இருபத்து ஐந்து வரையிலான வயதினரே இத்தகைய தளங்களில் இணைந்து விவாதிக்கின்றனர். இத்தகைய இணையத் தளங்களின் கொடிய விளைவாக ரஷ்யாவில் மாதம் ஒன்றுக்கு சுமார் இருபது பதின்வயதினர் தற்கொலை செய்து கொள்கின்றனர், மிக மிக மகிழ்ச்சியுடன்.

இந்தத் தளங்களில் இணைபவர்களில் ஏற்கனவே தற்கொலைக்கு முயன்றவர்களும் உண்டு. அவர்கள் தங்கள் அனுபவங்களை இதில் பதிவு செய்கின்றனர். இப்படிப்பட்ட தளங்கள் வேறு விதமான முகமூடி அணிந்து நல்ல பிள்ளையாய் காட்சியளிப்பதால் இதை தடை செய்யும் வழியும் தெரியாமல் விழிக்கின்றனர்.

பதின்ம வயது துடிப்புடனும், உற்சாகத்துடனும் செலவிட வேண்டிய வயது. இந்த வயதில் தற்கொலை செய்யவேண்டும் எனும் எண்ணம் ஏன் இவர்களுக்கு வருகிறது என்பதற்கு உளவியலார் பல்வேறு காரணங்களைச் சொல்கின்றனர்.

(தொடரும்)



# வழிபாட்டு நம்பிக்கைகள்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

வசதி உள்ளவர்கள் உயிருள்ள கோழியையோ ஆட்டையோ நோயுற்றவனின் தலையைச் சுற்றிக் கழித்து பிறருக்குக் கொடுத்து விடுவார்கள். தலையை மூன்றுமுறை சுற்றி அதன் மேல் நோயுற்றவன் மூன்று முறை 'துப்பி' விட்டால் அந்தப் பொருளின் தரம் குறைந்து விட்டதாக எண்ணுகிறார்கள்.

ஆகாத பொருளை 'மூன்று முறை தலையைச் சுற்றித் துப்பிக் கழித்துத் தூர எறி' என்று இன்றும் நடைமுறையில் கிராமப் புறங்களில் சொல்கின்றார்கள்.

வசதி உள்ளவர்கள் நோயுற்றவயைச் சுற்றிப் பசு மாட்டையே பிறருக்கு தானமாகக் கொடுப்பார்கள்.

உயிர்ச்சத்து உள்ள தூய பொருள்களின் மீதோ, உயிரினங்களின் மீதோ தீயசக்திகள் இப்படிச் செய்வதால் தாவிவிடும் என்றும் அதனால் நோயுற்றவன் பூரண குணமாகி விடுவான் என்றும் நம்புகிறார்கள்.

இந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் இஷ்ட தெய்வங்களுக்கு நேர்ந்து உயிர்ப்பலி கொடுக்கும் பழக்கம் வந்திருக்க வேண்டும். குடும்பம் சுபிட்சம் பெறவும், துன்பம் நீங்கவுமே உயிர்ப்பலிகள் கொடுக்கப்படுகின்றன. உயிர்ப் பலி கொடுப்பதில் எத்தனையோ முறைகள் உள்ளன. கோழி, ஆடு போன்றவற்றை மிகக் கொடூர மான முறையில் உயிர்ப்பலி கொடுக்கின்றனர்.

ஊருக்கு ஒதுக்குப் புறமாக உள்ள கோயில்களில் உள்ள பீடத்தில் உள்ள தூண்டில் போன்ற இரும்புக் கொக்கியில் உயிர் உள்ள கோழியின் கழுத்தை மாட்டி விடுவார்கள். தூண்டிலில் அகப்பட்ட கோழி துள்ளித் துடித்துச் சாகின்ற காட்சி காண்பதற்கு மிகக் கொடூரமாக இருக்கும்.

நேர்ச்சையாக சிலர் தூண்டிலில் சிறிய ஆட்டுக்குட்டியை (மறியை) மாட்டிவிடுவார்கள் இதற்கு 'துள்ளுமறி' என்று பெயர்.

'ஓடை மரிச்சான்' என்ற குல தெய்வத்திற்கு



ஆடு மேய்ப்பவர்கள் உயிர்ப்பலி கொடுக்கிற விதம் மிகக் கொடூரமாக உள்ளது. குறிப்பிட்ட நாளில் நண்பகல் பொழுதில் தன்னிடம் உள்ள ஆடுகளில் ஒன்றை உயிர்ப் பலியாக கொடுக்கிறார்கள்.

குலதெய்வத்திற்கு பலியாகக் கொடுக்கிற ஆட்டை, சிறிய குட்டியாக இருக்கும் போதே நேர்ந்து விடுவார்கள். ஆட்டை சுடுமணலில் ஓடவிட்டு, அருள் வந்த சாமியாடி தன் கையில் ஒரு ஆக்கருவாளை வைத்துக் கொண்டு ஓடி, ஓடிப்போய் கொத்துவார். கொஞ்சங் கொஞ்சமாக அந்த ஆடு காயம்பட்டுக் காயம்பட்டு துள்ளித் துடித்து மிகுந்த சித்திரவதைப்பட்டு இரத்தம் சிந்தி இறந்து விடுகிறது. இப்படி உயிர்ப்பலி இடுகிற முறைகளை மட்டும் திரட்டிப் பார்த்து ஆய்வு செய்தால் அதுவே ஒரு தனிப் பெரும் கட்டுரையாக அமைந்துவிடும்.

மனித இனத்தின் அடியாழத்தில் புதைந்து கிடக்கின்ற வன்முறை மற்றும் கொடூரமான எண்ணங்களின் வடிகாலாகத்தான் இத்தகைய பலியிடல்கள் அமைந்துள்ளன என்று எண்ணத் தோன்றுகின்றன.

உயிர்ப்பலி கொடுப்பதால் தனக்கு ஏற்பட்ட



# புதிய ... அதன் ... ஈழமு...

(கடந்தவாரத் தொடர்ச்சி)

தொனி வேறுபாடுகளை உள்நின்று இயக்கு...
அவரவர்களின் மண்ணும், மண்சார்ந்த வாழ்க்கை...
தான். இதைத்தான் அவரவர்களின் பூ கோளம் எ...
நான் குறிப்பிடுகின்றேன்.

ஆனால் இங்கே ஒரு முக்கியமான கே...
எழுகிறது. இன்றைய கவிஞன் இப்படி ஒரு குறிப்பி...
பூ கோளத்தின் அடையாளத்தோடு நின்று விடுகிற...
என்றால் இல்லை. அவனது வாழிடம் போர், பு...
பணத்துக்கான வேட்கை என்று பல்வேறு காரண...
ளுக்காக அடிக்கடி மாறுபடுகிற காலகட்டத்தில் இவ்...
அவனது கவிதையில் ஒரு குறிப்பிட்ட மண்...
அடையாளம் மட்டும் இருக்க முடியுமா? இருக்கமுடி...

ஏனெனில் இன்று உலகின் எல்லா மொ...
கவிஞர்களையும் போல தமிழ்க் கவிஞனும் ஒரு 'கி...
தழுவிய கிராமத்தில்' வாழ்கிறான், அவன் ஒரு ந...
டியாக இருக்க நேர்கின்ற போது, அவனது கவிதை...
அதன் மொழியும் ஒரு பெரும் நெருக்கடியைச் ச...
கிறது. இந்த நேரத்தில் சிற்பம், ஓவியம், இசை அ...
பிற நுண்கலைகள் அனைத்தும் இன்றைக்குச் ச...
கும் ஒரு நெருக்கடியைத் தமிழ்க் கவிதையும் சந்திக்...

இன்றைய தமிழ்ச் சிற்பக்கலையை எடு...
கொண்டால் முழுக்க இன்றைய தமிழ் அடைய...
மட்டுமே கொண்ட ஒரு தற்கால சிற்பம் ஒன்...
காண முடிவதில்லை. ஜப்பானில் கலை அடைய...

# ...நிய பூகோளமும் ...தன் சவால்களும் ...ழமும் தமிழகமும்

■ இந்திரன்

...ன்று இயக்குவது ...ந்த வாழ்க்கையும் ... பூ கோளம் என்று ...மான கேள்வி ... ஒரு குறிப்பிட்ட ...ன்று விடுகிறானா ...ம் போர், பூசல், ...வேறு காரணங்க ...ட்டத்தில் இவ்வாறு ...பிட்ட மண்ணின் ...? இருக்கமுடியாது. ... எல்லா மொழிக் ...தனும் ஒரு 'கிரகம் ...அவன் ஒரு நாடோ ...னது கவிதையும், ...நக்கடியைச் சந்திக் ...யம், இசை ஆகிய ...ன்றைக்குச் சந்திக் ...தையும் சந்திக்கிறது. ...லையை எடுத்துக் ...மிழ் அடையாளம் ...சிற்பம் ஒன்றைக் ...லை அடையாளம்

மட்டுமே கொண்ட ஒரு ஜப்பானிய ஓவியத்தைப் பார்க்க முடிவதில்லை. இன்றைய மேலைத்தேச இசையை எடுத்துக் கொண்டால் அது ஆபிரிக்க இசையிலிருந்து எடுத்து இணைத்துக் கொண்ட செல்வங்கள் ஏராளம். இத்தகைய காலகட்டத்தில் தான் தமிழகத்திலிருந்து கொண்டு கவிதை எழுதுபவர்களின் மொழிக்கும், ஈழத்திலிருந்து கொண்டு கவிதை செய்பவர்களின் மொழிக்கும், பாரிசிலிருந்து கொண்டு கவிதை எழுதும் சுகன், கனடாவில் வாழ்ந்து கொண்டு கவிதை படைக்கும் சேரன் ஆகியோரின் மொழிக்கும், ஏராளமான வேறுபாடுகள் தோன்றுகின்றன.

இந்த இடத்தில் அந்தக் கவிஞன் வாழும் மண்ணின் பூகோளம் மட்டுமன்றி, அவனது வாழ் நிலையும் ஒரு முக்கிய பங்களிப்பதை நாம் காண முடியும். இந்த இடத்தில் ஒரு நேர்ப் பேச்சில் வ.ஐ.ச. ஜெயபாலன் [காண்க: உரையாடல் - கவிதை அனுபவம் இந்திரன் - வ.ஐ.ச. ஜெயபாலன்] என்னிடம் சொன்னது நினைவுக்கு வருகிறது.

" நான் நினைக்கிறேன், ஒரு வேளை - சரியாச் சொல்கிறேனோ என்னவோ தெரியவில்லை - என்னைப் போல பல நிலத்தில் பயணம் செய்கிற ஆள்கள் மொழியை இறுக்கமாகப் பிடிக்கிறோமா என்று தெரியவில்லை. நீங்கள் ஒரு நிலத்தில் நிலையாகக் காலை ஊன்றி இருக்கிறீர்கள்.' அதனால் நீங்கள் அந்த மொழியில் பரிசோதனை செய்து பார்க்கிறீர்கள்'' என்று ஜெயபாலன் குறிப்பிட்டார்.

(தொடரும்)

# உயிரினங்கள் நிலைப்பதற்கான நீர்வளத்தைப் பாதுகாப்போம்



(கடந்தவாரத் தொடர்ச்சி)

கடின நீர், மிருதுவானநீர் என்பவையே அவை தண்ணீரைப் பருகமுடியாத நிலை ஏற்பட்டால்72 மணித்தியாலங்களுக்குப் பிறகு மயக்கமுற வேண்டிய நிலை உண்டாகலாம்.


மக்னீஸியம், கல்சியம் காபனேட் அதிகமுள்ள கடினநீரை அதிகம் பருகினால் சில உபாதைகளை எதிர்கொள்ள வேண்டி வரலாம்.

அவற்றில் மூட்டுவலி, மூட்டுவாதம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். குடிதண்ணீரில் சல்பைட்டுக்கள் அதிகமாகக் காணப்படின் குடல் அழற்சியால் அவதியுற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. தண்ணீரில் பொஸ்பைட் கூடுதலாகக் காணப்பட்டால் சல்பைட்டின் தாக்கத்தை ஒத்திருக்கும். ஃபுளோரைட் அதிகரித்தால் எலும்பு வளர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படலாம்.

நாம் பருகும் குடிதண்ணீர் தூய்மையாக இருத்தல் அவசியம். இயற்கையாக நமது தோட்டத்தில் காணப்படுகின்ற நீர்ச்சத்து அதிகம் உள்ள பழங்களைப் புசித்தாலும் தூய்மையான நீர் எமக்கு கிடைக்கின்றது எனலாம். இதற்கு வாழைப்பழம், தோடம்பழம் என்பவை சான்று பகிர்கின்றன. நீரை ஆவியாக்கி அந்த ஆவியைக் குளிரவைத்தால் நூறு சதவீத தூய்மையான நீரைப் பெறமுடியும்.

அதிகாலையில் வெறும் வயிற்றில் மிதமான சூடுள்ள தண்ணீரைப் பருகுதல் சிறந்தது என்பது மருத்துவரின் அறிவுறுத்தலாகும். எமது உடலில் உள்ள தண்ணீர் சில பிரதான பணிகளை மேற்கொள்கின்றது. எமது சருமத்தில் காணப்படுகின்ற நச்சுப் பொருள்களையும், உப்பையும் வெளியேற்றுவது குருதியில் தென்படுகின்ற தண்ணீர்தான் அதே வேளை ஊட்டச்சத்துக்கள் உயிரணுக்களைச் சென்றடையவும் நீர் இன்றியமையாதது. ஆகவே உயிரினங்கள் நிலைத்திருப்பதற்காக நாம் நீர்வளத்தைப் பாதுகாப்பது எமது தலையாய கடமை என்பது நிதர்சனமாகும்.

■ அருணா தருமலிங்கம்
வந்தாறுமூலை கிழக்கு
செங்கலடி.



கஷ்டங்கள் துன்பங்கள் முதலியன நீங்கிவிடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே இத்தகைய 'வழிபாட்டு' முறைகள் தோன்றி இருக்கின்றன.

புதன்,சனி போன்ற கிழமைகளில் மரணமடைந்த பிணத்தைப் பாடையில் வைத்து சுடுகாட்டிற்கு கொண்டு செல்லும் போது, அந்தப் பாடையின் ஒரு மூலையில் விடலைத் தன்மை உடைய ஒரு கோழிக் குஞ்சை தலை கீழாகக் கட்டித் தொங்க விடுவார்கள். மயானக் கரைக்கு பாடை சென்றதும் அந்தக் கோழிக் குஞ்சை வண்ணானிடம் கொடுத்து விடுவார்கள். அவன் அந்தக் கோழிக்குஞ்சை அங்கேயே கொன்று, இரத்தக் குறிகாட்டி விட்டு, இறந்து போன கோழிக்குஞ்சை தன் வீட்டிற்கு எடுத்துக் கொண்டு சென்று விடுவான்.

மனிதன் கடந்து வந்த பாதை நெடுகிலும் எத்தனை இரத்தம் சிந்தி இருக்கிறான் என்பதை எண்ணிப் பார்க்கும் போது நெஞ்சம் பதைக்கிறது' இன்னும் அந்த நிலைதானே தொடர்ந்து கொண்டிருக்கிறது...........



# எனது இலட்சியமே என்னை வழி நடத்தியது!

கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை

நான் பள்ளியில் படிக்கின்ற காலத்தில் தமிழையும் ஆங்கிலத்தையும் நன்றாக எழுதக்கூடிய மாணவனாக இருந்தேன். காலக்கிரமத்தில் ஆங்கிலத்தைவிட தமிழ் மொழியைக் கற்பதிலேயே எனக்கு உள்ளத்தில் கூடிய ஆர்வம் சுரந்தது.

அந்தக் காலத்தில் நவீன இலக்கியங்களான சிறுகதை, நாவல், நாடகம் புதுக்கவிதை, நூல்கள் தமிழ் மொழியில் மிகக் குறைவாகவே வெளியிடப்பட்டிருந்தன. வாசிப்பதற்கு அவற்றைப் பெறுவது மிகவும் கஷ்டம். நான் எனக்கு கிடைத்த நவீன இலக்கியங்கள் எல்லாவற்றையும் வாசித்தேன்.

ஆசிரியர்கள் எனது கட்டுரைகளுக்கு ''நன்று'' போட்டு ஊக்கமளித்தனர். அதனால் பத்திரிகைகளுக்கும் எழுதும் ஆர்வம் பிறந்தது. 1950 ஆம் ஆண்டில் நான் எழுதிய சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள் சுதந்திரன் வீரகேசரி பத்திரிகைகளில் பிரசுரமாயின. வருங்காலத்தில் நான் ஓர் எழுத்தாளன் ஆக வேண்டும் என்ற லட்சியம் அப்பொழுதே எனது உள்ளத்தில் உருவாயிற்று.

பின்பு நான் படித்து பல்கலைக்கழகம் சென்றேன். முதன் முதலில் இலங்கை மண்வாசனை நாடகத்தை எழுதிய பேராசிரியர் கணபதிப்பிள்ளையும் கலாநிதி வித்தியாநந்தனும் அப்பொழுது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இலங்கை நவீன நாடகத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். தங்களுடைய நாடகங்களில் நடிக்கும் வாய்ப்பை அவர்கள் எனக்கும் அளித்தனர். அதை ஒரு பெரும்பேறாகவே நான் கருதுகிறேன். அந்த அறிவைத் திறமையாக பயன்படுத்தும் ஆற்றல் எனக்கு இருக்கிறது என்பதை அறிந்தே இறைவன் அந்த வாய்ப்பை எனக்கு அளித்தான் என்று நம்புகிறேன். பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நான் நவீன நாடகத்தின் சிறப்பை அறிந்ததுடன், இலங்கை மண்வாசனை நாடகமே இலங்கையருக்கு உரிய நாடகம் என்ற முடிவுக்கும் வந்தேன்.

காலப்போக்கில் நவீன நாடகங்களை எழுதி, எனது நண்பர்களுடன் சேர்ந்து அராலியில் அரங்கேற்றியுள்ளேன். எங்கள் குழாமில் நல்ல திறமை மிக்க நண்பர்களும் இருந்தமை எனது பாக்கியமே. ஆனால் அவர்களுக்கு நாடகம் பற்றி ஒன்றும் தெரியாது. ''நான் பழக்குகிறேன். நீங்கள் நடியுங்கள்'' என்று கூறி அவர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி, அவர்களை நடிக்க வைத்தேன். முதல் நாடகத்துடனேயே அவர்களுக்கு நாடகத்தில் ஆர்வம் பிறந்து விட்டது. ''சுந்தரம்பிள்ளை மாஸ்ரர் நாடகம் எழுதுங்கோ, அரங்கேற்றுங்கோ'' என்று பிறகு அவர்களே என்னை உற்சாகப்படுத்தத் தொடங்கி விட்டனர். 1954 தொடக்கம் 1974 வரையான இருபது ஆண்டு காலப் பகுதியில் 25 நாடகங்களை எழுதி நடிப்பித்தேன். ஊரவர்களும் நாடகங்களைப்பார்த்து ஓரளவு ஆதரவளித்தனர்.

அதே நேரத்தில் நான் நாடகங்களைப் படித்தேன். தமிழ் மொழியில் போதிய நாடகங்கள் இல்லை. நாடகம் பற்றிய நூல்கள் அறவே இல்லை எனலாம். ஆங்கிலத்தில் அவை மலையாகக் குவிந்து கிடந்தன. யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் நாடகத்திற்கென ஒரு தனிப்பிரிவே இருந்தது. அதில் இருந்த பல நூல்களை வாசித்தேன். முழுவதையும் வாசித்து முடிப்பதற்கிடையில் நூலகத்தை எரித்து விட்டார்கள்.

நான் கற்று அறிந்தவை எல்லாவற்றையும் எனது நாடக அரங்கேற்றங்களில் பயன்படுத்தினேன் என்று சொல்ல முடியாது. எங்களது நாடக அரங்கேற்று மண்டபம் அராலி சரஸ்வதி வித்தியாசாலை. அது அப்பொழுது ஒரு பெரிய கொட்டில் பாடசாலை. அதில் இருந்த வசதிகள் எல்லாவற்றையும் நாங்கள் பயன்படுத்தினோம்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை முதன் முதலாக யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் நாடகங்களை எழுதி அரங்கேற்றிய பொழுது, அவற்றை கேலி செய்தவர்கள் பலர், பல்கலைக்கழகச் சமூகத்திலேயே இருந்தனர். சிலர் நாடகம் பற்றித் தெரியாமல், சிலர் மண்வாசனை நாடகம் என்றால் என்ன என்று புரியாமல், கேலி செய்தனர். சிலர் பிறர் அதில் நடிக்கிறோமே தாங்கள் நடிக்கவில்லையே என்ற பொறாமையில், சிலர் சும்மா பொழுது போக்காக, இப்பொழுது அதுவே இவர்களுக்குரிய நாடகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதை பார்க்க, அவர்களில் யாராவது இன்னும் உயிருடன் இருக்கிறார்களோ தெரியவில்லை. கூத்துக்களுக்குப் பழக்கப்பட்டிருந்த அராலி மக்களும் முதலில் எனது நாடகங்களைப் பார்த்துப் புருவங்களை உயர்த்தினர். ''இதுவா நாடகம்?''என்று கேட்டார்கள். (தொடரும்)

# மருத்துவத்துறையை உலுக்கும் போலிகளின் படையெடுப்பு

■ வலையவன்



**கா**ய்ச்சலா இருக்கு கூடவே தொண்டை வலியும் இருமலும் இருக்கு மருந்து கொடுங்க, என மருந்துக் கடைகளில் மக்கள் கேட்பதை பலமுறை கேட்டிருக்கிறோம். இப்படிக் கேட்டுப் பெற்றுக்கொள்ளும் மருந்துகளில் எத்தனை மருந்துகள் உண்மையானவை? எத்தனை மருந்துகள் போலியானவை? எனும் கேள்வியை எப்போதாவது நாம் எழுப்பியதுண்டா?

மேலை நாடுகளிலெல்லாம் மருத்துவரின் மருந்துச் சீட்டு இல்லையெனில் மருந்துக்கடைகளில் மருந்துகளைத் தரமாட்டார்கள். ஆனால் நமது நாட்டில் அப்படியில்லை எந்த நோயாய் இருந்தாலும் மருந்தகங்களில் இருப்பவர்களே மருத்துவர்களாகி ஏதேனும் பெயர் தெரியாத மாத்திரைகளைத் தந்து விடுகின்றனர். இவை உண்மையிலேயே பயனுள்ளவை தானா? உடலுக்கு நலமளிப்பவை தானா?

இது குறித்து உலக நலவாழ்வு நிறுவனம் சொல்லும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது. அதாவது உலக அளவில் புழக்கத்தில் உள்ள மருந்துகளில் சுமார் பதினைந்து முதல் இருபது விழுக்காடு மருந்துகள் போலியானவையே என அது அறிக்கை வெளியிட்டுள்ளது.

வளர்ந்த நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகளில் சுமார் ஒரு விழுக்காடு மட்டுமே போலி மருந்துகள் கலந்துள்ளன. ஆனால் வளரும் நாடுகளிலோ சுமார் இருபத்தைந்து முதல் முப்பது விழுக்காடு என இந்த புள்ளி விவரங்கள் மூர்ச்சையடையவைக்கின்றன.

வளரும் நாடுகளிலும், பின் தங்கிய நாடுகளிலுமே போலி மருந்துகளும், தரமற்ற தயாரிப்புகளும் அதிகமாய் தயாராவதாக உலக நலவாழ்வு நிறுவனம் எச்சரிக்கிறது. அதன் கூற்றை நிரூபிக்க புள்ளிவிவரக் கணக்குகளையும் சமர்ப்பிக்கின்றது.

உலக அளவில் பின் தங்கிய நாடுகளில் தயாராகும் மருந்துகளில் 25 விழுக்காடு மருந்துகள் போலியானவையாம்.

நைஜீரியாவிலும், பாகிஸ்தானிலும் தயாராகும் மருந்துகளில் நாற்பது முதல் ஐம்பது விழுக்காடு மருந்துகள் தரமற்ற மாற்றுமருந்துகள் எனவும், சீனாவில் சில மருந்துகள் சுமார் 85 விழுக்காடு போலியாய் இருப்பதாகவும், நைஜீரியா, தாய்லாந்து போன்ற நாடுகளில் சுமார் 37 விழுக்காடு ஆண்டிபயாடிக்ஸ் மருந்துகள் போலியே என்றும், ஆப்பிரிக்க நாடுகள் சிலவற்றில் உலவும் மலேரியா தடுப்பு மருந்துகளில் 90 விழுக்காடு போலியே என்றும் இந்த அதிர்ச்சிப்பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது.

உலகெங்கும் ஒவ்வோர் வினாடியும் சுமார் 35 லட்ச ரூபாய்க்கான போலி மருந்துகள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. இன்னும் ஐந்து ஆண்டுகளில் வினாடிக்கு சுமார் ஒரு கோடி ரூபாய்க்கான போலி மருந்துகள் விற்பனையாகலாம் என கணிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவல்கள் போதும் இந்தக் கள்ளச் சந்தையின் பலத்தைக் காட்ட!

இந்தியாவிலும் சுமார் 10 விழுக்காடு மருந்துகள் போலியானவையே என்பதே உலக நலவாழ்வு நிறுவனத்தின் அறிக்கை சொல்லும் செய்தி. ஆனால் உண்மையில் இது இந்த எண்ணிக்கையை விட பல மடங்கு அதிகமாய் இருக்கலாம் என கருதப்படுகிறது.

போலி மருந்துகள் என்பவை உண்மையான மருந்துகளைப் போல தயாரிக்கப்பட்டு, தரம் குறைந்ததாகவோ, தரமற்றதாகவோ, ஊறு விளைவிப்பதாகவோ இருக்கின்றன என்கிறது உலக நலவாழ்வு நிறுவனம்.

போலி மருந்துகளால் என்ன தான் பிரச்சினை?

முதலாவதாக இந்தப் போலி மருந்துகள் இலாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு தயாரிக்கப்படுவதால் இந்த மருந்துகளால் நோய் குணமாகும் வாய்ப்பு மிகவும் குறைவு

இரண்டாவதாக இந்தப் போலி மருந்துகளில் மருத்துவ மூலக்கூறுகள் தேவையான அளவில் இல்லாமல் இருப்பதால் குறைவாகவோ, அதிகமாகவோ உட்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படும். இது நோயின் வீரியம் அதிகரிக்கவோ, நோயாளிக்கு வேறு பக்க விளைவுகள் வரவோ வழி வகுக்கிறது.

மூன்றாவதாக இந்த மருந்துகளில் நிறைய விஷத்தன்மையுடைய பொருள்கள் கலந்திருப்பதால் இவை நோயாளியின் உயிருக்கே ஆபத்தாய் முடிகின்றன.

உதாரணமாக ஹெய்தியில் ஒருமுறை இருமல் மருந்து 80பேரைப் பலிவாங்கியது, சீனாவில் தயாரிக்கப்பட்ட இந்த மருந்தில் இருந்த டைஎத்தலின் கிளைகோல் எனும் வேதியல் பொருளே இதன் காரணம் என பின்னர் கண்டறியப்பட்டது.

நைஜீரியாவில் ஒருமுறை 2500 பேர் மரணம், வங்கதேசத்தில் 109 பேர் மரணம், இந்தியாவில் பல குழந்தைகள் மரணம் என இந்தத் துயரக் கணக்கு உலகெங்கும் விரிவடைகிறது.

சீனாவில் ஆண்டுதோறும் சுமார் மூன்று இலட்சம் பேர் தரம் குறைந்த போலி மாற்று மருந்துகளினால் உயிரிழப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இவையெல்லாம் இந்தப் போலி மருந்துகளால் சமூகத்திற்கு நேரக்கூடிய மிகப்பெரிய ஆபத்தின் சிறு சிறு துணிக்கைகள் எனக் கொள்ளலாம்.

பாலியல் சார்ந்த மருந்துகளை எடுத்துக்கொண்டால் புழக்கத்தில் உள்ளவற்றில் பெரும்பாலானவை போலி மருந்துகளே. ரகசியமாய் மருத்துவம் பார்க்க வேண்டும் எனும் மக்களின் எண்ணமும், பாலியல் கல்வி இல்லாத சூழலும், பாலியல் நோய் குறித்த விழிப்புணர்வு இல்லாததும் இத்தகைய தரமற்ற பாலியல் சார்ந்த மருந்துகளின் அசுர வளர்ச்சிக்கு வழிகோல்கின்றன. இத்தகைய மருந்துகளுக்கான விளம்பரங்களையும், உரையாடல்களையும் ஊடகங்கள் மிகைப்படுத்தி மக்கள் மத்தியில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றன, என்பதையும் இந்த நேரத்தில் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

இன்னொன்று எயிட்ஸ் போன்ற உயிர்க்கொல்லி நோய்கள். அங்கீகரிக்கப்பட்ட மருந்துகள் இல்லாத இத்தகைய பெரிய நோய்கள் போலி மருந்து தயாரிப்போருக்கு ஒரு வரமாய் மாறியிருக்கிறது. உலகமே மூளையைக் கசக்கும் எயிட்ஸ் நோய்க்கான மருந்தை நமது தெருக்கள் கூவிக்கூவி விற்கின்றன!

ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா, வட அமெரிக்கா என எல்லா கண்டங்களிலும் போலிகள் புகுந்திருந்தாலும், ஆசியக் கண்டம் தான் இந்த போலி மருந்துகளின் ஊற்றாய் இருக்கிறது என மேலை நாடுகள் குற்றம் சாட்டுகின்றன. சீனாவில் மட்டும் சுமார் 500 அனுமதியற்ற மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் இயங்கிக் கொண்டிருப்பதாக சில ஆண்டுகளுக்கு முன்பு அறிக்கை ஒன்று சுட்டிக் காட்டியிருந்தது.

தென்மேற்கு ஆசியாவிலுள்ள கம்போடியாவில் சுமார் 2800 போலி மருந்து விற்பனை நிலையங்களும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அங்கீகாரமற்ற மருந்துகளும் உலவுகின்றனவாம். தாய்லாந்தில் விற்கப்படும் மருந்துகளில் சுமார் 8.5 விழுக்காடு போலிதானாம்.

ஈராக்கின் மீது அமெரிக்கா போர்தொடுக்க ஆரம்பித்த பின் அங்கே சுமார் 70 விழுக்காடு மருந்துகள் காலாவதியானதாகவோ, தரமற்ற தயாரிப்பாகவோ, போலியானதாகவோ தான் கிடைப்பதாக ஈராக்கின் அமைச்சர் அதில் முஸின் தெரிவிக்கிறார்.

போலி மருந்துகள் இப்படி உலக நாடுகளையே ஒரு கலக்கு கலக்கிக் கொண்டிருக்கையில் இன்னொரு அச்சுறுத்தலாய் உலவுகின்றன தடை செய்யப்பட்ட மருந்துகள்.

இதிலுள்ள துயரம் என்னவென்றால் வெளிநாடுகளில் தடைசெய்யப்பட்ட மாத்திரைகள் ஏராளமாய், வெகு சகஜமாய் இந்தியாவில் கிடைக்கின்றன என்பது தான். இந்தியா தான் போலிகளின் புகலிடமாயிற்றே எங்கும் போலி எதிலும் போலி என்பது மருத்துவத்திலும் இரண்டறக் கலந்து விட்டது.

(தொடரும்...)



# கவிதையும் காலமும்

■ ஆனந்த்

*(கடந்தவாரத் தொடர்ச்சி..)*

**ஆ**னால் நிகழ் அனுபவத்தில் ''காலம்'' என்பது வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறாக உணரப்படுகிறது. துன்பமான ஒரு நிகழ்வு அனுபவமாக இருக்கும்போது காலம் மிகவும் மெதுவாக நகர்வதாகவும், இன்பமயமான அனுபவத்தின் போது காலம் மிகவும் விரைவாகப் பறந்து செல்வதாகவும் உணர்கிறோம். இன்பமான அனுபவத்தின் அமைப்பில் மாற்றம் ஏதும் நிகழாமல் போனாலும் சுவ. தனித்தனி அனுபவங்களின் அமைப்பு தனித்தனியானவையாக இருக்கின்றன.

இந்த விஷயங்களை எடுத்துக்காட்டுகளின் துணை கொண்டு விரிவாக விளக்கம் காணமுடியும். ஆனால் கவிதைக்கும் காலத்துக்கும் உள்ள உறவை ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாதலால் ''காலம்'' என்னும் பொருள் பற்றிய தனி ஆராய்ச்சிக்கும் இங்கே மேலும் அதிக கவனம் செலுத்த முடியாமல் இருக்கிறது.

நம் ஞாபகங்களை அலசிப்பார்த்தால் எந்த ஒரு நிகழ்வும் எந்த அனுபவமும் எங்கோ, எப்போதோ நடந்ததாகத்தான் இருக்கிறது. காலம் - இடம் என்னும் பின்னணி இல்லாத எந்த நிகழ்வும் இருக்கமுடியாது.

புற அனுபவமோ, உள் அனுபவமோ எதுவாயினும் சரி, கவிதைக்கு அனுபவம் என்பதே அடிப்படையாக இருக்கிறது. இதனால் காலம் என்பது கவிதையுடன் பிரிக்க முடியாத உறவு கொண்டதாக இருக்கிறது. காலத்துக்கும் கவிதைக்கும் இடையே உள்ள உறவு பல தளங்களில் இயக்கம் கொண்டிருக்கிறது. பல பரிமாணங்களில் இது நிகழ்கிறது. படிப்படியாக நாம் இவற்றைக் கவனிக்கலாம்.

முதலில் கவிஞன் மனதில் கவிதை எழும் அனுபவம் - ஒவ்வொரு கவிஞனுக்கும் கவிதையின் வெளிப்பாடு ஒவ்வொரு விதமாக அமையும் சிலருக்கு காட்சி ரூபமாகவும், சிலருக்கு நேரிடையாக வரிகளாகவும், சிலருக்கு ஆரம்பத்தில் வெறும் உணர்ச்சி ரூபமாகவும், இன்னும் பல்வேறு விதங்களிலும் கவிதை தோன்றக்கூடும். ஆனாலும் மனிதப் பிரக்ஞை பங்கு கொள்கின்றனர் என்பதாலும் கவிதையின் எழுச்சியின் அடிப்படையில், அதன் தோற்றத்தின் முறைபாடு ஒன்றாகவே இருக்க முடியும்.

இங்கு வேறு ஒரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். மனம் என்பதற்கு ஒரு தனிப்பட்ட உருவம் கிடையாது. ஆனால் எந்த ஒரு கணத்திலும் அந்தக் கணத்தின் அனுபவ அமைப்பின் உருவத்தை மனம் மேற்கொள்கிறது. ஒவ்வொரு அமைப்பும் ஒவ்வொரு ''காலம் - இடம்'' என்ற கட்டுக்கோப்பில் அமைந்திருக்கிறது. களிமண்ணுக்கு பிரத்யேகமான உருவம் என்று ஒன்று இல்லாதது போலவே, மனம் என்பதற்கும் குறிப்பிட்ட ஒரு உருவம் இல்லாமல் இருக்கிறது. களிமண் தேவைக்கு ஏற்றவாறு எந்த உருவத்தையும் எடுத்துக் கொள்வது போல் மனமும் வெவ்வேறு நிலைகளில் வெவ்வேறு உருவங்களை மேற்கொள்கிறது.

கவிதை எழும் மனத்தின் கட்டுக்கோப்பு பிரத்தியேகமான ஒரு அமைப்பாகும். பொதுப்படையான ''காலம் - இடம்'' அமைப்பு அங்கு இயங்குவதில்லை. காலையில் அலுவலகம் செல்ல நாம் பஸ்ஸில் ஏறும் மன அமைப்பில் நிகழ்வதில்லை கவிதையின் மலர்தல். அதன் காலம் - இடம் அமைப்பு முற்றிலும் வேறானது. சாதாரண அமைப்பில் இடமில்லாத பல பார்வை வீச்சுக்கள் இந்த அமைப்பில் நிகழ முடியும். கவிஞனின் பார்வை பொதுமனத்தின் கட்டுப்பாடுகளை மீறி சுவர்மையாக, ஆழமாக, நுட்பமாக, ஆக்கபூர்வமாக இயங்குவது இந்தக் காரணத்தினால்தான். அந்த மன அமைப்பில் அது ஆச்சரியமான ஒன்றல்ல. அதன் லாவகம் அந்த அமைப்பில் இயற்கையானதே.

அந்த அமைப்பில் காணும்போது உலகில் பொருள்களின் இடையே உள்ள தொடர்புகள் பொதுமன அமைப்பின் தொடர்புகளிலிருந்து வேறுபட்டவையாக இருக்கின்றன. இந்த உலகின் நீள, அகல, ஆழங்கள் வித்தியாசமானவை. புதிய பார்வைகளும் வீச்சுகளும் இதனால் சாத்தியமாகின்றன.

அடுத்ததாக, ஆக்கபூர்வமான அந்த மனத்தின் பார்வை ஒரு உருவம் பெறத் தொடங்குகிறது. பார்வையின் பொருள் சேர்கிறது. படிமங்களும் பிம்பங்களும் இயக்கம் கொள்கின்றன. இந்தப் படிமங்களும் பிம்பங்களும் காலம் காலமாக மனிதப் பிரக்ஞையில் சேர்ந்து உருவானவை. தனிமனித மனத்தைவிட அதிக கால நீட்சி கொண்டவை. தனிமனத்தின் வழியாக இயக்கமும் வெளிப்பாடும் கொண்டாலும் தனி மனித அமைப்பின் எல்லைகளுக்குள் அடங்காதவை அவை காலத்தின் சாரம். தனிமனிதப் பார்வையின் பின்னணி.

*(தொடரும்...)*

# ரிபு முனிவர்

ஓர் ஊரில் ரிபு என்ற முனிவர் ஒருவர் இருந்தார் .

அவருக்கு நிதாதர் என்பவர் சீடர்.

ஒரு சமயம் ரிபு முனிவர் வெளியே எங்கேயோ சென்றார். பின்னர் ஆயிரம் வருடங்கள் கழித்து திரும்பி வந்தார்.

''அது எப்படி ஆயிரம் வருடங்கள்?'' என்றெல்லாம் நாம் கேட்கக்கூடாது. இது புராணக்கதை. புராணங்களில் இப்படி சில நிகழ்ச்சிகள் உள்ளன.

ஆயிரம் வருடங்கள் கழித்து ரிபு முனிவர் திரும்பி வந்ததால், சீடர் நிதாதருக்கு தன் குருவை அடையாளம் தெரியவில்லை.

அதனால் அவர், 'யாரோ ஒரு பெரிய முனிவர் வந்திருக்கிறார்!' என்று நினைத்தார்.

''எனக்குப் பசியாக இருக்கிறது... சாப்பாடு போடு''என்றார் முனிவர்.

உடனே நிதாதர் தன் மனைவியிடம் கூறி சுவையாகச் சமைக்கச் சொன்னார்.

சமையல் தயாரானதும் முனிவரைச் சாப்பிடச் செய்தார்.

முனிவர் சாப்பிட்டு முடித்ததும், ''என்ன... திருப்தியாகச் சாப்பிட்டீர்களா?'' என்று நிதாதர் கேட்டார்.

முனிவர் நிமிர்ந்து பார்த்து, நான் எங்கே சாப்பிட்டேன்? எவனுக்குப் பசியோ அவன் தான் சாப்பிடுவான். அவனுக்குத் தானே திருப்தி ஏற்படும்!''என்று கூறினார்.

சீடருக்கு ஒன்றும் புரியவில்லை. குழம்பிப்போய் நின்றார். பரிதாபமாக முனிவரைப் பார்த்தார்.

முனிவர், ''இப்போது சாப்பிட்டது நான் இல்லை! என் உடல் தான் சாப்பிட்டது! அதனால் உடலுக்குத் தான் திருப்தியோ, அதிருப்தியோ ஏற்படும். நான் ஆன்மா, எனக்கு அதில் திருப்தியோ அதிருப்தியோ இல்லை!'' என்றார்.

உடனே அந்தச் சீடருக்கு, 'இவர் தான் நம் குரு ரிபு! என்ற உண்மை புரிந்துவிட்டது.

அவர் குருவின் கால்களில் விழுந்து வணங்கினார்.

அதன் பிறகு மீண்டும் அந்த குரு வெளியே கிளம்பிச் சென்று, ஆயிரம் வருடங்கள் கழித்து திரும்பவும் ஊருக்குள் வந்து கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் நிதாதர், தர்ப்பைப் புல் மூடையைத் தன் தலையில் வைத்துக் கொண்டு தெரு ஓரமாக நின்று கொண்டிருந்தார்.

அதைப் பார்த்த முனிவர் தன் சீடர் அருகில் சென்றார்.

இப்போதும் அந்தச் சீடருக்குத் தன் குருவை அடையாளம் தெரியவில்லை.

''ஏன் இப்படி தெரு ஓரமாக ஒதுங்கி நின்று கொண்டிருக்கிறாய்?'' என்று முனிவர் கேட்டார்.

''ராஜா யானை மீது அமர்ந்து பவனி வந்து கொண்டிருக்கிறார். அதைத்தான் இப்படி ஓரமாக நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்று சீடர் பதிலளித்தார்.

அதற்கு முனிவர், ''அது சரி... அதில் யார் ராஜா? எது யானை? '' என்று வினவினார்.

சீடர் ஆச்சரியத்துடன் முனிவரைத் திரும்பிப் பார்த்து, ''அதாவது, மேலே இருக்கிறாரே அவர் தான் ராஜா! கீழே இருக்கிறதே அது தான் யானை! என்று விளக்கம் கூறினார்.

''அது சரி... 'மேலே'என்று சொல்கிறாயே, அப்படியென்றால் என்ன? 'கீழே' என்று சொல்கிறாயே, அப்படி யென்றால் என்ன?'' என்று கேட்டார் முனிவர்.

அதைக் கேட்டதும் சீடருக்கு ஒரு மாதிரி ஆகிவிட்டது.


உடனே அவர் என்ன செய்தார் தெரியுமா?

அப்படியே ஒரே தாவாகத் தாவி, அந்த முனிவரின் தோள் மீது சென்று உட்கார்ந்து கொண்டு, ''மேலே என்றால் என்ன? கீழே என்றால் என்ன?' என்று தானே கேட்டீர்கள்?''இதோ நான் மேலே இருக்கிறேன். நீங்கள் கீழே இருக்கிறீர்கள்!'' என்றார்.

முனிவர் அப்போதும் விடவில்லை .

அடுத்த கேள்வியைக் கேட்டார்.

''அது சரி... நான் மேலே, நீ கீழே என்று சொல்கிறாயே நான் யார்? நீயார் ? என்று வினவினார்.



உடனே சீடர், தன் குருதான் வந்திருக்கிறார்!' என்று புரிந்து கொண்டார். குருவின் கால்களில் விழுந்து வணங்கினார்.

''அத்வைதம் என்றால் என்ன?'' என்பதை விளக்குவதற்காக அரசன் ரகுகுணனுக்கு ஜடபரதர் கூறிய கதை இது.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## பிறந்த குழந்தையை வீசி எறியலாமா?

அண்மைக்காலமாக யாழ். குடாநாட்டு பத்திரிகைகளில் அடிக்கடி வாசிக்கக் கூடிய செய்திகளில் முக்கியமாக சிசுக்கொலை, சிசு பற்றைக்குள் மீட்பு, வீசிவிட்டு போவது, மலசலகூட குழியில் புதைப்பு என்பன காணப்படுகின்றன.

பத்து மாதம் வயிற்றிலே சுமந்த பச்சிளம் குழந்தைகள் வீதியில் வீசிவிட்டுப் போகும் கழிவுப்பொருள்களாகி விட்டனவா? மனச்சாட்சி, மனிதநேயம், அன்பு, பாசம், எல்லாம் இறந்துவிட்டதா? இறைவா! பிள்ளை செல்வமே இல்லை என்று உனைநினைத்து காவடி, கற்பூரச்சட்டி, சிந்துநடைக் கூத்து என்று எத்தனை தாய் உள்ளங்கள் குழந்தைப் பாக்கியத்துக்கு தவமிருக்கும்போது, இப்படிப்பட்ட மனிதநேயம் இல்லாதவர்களுக்கு குழந்தைப் பாக்கியத்தைக் கொடுக்கின்றாயே.

ஐந்தறிவு படைத்த விலங்குகள் ட தமது குட்டி, கன்றுகளை ஈன்றெடுத்து பாதுகாப்பாக வளர்க்கின்றன. கல்லுக்குள்ளும் ஈரம் உண்டு என்று கவிஞனைப் பாட வைத்த இறைவா, இப்படிப்பட்ட தாயுள்ளங்களின் மனத்தை மாற்று.

தெரியாமல் தவறு நடப்பது இயல்பு. ஆனால் பாதிக்கப்படுவது பெண்கள் மட்டும் தான். தவறு செய்யும் ஆண்களை ஊரறிய நீதிதேவதையின் முன்நிறுத்தி அடையாளம் காட்டு. இந்தப் பூமியில் பிறக்கும் குழந்தைகளை வாழவிடு.

பாதிக்கப்பட்ட பெண்ணினமே எந்தவித தயவு தாட்சண்யமுமின்றி சட்டத்தின் முன் இப்படிப்பட்ட ஆண்களை நிறுத்துங்கள் . பெண்கள் மீது துன்பத்தை சுமத்திவிட்டு தப்பிக்கவிடாதீர்கள். இனிவரும் காலங்களிலாவது பெண்களாகிய நாம் விழிப்பாக இருப்போம். ஆண்டவன் படைத்த உயிர்களை பரிதாபமாக சாகடிக்காதிருப்போம்!

அ. புவனவதி
கறுக்காய்

## பஸ்களில் பயணிகளின் சிரமங்களை தவிர்க்க நடவடிக்கை எடுப்பார்களா?

இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் சேவையில் ஈடுபடுவது சீரின்மை காரணமாக நான் தினமும் தனியார் பஸ்ஸிலேயே பயணத்தை மேற்கொண்டு வருகிறேன். ஆனைக்கோட்டையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு 15 ரூபா கட்டணம் என அறிவிக்கப்பட்டபோதும் சில தனியார் பஸ்களில் கூடுதலாகக் கட்டணம் அறவிடுகிறார்கள். காரணம் கேட்டால் மீதி இல்லை எனச் சுலபமாகச் சொல்லிவிட்டு போய்விடுகிறார்கள்.

என்னைப் போன்று பலர் இந்தப்பிரச்சினையால் பாதிப்புற்றிருக்கிறார்கள். ஒரு நாளைக்கு 30 ரூபா பயணத்துக்காக செலவிடுவதைவிட மேலதிகமாக தினமும் பணத்தை இழக்க நேரிடுகிறது.

தனியார் பஸ்களில் ரிக்கெற் வழங்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டதை பத்திரிகைகள் மூலம் அறிந்தேன். ஆனால் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை. போக்குவரத்துப் பொலிசார் வீதிகளில் நின்றால் மட்டும் ரிக்கெற் புத்தகங்களை எடுத்து கைகளில் வைத்திருக்கிறார்கள் நடத்துநர்கள். அளவுக்கு அதிகமாக சனநெரிசலுடன் ஆள்களை ஏற்றி பணம் சம்பாதிப்பதிலேயே குறியாக இருக்கிறார்கள். மக்களின் நலன்களைக் கருத்தில் கொள்வதில்லை.

பெற்றோல் விலை உயர்வடைவதால் பஸ்கட்டணத்தை அதிகரிக்குமாறு கோரி போராட்டம் நடத்தும் இவர்கள், மக்களின் நலன்களைக் கருத்தில் கொள்ளவேண்டும். பஸ் கட்டணத்தை மட்டும் பயணத்துக்காக கொண்டு செல்லும் ஏழைகள் மீதிப்பணம் கிடைக்காவிட்டால் திரும்பி வருவதற்கு பஸ்கட்டணம் இல்லாமல் தவிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். இது தொடர்பாக தனியார் போக்குவரத்து சபையோ, பொலிஸாரோ நடவடிக்கை எடுப்பார்களா.

ஆனைக்கோட்டை வாசி

## மரங்களை வளர்ப்போம் மழையைப் பெறுவோம்

இயற்கையுடன் வாழ்வது சூழல் மாற்றத்துக்கு உள்ளாவதைத் தவிர்க்க முடியும் என்பதால் இயற்கை வளங்களை பேணிப் பாதுகாப்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். இயற்கை மாற்றத்தால் பல்வேறு வளர்ச்சியடைந்த நாடுக்ள் பெரும் இயற்கை அழிவுகளை சந்தித்து வருவதை காணக்கூடியதாக இருக்கிறது.

மழை இல்லாமையால் குளங்கள் வற்றி வறண்டுபோய் காட்சியளிக்கின்றன. இதனால் கால்நடைகள் குடிப்பதற்கு தண்ணீர் இன்றி வாடுகின்றன. கிணறுகள் வற்றி இருப்பதால் மக்களும் குடிதண்ணீர் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். கூடுதலாக வன்னிப் பிரதேசங்களில் தண்ணீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மழை இல்லாமையாலேயே குளங்கள் கிணறுகளில் நீர் வற்றிக் காணப்படுகின்றது.

மழை இல்லாமைக்கு நாமே காரணமாக அமைகின்றோம். அதாவது வீதி திருத்தப் பணி என்று வீதியின் அருகிலிருந்த பெரிய மரங்களை தறித்து வருகிறார்கள். காட்டு மரங்களை தறித்து வருகிறோம். இப்படியாக மரங்களை தறித்து வருவதால் மழை வீழ்ச்சி குறைவடையக் காரணமாக அமைகின்றது.

மரங்களை வளர்ப்போம், இயற்கையைப் பேணுவோம், இதன் மூலம் எமது வாழ்வை வளப்படுத்துவோம். பேச்சளவில்தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால் அதற்கான எந்த முயற்சியையும் எடுப்பதில்லை. தறித்த மரங்களுக்குப் பதிலாக இன்னொரு மரத்தை நட்டுவிடத் தவறிவிடுகிறோம். மரங்களை நடுவதன் மூலம் மழையைப் பெறமுடியும்.

விடுதலைப் புலிகள் இருந்த காலப்பகுதியில் மரங்கள் பாதுகாக்கப்பட்டு வந்தன. இப்பொழுது மரங்களைப் பாதுகாப்பதற்கான எந்த நடவடிக்கையையும் எவரும் எடுப்பதில்லை. இதனால் வன்னியில் பெரிய மரங்கள் தறிக்கப்பட்டு வருகின்றன.

மரங்களைத் தறிப்பதால் ஏற்படும் விளைவை எதிர்வரும் காலங்களில்தான் நாம் உணரவுள்ளோம். ஆகவே மரங்களைத் தறிக்கவிடாது தடுக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்மூடி இருக்காமல் செயற்பாட்டில் இறங்க வேண்டும். அப்பொழுதுதான் இந்த நாட்டில் மழையைப் பெற்று எமது வாழ்வை வளம்பெறச் செய்யமுடியும். இல்லாது போயினும் வெட்ட வெளியாக மாறும் நிலங்களில் மழை இல்லாமல் போகும் அவலத்தை யாராலும் தடுக்கமுடியாது.

இ.குமாரசாமி, அராலி

# பட்டுப்போன்ற கூந்தல் தரும் செம்பருத்தி





செம்பருத்தி இலையை அரைத்து தலைக்குத் தேய்த்து குளித்து வந்தால் முடி பட்டுப்போன்று மென்மையாக மாறிவிடும். பளபளப்புக் கூந்தலுக்கு ஷம்போ கதியென்று கிடக்கும் பெண்கள் அதற்கு மாற்றாக இதை பயன்படுத்தலாம். இதேபோல், 2 அல்லது 3 செம்பருத்திப் பூக்களை ஒரு டம்ளர் நீர்விட்டு காய்ச்சி வடிகட்டி எடுத்துக்கொண்டு அதனுடன் சிறிது சர்க்கரை சேர்த்து தினமும் குடித்து வந்தால் ரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் அளவு அதிகரிக்கும். உடலும் நன்கு ஆரோக்கியம் பெறும். தலைமுடி அடர்ந்து உறுதியாக செழிப்பாக வளர்வதற்கு செம் பருத்தி பூ உதவுகிறது. கூந்தலைச் சுத்தப்படுத்த செம்பருத்தி இலையை நைசாக அரைத்து தலைக்குப் பூசிக் குளிக்கலாம். இவ்வாறு தேய்த்துக் குளிப்பதால் முடி சுத்தமாவதுடன் பட்டுப்போலவும் பளபளக்கும். சிலருடைய தலையில் பொடுகு, பேன், ஈர் தொல்லைகள் அதிகமாக இருக்கும். இவர்கள் எவ்வளவுதான் மருந்துகள் ஷம்போக்கள் உபயோகித்துப் பார்த்தாலும் அவர்கள் முழுமையாக இந்த தொல்லையிலிருந்து விடுபடமுடிவதில்லை. இதற்கு அருமையான மருந்து செம்பருத்திதான் செம்பருத்தி பூவின் இதழ்களை அரைத்து தலையில் தேய்த்து குளித்து வந்தால் பேன் பொடுகு நீங்கும். செம்பருத்தி இதழ்களை நிழலில் உலர்த்தி எடுத்து வெந்தயப்பொடி கறிவேப்பிலைப்பொடி கலந்து எண்ணெயில் கொதிக்க வைத்து எடுத்து போத்தலால் அடைத்து வைத்து தினமும் தலைக்குத் தேய்த்து குளித்து வந்தால் தலைமுடி உதிர்தல் நீங்கி முடி நன்கு வளரும். செம்பருத்திப் பூக்களைப் பறித்துத் தலையில் வைத்துக் கட்டிக்கொண்டு இரவு படுத்துக் கொள்ளவும். இதுபோன்று மூன்று நான்கு தடவைகள் செய்தால் தலையிலுள்ள பேன்கள் ஒழிந்துவிடும்.

# சருமம் மின்ன அன்னாசி




அரைக் கரண்டி ஜாதிக்காயுடன் மாசிக்காய் மற்றும் அன்னாசிப் பழச்சாறை சம அளவு கலந்து முகத்தில் நன்றாகத் தேய்த்துக் கழுவுங்கள். உங்கள் சருமம் மின்ன ஆரம்பிக்கும். 2 கரண்டி தேங்காய்ப் பாலுடன் ஒரு கரண்டி அன்னாசிப் பழச்சாறு கலந்து ஒரு நாள் விட்டு ஒருநாள் முகத்தில் பூசிக் கழுவினால், முகம் ஜொலிக்கும்.

இரண்டு அன்னாசிப் பழத் துண்டுகளுடன் ஒரு முட்டையின் வெள்ளைக் கரு சேர்த்து ஒரு கரண்டி தேன் கலந்து நன்கு அடித்துக் கொள்ளுங்கள்.

இதனைக் கழுத்துப் பகுதியில் மேலிருந்து கீழாகப் பூசி 10 முதல் 15 நிமிடம் கழித்துக் கழுவினால்சுருக்கங்கள் மறைந்து சங்குபோல் மின்னும் கழுத்து.

# சருமத்தைப் பொலிவாக்கும் ஆவாரை



மஞ்சள் நிறத்தில் பூ பூக்கின்ற ஆவாரை நவக்கிரகங்களில் ஒருவரான குருவிற்கு உரிய மூலிகையாகும். ஆவாரையின் அனைத்து பாகங்களுக்குமே மருத்துவ குணம் உள்ளது. ஆவாரை இலை பூ, காய், பட்டை, வேர் இவை ஐந்தையும் அரைத்து அதில் 3 பங்கு எடுத்துக் கொள்ளவும்.

இதேபோல் கோரைக்கிழங்கு அரைத்து ஒரு பங்கு கிச்சிலி கிழங்கு அரைத்து ஒரு பங்கு கலந்து வைத்துக்கொண்டு தினமும் குளிக்கும்போது சோப்புக்குப் பதிலாக இதனை தேய்த்துக் குளித்துவர உடலில் ஏற்படும் கற்றாழை நாற்றம் தீரும்.

தேமல் சொறி போன்ற சரும பாதிப்பு இருப்பவர்களும் இதனைப் பயன்படுத்திக் குளிக்கலாம்.

இவ்வாறு குளித்து வர சருமம் புதுப்பொலிவு பெறும். ஆவாரை இலையுடன் பூவரச மர வேர்ப்பட்டை, சிறிது உப்புச் சேர்த்து அரைத்து அதை தண்ணீரில் கலந்து குளித்து வர உடலில் ஏற்படும் அரிப்பு குணமாகும்

# உடல் அழகை மெருகு ஏற்றும் குறிப்புகள்



ஒரு தேக்கரண்டி அரைத்த சந்தனத்தில் ஒரு தேக்கரண்டி தேங்காய் எண்ணெய் கலந்து சூடாக்கி உடலில் பூசி சிறிது நேரம் கழித்து இளம் சுடுநீரில் குளியுங்கள். அதற்கு மேல் சோப்புப் போடாமல் பயிற்றம் பருப்பு மாவு தேய்த்து குளித்தால் உடல் அழகில் மெருகு ஏறும்

★ துளசிச் சாறு தேங்காய் எண்ணெய் இரண்டும் கலந்து உடலில் தேய்த்துக் குளிக்கலாம்.


★ ஆலிவ் எண்ணெய் தேங்காய் எண்ணெய், பன்னீர் ஆகியவற்றை சம அளவு எடுத்து ஒன்றாக்கி அதில் ஐந்து துளி கிராம்பு எண்ணெய் கலந்து உடலில் தேய்த்து அரைமணி நேரம் கழித்து குளிக்கலாம்.

# பொடுகை விரட்ட வேம்பம்பூ



உப்பு கலக்காத வேப்பம்பூ 50 கிராம் 100 கிராம் தேங்காய் எண்ணெயில் போட்டு நன்கு காய்ச்ச வேண்டும். இளம் சூட்டுப் பதத்திற்கு ஆறியதும் வேப்பம் பூவுடன் சேர்த்து எண்ணெய்யை தலையில் நன்றாகத் தேய்த்து அரை மணிநேரம் ஊறிக் குளித்தால் பொடுகுப் பிரச்சினை தீரும். அதிகம் பொடுகு உள்ளவர்கள் வாரத்திற்கு ஒரு முறையோ இரண்டு முறையோ மூன்று வாரங்களோ குளித்தால் பொடுகு சுத்தமாக நீங்கி விடும்.

# குண்டு மஞ்சள் தரும் அழகு



குண்டு மஞ்சள் கிழங்கை அரைத்து முகத்தில் பூசி வர அழகு கூடும். எண்ணெய் வழியும் முகத்திற்கு நல்லது.

பாத வெடிப்பைக் குணப்படுத்த குண்டு மஞ்சள் கிழங்கை அரைத்துப் பூசலாம்.

உடலில் வளரும் அதிகப்படியான முடியைப் போக்க மஞ்சள் கிழங்கு உதவும். மஞ்சளைப் பூசியதும் எல்லா முடிகளும் உதிர்ந்துவிடும் என்று எதிர்பார்க்காதீர்கள் படிப்படியாக முடி உதிர்ந்து அதிகப்படியான முடி வளர்வதும் குறையும்.

குண்டு மஞ்சளை அரைத்து பெண்கள் அக்குள் பகுதிகளில் பூசி வர முடி வளர்வதுடன் துர்நாற்றமும் குறையும்.

வறண்ட சருமம் கொண்டவர்கள் மஞ்சளைப் பூசாமல் தவிர்ப்பதுதான் நல்லது. மஞ்சள் சருமத்தின் எண்ணெய்ப் பசையை நீக்கிவிடும்.